பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 12 ஞாயிற்றுக்கிழமை (24.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 90

# இனப்பிரச்சினை தீர்வுக்கு அமெரிக்கா இந்தியாவுடன் சேர்ந்து செயற்படும்

## ஐ.நா. அமைதிப்படை என்பது தொலைவில் உள்ளது என்கிறார் தூதுவர் ஓ.பிளேக்



கொழும்பு,பெப்ரவரி24

இலங்கையில் நீண்ட காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு - அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு - இந்தியாவுடன் அமெரிக்கா மிகவும் நெருக்கமாகச் சேர்ந்து செயற்படும்.

இந்த நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இந்தியா பல வழிகளில் முக்கியமான பங்காற்றி வருகிறது. அமெரிக்காவும் அதனுடன் சேர்ந்து - நெருக்கமாக உழைப்பதே பொருத்தமானதாக இருக்கும் என அமெரிக்கா கருதுகிறது.

இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறார் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்.

இலங்கையில் ஐ.நா. அமைதிப் படை தருவிக்கப்படுவதற்கு இங்கு அமைதியான நிலை இன்னும் உருவாகவில்லை. ஆகையால் அது மிகவும் தொலைவில் உள்ள, எய்தப்படமுடியாத ஒரு விடயமாகும் - என்றும் அமெரிக்கத் தூதுவர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கல்கிஸையில் பஸ்லில் குண்டுவெடிப்பு சமயோசிதத்தால் பேரிழப்புத் தவிர்ப்பு

### 18 பேர் காயமுற்றனர்

கொழும்பு, பெப். 24

கொழும்பு, கல்கிஸையில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தனியார் பஸ் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 18 பேர் காயமடைந்தனர்.


பெண் பயணி ஒருவரின் சமயோசிதத்தால் பெரும் இழப்புத் தவிர்க்கப்பட்டது.

சரியான நேரத்தில் குண்டுப் பொதி தொடர்பாக பயணி ஒருவர் சந்தேகம் வெளியிட்டதால் ஏற்படவிருந்த பெரியளவிலான உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மொரட்டுவவில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று முற்பகல் வந்து கொண்டிருந்த பஸ்ஸிலேயே இந்தக் குண்டு வெடித்துள்ளது.

பெண் பயணி ஒருவர் பெரிய பொதி ஒன்றை பஸ்ஸினுள்ளேயே விட்டுச் செல்வதை அவதானித்த பிறிதொரு பெண் பயணி குறிப்பிட்ட பொதி தொடர்பில் சந்தேகம் கொண்டார். அவர் அதுகுறித்து சாரதிக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

குறித்த அந்தப் பொதி யாருடையது என நடத்துநரால் கேட்கப்பட்டது. எனினும் குறிப்பிட்ட பொதிக்கு யாருமே உரிமை கோரவில்லை. ஆகையால் அது குண்டுப் பொதியாக இருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்தது. உடனடியாக சாரதி பஸ்ஸை கல்கிஸை சந்தியை அண்மித்த பகுதியில் நிறுத்தினார். பயணிகள் அனைவரும் பஸ்ஸில் இருந்து விரைந்து இறங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.



(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டிசுட்டானில் விமானக் குண்டுவீச்சு

வவுனியா,பெப்.24

ஸ்ரீலங்கா விமானப் படையினர் வன்னிப் பிரதேசத்தில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு, ஒட்டிசுட்டானுக்கு வடக்கே அமைந்திருந்த புலிகளின் இராணுவத் தளமே நேற்றைய தாக்குதலில் அழிக்கப்பட்டதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் நேற்று தாக்குதல்கள்

கொழும்பு,பெப்.24

மணலாறில் புலிகளின் முக்கிய தாக்குதல் மையம் மீது நேற்று சனிக்கிழமை படையினர் நடத்திய தாக்குதலில் புலிகளுக்கு பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தாக்குதலின் பின்னர் புலிகளின் எட்டு சடலங்களைப் படையினர் மீட்டுள்ளனர் என்றும் - ஆயுதங்கள் பலவும் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் - அறிவிக்கப்படுகிறது.

பதவியா வைத்தியசாலையில் வைக்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ராஜகிரிய பஸ்ஸில் பொதியால் கிலி!

கொழும்பு,பெப்.24

ராஜகிரியப் பகுதியில் பஸ் ஒன்றுக்குள் நேற்றுமாலை பொதி ஒன்று மீட்கப்பட்டதால் சிறிது நேரம் கிலியும் பதற்றமும் நிலவின.

நேற்றுமாலை 5 மணியளவில் கொழும்பு நோக்கிப் புறப்படவிருந்த பஸ் ஒன்றுக்குள் ஏறிய பயணி ஒருவர் பொதி ஒன்றை வைத்துவிட்டு இறங்கிச் சென்று விட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொது வைபவங்களில் பங்குபற்றுவதை தவிர்க்குமாறு அரசியல்வாதிகளுக்கு அறிவுறுத்து

கொழும்பு,பெப்.24

பொது வைபவங்கள், கொண்டாட்டங்களில் பங்குபற்றுவதை இயன்றவரை தவிர்த்துக்கொள்ளுமாறு, புலனாய்வுத் துறையினர் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு அறிவுறுத்தி உள்ளதாக அறிய வந்துள்ளது.

அதனால் பொது வைபவங்கள் மற்றும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் பின்னடித்து வருகிறார்கள்; நழுவுகிறார்கள்.

பொது வைபவங்களில் மட்டுமன்றி அரச ஏற்பாட்டில் நடைபெறும் திறப்பு விழாக்கள் உட்பட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்ளாது ஒதுங்கிக்கொண்டு ஏதோ ஒரு காரணத்தைக் கூறித் தவிர்த்துக் கொள்கிறார்கள்.

முக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு தேர்தல் ஏற்பாடுகளை ஐ.நா. விசேட பிரதிநிதி கேட்டறிந்தார்

மட்டக்களப்பு,பெப்.24

மட்டக்களப்பு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நீதியும் நியாயமுமாக நடைபெறுவதற்கான ஏற்பாடு நடைபெறுகின்றனவா என்பது குறித்து ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி அங்கொலா கனே அம்மையார் கேட்டறிந்தார்.

மட்டக்களப்புக்கு நேற்றுப் பிற்பகல் விஜயம் செய்த அவர் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் கலந்துரையாடினார்.

உள்ளூராட்சி சபைளுக்கான தேர்தல் ஏற்பாடுகள் குறித்து அவரிடம் கனே அம்மையாளர் கேட்டறிந்தார்.

எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் நீதியும் நியாயமுமான தேர்தலாக

(14ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கண்டுபிடிப்புக்கள் குறித்த கண்காட்சி: விழிப்புணர்வு நிகழ்வுகள் நாளை முதல்

யாழ்ப்பாணம், பெப்.24

புதிய கண்டுபிடிப்புகள், புதிய வழிமுறைகள் தொடர்பான கண்காட்சி இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங்குபடுத்தலில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் , 6 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியை ஒட்டி நாளை 25ஆம் திகதி தொடக்கம் 3 தினங்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இக் கருத்தரங்குகளை நடத்துவதற்கென ஆணைக்குழுவினர் யாழ்.வருகின்றனர்.

நாளை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் - நாளை மறுதினம் யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல்துறை விரிவுரை மண்டபத்திலும் - புதன்கிழமை நெல்லியடிமத்திய மகாவித்தியா லயத்திலும் காலை 9 மணிக்குகருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

நாளையும் புதன்கிழமையும் நடைபெறம் கருத்தரங்குகளுக்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் அதிபர், ஆர்வமுள்ள ஆசிரியர் ஒருவர், ஆர்வமுள்ள மாணவர்கள் இருவர் என நால்வர் அழைக்கப்பட்டுள்ளனர். ஆயினும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் ஆகியோரும் தமது அதிபரின் சிபாரிசுடன் பங்கு பற்றலாம். நாளை மறுதினம் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் கருத்தரங்கில் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல் லூரிகள் ஆகியவற்றின் விரிவுரையாளர்கள், மாணவர்கள் பங்குபற்றலாம்.

இக்கருத்தரங்குகளில் ஆர்வத்துடன் பங்குபற்றி புதியவற்றைக் கண்டுபிடிக்கும், புதிய வழிமுறைகளை புகுத்தும் கலாசாரமொன்றை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கவேண்டுமென யாழ். பல்கலைக் கழக பௌதிகவியல் துறைத் தலைவர் கலாநிதி நா.சிவயோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (202-111)

# மெய்வன்மைப் போட்டிகள்

நல்லூர் சென்.பெண்டிக்ற் றோ.க.த.க.வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு நடைபெற உள்ளது. பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியமலர் யோசப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பழைய மாணவரும் செலான் வங்கியின் உத்தியோகத்தருமான பி.ஜே.டில்சான் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (202)

* * * *

உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மை போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறஉள்ளது.

அதிபர் மா.மெய்யழகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார். (202)

(04ஆம் பக்கமும் பார்க்கவும்)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 ✱ 03 ✱ 1925



உதிர்வு 08 ✱ 03 ✱ 2007

### தம்பித்துரை நாகரத்தினம்

பண்பிலே தெய்வமாய்
பாசத்தின் திருவுருவாய்
வாழ்ந்த தெய்வமே!
எம்மோடு இல்லாமல்
எங்குதான் சென்றீர்களோ?

*114/14, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*பிரிவால் வாடும்*
குடும்பத்தினர்.

(71410)

## மரண அறிவித்தல்

### *சுப்பிரமணியம் பரமேஸ்வரி*



கரம்பொன் மேற்கை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமேஸ்வரி (22.02.2008) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சுந்தரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர்களாகிய சிற்றம்பலம், ராஜகோபால், கனகாம்பிகை ஆகியோரின் சகோதரியும் ஆனந்தீஸ்வரி (பிரான்ஸ்), சோமசுந்தரம், சிவகுருநாதன் (பிரான்ஸ்), வாகீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் அமரர் நடராஜா மற்றும் புஷ்பராணி, மகேஸ்வரி (பிரான்ஸ்), பூலோகநாதன் (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.03.2008 அன்று பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*64/2, வைமன் வீதி,*
*நல்லூர்.*

(71409)

தகவல்:
சு.சோமசுந்தரம் (மகன்)

# செயல்முறைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.24

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடாந்தம் நடத்தும் செயல் முறைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளில் நடைபெறவுள்ளன. சுமார் 275 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களுக் கான அனுமதி அட்டை கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(1)

# ஊர்காவற்றுறையில் புதிய மருந்தகம் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

ஊர்காவற்றுறையில் புதிதாக ஆயுள்வேத மத்திய மருந்தகம் ஒன்று நாளை திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கின்ரது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் சம்பிரதாய பூர்வமாக மருந்தகத்தை திறந்து வைக்கவிருக்கின்றார். (1)

## தேவை

எமது கடைக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை
1. கணக்காளர் 2. Salesmen(விற்பனையாளர்)
தொடர்பு: *சிறி ராமகிருஷ்ணன்,*
*9, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.*

## தேவை

கணணி ரைப்செட்டிங் மற்றும் கணனிசார் இதர வேலைகள் அனுபவமுள்ள பெண்கள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தகுதியானோர் தகுந்த ஆவணங்களுடன் இன்று (24.02.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 9 முதல் பி.ப. 2 மணி வரை நேரில் வரவும்.

*இல.233, பிறவுண் வீதி, நாவலர் சந்தி,*
*யாழ்ப்பாணம். 2227646*

(71413)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கடந்த வியாழக்கிழமை நெல்லியடியில் உள்ள எமது வர்த்தக நிலையத்துக்கு முன்பாக NPMJ 5377 இலக்கத்திற்கான ஆவத்ப்பத்திரங்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன (உரிமையாளர். என்.பிரதீபன். உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய்) உரியவர் எமது தொ.பே.யுடன் தொடர்பு கொண்டு பெற்றுச் செல்லவும்.

தொ.இல: 0212263432

## வேலை ஆள் தேவை

அனுபவமுள்ள வேலை ஆள்கள் தேவை
1) கணனி வேலை தெரிந்தவர்கள்
2) றபர் ஸ்டாம்ப் செய்யக்கூடியவர்கள்
3) ஸ்கிறீன் பிறின்டிங் வேலை தெரிந்தவர்கள்
4) லமினேசன் வேலை செய்யக்கூடியவர்கள்

உடன் நேரில் வரவும்.

*பிள்ளையார் அச்சகம்,*
*நல்லூர்.*

(#J551579)

## கோல்ட் கோயின் கோழித்தீன்

அதி விசேட முறையில் (போர்மிலா) தயாரிக்கப்பட்ட ISO 22000 தரச் சான்றிதழ் பெற்ற கோல்ட் கொயின் கோழித் தீவனங்களையும் மற்றும் கால்நடை தீவனம், மருந்து வகைகளையும் கோழிக் குஞ்சுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு
**சிற்றிபாம் ரேடர்ஸ்**
*ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.*

(71411)

## காரைநகர் பிரதேச சபை ஏலவிற்பனை

காரைநகர் பிரதேச சபையில் பின்வரும் பொருள் 04.03.2008 ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1.இரும்புப்பெட்டி - 01 (Iron Safe)

01) ஏலத்தில் பெற்றுக்கொள்பவர் உடனடியாக முழுப்பணத்தையும் செலுத்தி அன்றைய தினமே பொருளை அப்புறப்படுத்த வேண்டும்.

02) பொருளைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரங்களில் காரைநகர் பிரதேச சபையில் பார்வையிடலாம்.

03) ஏலவிற்பனைப் பெறுமதியோடு 15% பெறுமதி சேர் வரியும் சேர்த்துச் செலுத்த வேண்டும்.

இரா.லோகநாதன்
*செயலாளர்.*

*காரைநகர் பிரதேச சபை*
*காரைநகர்*
*25.02.2008*

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி ஆனந்தநடராசா மகேஸ்வரி*



தும்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஆனந்த நடராசா நேற்று (23.02.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற ஆனந்தநடராசாவின் அன்பு மனைவியும் தங்கேஸ்வரி, சிதம்பரநடராஜா (ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர், அநுராதபுரம் மத்திய கல்லூரி), இரத்தினேஸ்வரி, ஞானேஸ்வரி, விஜயலட்சுமி (வவுனியா), சிவகுமாரன், காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் சங்கரநாதன் (கனடா), கலாநிதி (வவுனியா), நந்தகுமார் (ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை), கனகசபை (கணக்காளர், உதயன் பத்திரிகை நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (சோதிடர்), ஜெயலட்சுமி, சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உதவி விவசாய பணிப்பாளர், JP), முருகையா (தும்பளை), முருகையா (Globel Agency post office, வவுனியா), விமலரட்ணம் (உப அதிபர், யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), வேதநாயகி (கனடா), பஞ்சலிங்கம் (உரிமையாளர், வேணுகா ரெக்ஸ், வவுனியா), செல்வராணி, தேவிகா ஆகியோரின் அன்பு மாமியும், ஆறுமுகதாஸ்-கலைவாணி (ஜேர்மனி), அரவிந்ததாஸ்-கேதீஸ்வரி (ஜேர்மனி), மோகனதாஸ்- துளசி (மன்னார்), சிவசக்தி (ஆசிரியை, யா/ புற்றளை மகா வித்தியாலயம்) - ஸ்ரீதரன் (சமுர்த்தி வங்கி, கரவெட்டி), தங்கேஸ்வரன் (ப.நோ. கூ.சங்கம், பருத்தித்துறை) - ரமணி (ஆசிரியை, யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலம்) Dr.கனகசுந்தரம் - Dr றஜிதா (மன்னார்), ஜெயானந்தன் - கயல்விழி (வவுனியா), காலஞ்சென்ற ஜெயகாந் மற்றும் ஜெயசக்தி (ஆசிரியை, ஞானசம்பந்தர் கலைமன்றம்), சுஜந்தினி - சந்திரதாஸ் (லண்டன்), சுஜந்தன் (பொறியியலாளர், கனடா) - சிவாஜினி (கனடா), கஜந்தன் (பொறியியலாளர், தேசிய நீர்வழங்கல் சபை, கொழும்பு) - சுதர்சினி (ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு), அஜந்தன் (கனடா), றமணன் - சசிரேகா (கனடா), ரமேஸ் (விவசாயபீடம், இறுதி வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), அபிராமி, காண்டீபன் (MIT, 1ஆம் வருடம், களனி பல்கலைக்கழகம்), சிந்திகா, சாளினி, சிவைதினி (கனடா), நிரஞ்சனி (வவுனியா), றம்ஜா, அனுஜா, தர்சன், தர்சனா, நிருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மற்றும் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீலர்வளவு,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*

தகவல்:
ஆ.கனகசபை
(மகன்)

### *கந்தையா சிவதாசன் (சிவா)*

(தலைவர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய் - செயலாளர், விவசாய சம்மேளனம், நீர்வேலி தெற்கு)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவதாசன் 18.02.2008 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் வரதலட்சுமி தம்பதியரின் மருமகனும் பிரேமலோஜினியின் அன்புக் கணவரும் கணலோஜன் (ஜேர்மனி), அமிருனா, ஹரிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குமரகுருபரன் (இந்தியா), நடனபாதம் (நவிண்டில்), கனகாம்பிகை (ஜேர்மனி), வரதராசான் (கனடா), சிவாம்பிகை (கனடா) கண்ணதாசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூதர்மடத்தடி,*
*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

(71417)

தகவல்:
குடும்பத்தினர்.

### *திருமதி கோகிலா சிவநாதன்*

(ஆசிரியை, கொழும்பு இந்துக்கல்லூரி, இரத்மலானை)

கொக்குவில் சம்பியன் லேனைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வதிவிடமாகவும் கொண்டிருந்த கோகிலா சிவநாதன் அவர்கள் 19.02.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவநாதனின் (ஆசிரியர், வனாத்தமுல்ல றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, பொறளை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவஞானராஜா சிங்கராஜர் (இலங்கை வங்கி முன்னாள் உத்தியோகத்தர்) - ருக்மணி அம்மாள் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கதிரவேலு கனகரத்தினம் (இராசையா - சுதுமலை) - பஞ்சரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் தேவசிகாமணி, உதயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வி க.சரஸ்வதியின் (ஓய்வு பெற்ற உப அதிபர், பெரியபுலம் மகா வித்தியாலயம்) பெறாமகளும் பராசக்தி, தங்கமணி ஆகியோரின் பேர்த்தியும் சோமசீலன், திலகவதி, ஜெகதீஸ்வரி, தர்மசேகரம், குலசிங்கம், துரைசிங்கம், தர்மசோதி (ஆசிரியை, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை), பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2008) ஞாயிறுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சுதுமலை இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்)


*மதவடி ஒழுங்கை,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*

(71415)

தகவல்:
திருமதி க.பஞ்சரத்தினம்
(மாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் சென்ற ஈழத்தமிழர்கள் சுயமுயற்சி கொண்டு முன்னேறுவதில் அதிக நாட்டம் காட்டுகின்றனர்



அகதிகள் தமக்கென அமைத்துக் கொண்ட குடியிருப்பில் ஒரு பகுதி.



தங்கள் முகாமுக்கு முன்னால் யாழ்ப்பாணத்துப் பெண்கள் இருவர்.

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ள நம்மக்களில் பலரும் இங்குள்ள முகாம்களில் உள்ள அகதிகளை போன்று கிடைக்கும் நிவாரணத்துடன் காலத்தை ஓட்டாது தமது. சுய முயற்சியால் முன்னேறத் துடிப்பவர்களாக காணப்படுகிறார்கள். அரசின் உதவி கணிசமான அளவில் கிடைத்தாலும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை வெளியிடங்களுக்குச் சென்று தொழில் செய்யக்கூடியதாக அரசு வழங்கியுள்ள சலுகைகளை இலங்கை



செய்யாறு முகாமில் அகதிகளால் அமைக்கப்பட்ட அங்காள பரமேஸ்வரி ஆலயம்.

அகதிக்ள் நல்ல முறையில் பயன்படுத்துகிறார்கள். இந்திய அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைய இந்தச் சலுகையினூடாக அகதிகள் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடிகின்றது.

முகாம்களில் தங்கியுள்ள பலர் மீன் வியாபாரம், விவசாயம் முதலியவற்றில் ஈடுபடுவதுடன் மற்றும் அயலில் உள்ள தொழிற்சாலைகளில் தொழில் செய்யவும் செல்கின்றனர். இவர்களது கடின உழைப்பு தொழில் கொள்வோரைப் பெரிதும் கவர்ந்திருப்பதால் அங்குள்ள தொழிலாளர்களை விட கூடுதலான ஊதியம் வழங்குகிறார்கள் என முகாமில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். இந்த மக்கள் சுயதொழில்களை தொடங்கக் கூடியதாக உதவிகளை முகாம்களில் உள்ள அதிகாரிகளும் மறுவாழ்வுத்துறை ஆணையமும் மனிதாபிமான அடிப்படையில் செயற்படுவதாகத் தெரிகிறது.

**25 மாவட்டங்களில் 117 முகாம்கள்**

அகதிகளின் மறுவாழ்வுக்கென தமிழகத்தின் 25 மாவட்டங்களில் 117 முகாம்கள் அமைந்துள்ளது. இதில் 19518 குடும்பங்களைச் சேர்ந்த 74,219 பேர்கள் உள்ளனர். அகதி முகாம்களில் தங்காமல் வெளியே வாழ்ந்து வருபவர்கள் 23,489 பேர்களாவர். முகாமில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பராமரிப்பு மறுவாழ்வுத்துறையைச் சேர்ந்தது. முகாம் தவிர்ந்த வெளியிடங்களில் தங்கியுள்ளவர்கள் அண்மையில் உள்ள காவல் நிலையத்தில் தங்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

முகாமிற்கு வெளியே வாழ்ந்து வருபவர்கள் வீடுகளை வாடகைக்கு எடுத்துத் தங்கியுள்ளனர். இவர்களுக்கு முகாம்களில் வசிப்பவர்களைப் போன்று பணக்கொடுப்பனவுகள் கிடையாது. இவர்கள் வெளிநாடுகளில் உள்ள தமது பிள்ளைகள் உறவினர்களின் உதவியுடன் வாழ்கிறார்கள்.

**அரசின் மாதாந்த கொடுப்பனவு**

முகாமில் இருக்கும் அகதி஌ுக்கு கணிசமான அளவில் அரசின் உதவிகள் உண்டு. மாதாந்தக் கொடுப்பனவாக குடும்பத் தலைவருக்கு ரூபா 400/- அடுத்த பெரியவர்களுக்கு ரூபா 288/- 12 வயதுக்குக்

## அரசாங்கம் உதவினாலும் அவர்களுக்குத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புப் போதாது

கீழான முதல் குழந் தைக்கு ரூபா 180/- அதையடுத்த குழந்தைகளுக்கு தலா ரூபா 90 வீத மும் வழங்குகிறது. மானிய விலையில் அரிசி தினசரி 400 கிராம், சிறிய வர்களுக்கு 8 வய துக்குக் கீழ் தினசரி 200 கிராமும் அவ்வப்போது இலவ்ச வேட்டி, சேலை, துவாய் என்பதையும் பாய், போர்வைகள், சமையல் பாத்திரங்கள் என்பனவும் வழங்கப்படுகின்றன. இந்த அகதிகளுக்கான அரிசி ஒரு கிலோ ஒன்று 57 சதவீதம் மாதம் ஒன்றிற்கு குடும்பத் தலைவருக்கு 12 கிலோ அரிசியும் 10 வயதுக்குக் கீழ்ப் பட்டவர்களுக்கு தலா 6 கிலோ அரிசியும் வழங்கப்படுகின்றது.

மண்ணெண்ணை உட்பட ஏனைய பொருள்களை அகதி கள் வெளிக் கடை களில் வாங்க முடியும். எனினும் குடும்பத்திற்கு 3 லீற்றர் மண்ணெண்ணை பணத்திற்கு வழங்கப்படுகிறது. திருவெண்ணா மலை செய்யாறு வட்டம் தவசி சிறப்பு முகாமில் உள்ளவர்களுக்கு மாதம் 10 லீற்றர் மண்ணெண்ணை வழங்கப்படுகிறது. தவசி முகாமில் உள்ளவர்களுக்கு கூடுதல் மண்ணெண்ணை கிடைக்க மாவட்டக் கலெக்டர் கோலப்பனின் முயற்சியே காரணம் என்கிறார்கள் அந்த முகாமில் உள்ளவர்கள்.

**குடிசை வசதி**

ஆரம்பத்தில் பெரிய கொட்டகைகளில் தங்கியிருந்த அகதிகள் தற்போது தனித் தனியான குடிசைகளில் வசிக்கிறார்கள். அநேகர் தமது வீடுகளை நல்ல முறை யில் அமைத்து பாதுகாப்பான முறையில் கட்டியுள்ளனர். அகதிகளுக்கு அரசு இலவசமாக மின் விநியோகம் செய்கிறது. தொலைக் காட்சிப் பெட்டிகளுடன் தமது பொழுதைக் கழிப்பவர்களும் உண்டு.

**அகதிப் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி**

கல்வியைப் பொறுத்தவரை தமது பிள்ளைகள் உயர்கல்வி பெறவேண்டும் என்பதில் பெற்றோர்களிடம் மிகுந்த அக்கறை காணப்படுகின்றது. 1996-2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழக முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி கல்வித் துறையில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உரிய சலுகைகளை வழங்கினார். அப்போது இட ஒதுக்கீட்டில் இலங்கைத்

## நிம்மதியாக வாழ்ந்தாலும் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்த முடியாத வாய்மூடி நிலைமை


தமிழ் அகதிகளுக்கு 20 சத வீத ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதை இடம் பெயர்ந்திருந்த இல்ங்கை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தியுள்ளனர். கூடுதலான மாணவர்கள் மருத்துவம், பொறியியல் துறைகளில் பயின்று வருகின்றனர். பாண்டிச்சேரி இந்திராகாந்தி மனை உட்பட சென்னையின் பல்வேறு மருத்துவ மனைகளிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் பணியாற்றுகிறார்கள்.

கலைஞருக்குப் பின்னர் முதலமைச்சராகப் பதவி வகித்த ஜெயலலிதா அகதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கல்வி குறித்த வசதிகளை முடக்கிய போதும் இன்று மீண்டும் சிறுவர்களுக்கான கல்வி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முன்னர் இலங்கை அகதி மாணவர்களிடம் ஜாதிச் சான்றிதழ் கோரப்பட்டது. தற்பொழுது இலங்கை மாணவர்களிடம் ஜாதிச் சான்றிதழ் கேட்கக்கூடாதென கல்வித்துறை அறிவித்திருப்பதாகவும் கல்வி அதிகாரிகள் அடிக்கடி முகாம்களுக்குவருகை தந்து தமது பிள்ளைகளின் கல்வி குறித்து கேட்டறிவதாகவும் பெற்றோர்கள் கூறு கிறார்கள். இலங்கை அகதிகளுக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள் என்பனவும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சுகாதாரம், குடி தண்ணீர் பிரச்சினை உண்டு.

கல்வி தொழில் அத்தியாவசிய உணவுப் பாவனைப் பொருள்கள் விடயத்தில் அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு கஷ்டங்கள் இல்லையெனினும் சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகளில் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன.

மலசல கூட வசதிகள் போது மானதாக இல்லை எனக்கூறும் அகதிகள் தண்ணீர்த்



புதுக்கோட்டை அகதி முகாம்.

தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளதெனினும் அவை உரியமுறையில் கவனிக்கப்படுவதில்லை என்கிறார்கள். சில முகாம்களில்

## இலங்கை அகதிகளுக்கு இடவசதி ஒதுக்கப்பட்டதால் மாணவர்கள் கல்வியில் முன்னேற அதிகவாய்ப்பு

குழாய்க் கிணறு உண்டு. எனினும் கூடுதலான அகதிகள் என்பதால் தமக்குத் தேவையான தண்ணீரைப் பெறமுடியாதிருப்பதாகக் கூறுகிறார்கள்.

மருத்துவ வசதிகளும் போதியதாக இல்லை. குடி தண்ணீர் மருத்துவம், சுகாதாரம், கல்வி போன்றவற்றைக் கவனிப்பதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரசாரம் செய்யும் அளவுக்கு அவர்களின் உதவிகள் கிடைப்பதில்லை என்பதும் அகதிகளின் குறை பாடாகும்.

அகதிகளின் நலன்களைக் கவனிப் பதற்கென அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் ADDRA OFERR,JRSS போன்றவை இயங்கி வருவதாகவும் இவை கல்வி, சுகாதாரம் போன்ற செயற்பாடுகளைக் கவனிப்பதாகவும் எனினும் இந்த அமைப்புக்கள் தம்மைப் பிரபல்யப் படுத்தும் அளவுக்கு அமைவாக அகதிகளுக்கு உதவுவதில்லை எனவும் மருத்துவச் செலவு கல்விக்கென கணிசமான பண உதவிகளை வழங்குவ தாகச் சொன்னாலும் மிகவும் சொற்ப அளவு கொடுப்பனவு களையே [illegible] வழங் குகிறது என வும் சொல்லப்படுகிறது. UNHCR மீள் குடியமர்வுகளுக்கு உதவு கிறது என அறிய முடி கிறது.



திருவண்ணாமலை வட்ட அகதி முகாம் ஒன்றில் அமைந்துள்ள வழிபாட்டுத் தலத்தில் வழிபாடு நடக்கும்போது

**கெடுபிடிகள் உண்டு**

இலங்கையில் இடம்பெறும் போரையடுத்து தற்சமயம் முகாம்களில் கெடுபிடிகள் உண்டு. அடிக்கடி சோதனைகள் இடம்பெறும். முகாம்களுக்கு வெளியார் செல்வதில் கட்டுப்பாடுகள் உண்டு. யார் வந்தார்கள், என்ன கதைக்கிறார்கள் என்பதையெல்லாம் நோட்டமிட்டு அதிகாரிகளுக்குக் கூறும் ஆள்கள் இருப்பதால் பெரும்பாலானவர்கள் தமது முகாம்கள குறித்து வெளியாருடன் கதைப்பதையும் புகைப்படம் எடுப்பதையும் கூடிய அளவு தவிர்த்து வருகிறார்கள்.

முகாம்களிலும் வெளியிடங்களிலும் தங்கியுள்ள தமிழ் அகதிகளைப் பொறுத்தவரை தமிழகத்தில் நிம்மதியாக வாழ்ந்தாலும் தமது உள்ளக் கிடக்கைகளை மனந்திறந்து பேசக்கூடிய நிலை முழுமையாக இல்லை என்றே கூறலாம்.

தமிழகத்திலிருந்து
- நம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாதுகாப்பு நலன்புரிச் சங்க அங்கத்தவர்
எட்வின் அரசரட்ணம் அவர்களின் தாயார்

**திருமதி டேவிட் தம்பிரட்ணம்**
**நீற்றா சின்னம்மா**

கடந்த 22.02.2008 அன்று இறைபதமெய்தினார். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது பாதுகாப்பு நலன்புரிச் சங்கத்தினர் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு நலன்புரிச்சங்கம், பாதுகாப்புப் பகுதி,
யாழ்.பல்கலைக்கழகம். (71399)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் நடராசா தங்கவேலு**

கடந்த 26.01.2008 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (25.02.2008) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சீரணிச்சந்தி,
பிரதேசசபை முன்பாக, சண்டிலிப்பாய். (71237) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை இராஜசூரியன்

சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கடந்த பத்து வருடங்களாக இடம்பெயர்ந்து சென்னையில் குடும்பத்துடன் வசித்து வந்தவருமான ஐயாத்துரை-இராஜசூரியன் கடந்த வியாழக்கிழமை (21.02.2008) இந்தியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஐயாத்துரை - இரத்தினம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற ஐ.விமலசூரியன்(ஓய்வூதியர்), கனகரத்தினம் - ராதாமணிமேகலை ஆகியோரின் அன்புச்சகோதரனும், ஸ்கந்தரூபன - கவிதா(U.K),இந்திரவேல் - அகிலா(U.K),கனகரத்தினம் - மடுபிரசாத் ஆகியோரின் அருமை மாமனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் செட்டியார் - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் இன்பரதியின் (சென்னை) பாசமிகு கணவரும், இ.சிறீரமணன்(U.K), சுவராஜ் - மந்தாகினி (U.K), இ.சிறீஇராகவன்(U.K), இ.சிறீஇராகுலன்(U.K), தாமகுமார் - மாதினி (ஜேர்மனி)ஆகியோரது நேசமிகு தந்தையும், சிறீரமணன் - நந்தினி(U.K), சுவராஜ்(U.K), தாமகுமார் (ஜேர்மனி), இ.விஜிதா (இந்தியா) ஆகியோரின் பிரியமாமனும், அரணன், சாரங்கன், அரங்கன், அருந்தினா, ஆரங்கன், ஆருதினி ஆகியோரது பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.02.2008) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. அரசரத்தினம்,J.P
(இளைப்பாறிய அதிபர்)
சங்குவேலி, மானிப்பாய்.

இல04, பெனியாகர்,
வலசரவாக்கம்,
சென்னை-87. T.P.00914424868932

## மெய்வன்மைப் போட்டிகள்

பருத்தித்துறை,பெப்.24

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி திக்கமுனை மைதானத்தில் அதிபர் ஏ.ஜெகநாதன் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி எஸ்.இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(202-218)

* * *

கரவெட்டி,பெப்.24

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப ஒரு மணிக்கு அதிபர் ப.சந்திரபாகு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) சி.புஷ்பலிங்கம் கலந்து கொள்வார்.

(202-70)

## தேவை

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஆண் லிகிதர் ஒருவர் தேவை. வயது 60இற்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது. சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் தரவும்.

**வெஸ்ரா மென்பானத் தொழிலகம்,**
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P. 0214591372

## ஆடு விற்பனைக்கு

சினையுடன் கூடிய ஜமுனாபாரி பால் ஆடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
96, அம்பலவாணர் வீதி, அத்தியடி.

## வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய வீடு செட்டித்தெரு நல்லூரில் உண்டு.
தொடர்பு:- 75/9, செட்டித்தெரு, நல்லூர்.
(நல்லூர் சுகாதார நிலைய ஒழுங்கை)

## தவறிவிட்டது

எரிபொருள் நிலைய நாள் கணக்குப் புத்தகம் உரும்பிராய் எரிபொருள் நிலையத்திற்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரும்பிராய் எரிபொருள் நிலையத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கிருஷ்ணா திருமணசேவை

T.சுப்பையா

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள். 1975 - B.Com எக்கவுண்டன், 1977 - மாஸ்ரர், 1976 - B.Sc, M.Sc செய்கிறார், 1972 - அவுஸ்ரேலியா எஞ்சினியர், 1975 - M.B.B.S Doctor 1973 - கடை (சிற்றிசன்) இன்னும் பல சாதகங்கள் இருக்கின்றன.

**"அன்னை இல்லம்"**
செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். T.P.2229032

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 24 |
| 11 | 02 |
| 1938 | 1994 |



**திருமதி யோகரத்தினம் சீவரத்தினம்**
(தங்கா)
திதி: 19.02.2008

நீங்கள் எம்மைவிட்டு மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

கணவர் - புலோலி தெற்கு.
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,
மஞ்சு இல்லம், துன்னாலை வடக்கு, கரவெட்டி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பரி.கன்னிமரியாள் ஆலயத்தின் சபைக்குருவானவரும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளருமான

**வண.ஜெபரத்தினம் ஜெயமோகன்**

அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றமை குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அவர் இன்னும் பல உயர்வுகளை அடைந்து நீண்டகாலம் இறைபணி செய்ய ஆண்டவரை வேண்டிக் கொள்கின்றோம். (71392)

பரி.கன்னி மரியாள் ஆலயம், கோப்பாய் மத்தி, கோப்பாய்.
கோப்பாய் அங்கிலிக்கன் சபை மக்கள்.

## மனதுருக்கத்தின் மாதிரியை இழந்துவிட்டோம்

'நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கை உள்ளவன் நீதி 14:32'

இலட்சக்கணக்கான மக்களின் இரட்சிப்புக்காக தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டவரும் ஆசியாவின் பிலிகிராம் என்று அழைக்கப்பட்டவரும் அநேக ஊழியர்களை எழுப்பினவருமான

**அன்பு அண்ணன் D.G.S. தினகரன்**

அவர்களுடைய வாழ்க்கைக்காக நாம் கர்த்தருக்கு நன்றி கூறுகிறோம். அவருடைய இறப்பு கிறிஸ்தவ உலகத்திற்கு உண்டான இழப்பு. அவருடைய பிரிவால் துயரப்படுகின்ற யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

அவரால் ஆசீர்வதிக்கப்பட்ட கல்வாரி குடும்பம்,
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்,
89, பிறவுண் வீதி, கொக்குவில்.


# Brown & Co. Ltd.

SHARP வழங்கும் ஜப்பானிய
உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய
SHARP Digital Photo Copiers



- ஒரு வருடம் அல்லது 50,000 பிரதிகளுக்கு உத்தரவாதம்.
- முதல் ஒரு வருடத்திற்கு மாதாந்தம் இலவச Sevices.
- இயந்திரத்துடன் 16000-18000 (A4) பிரதிகள் எடுக்கக்கூடிய Toner - 01, Developer - 01 என்பன இலவசம்.
- சிறப்புத் தேர்ச்சிமிக்க தொழில்நுட்ப வல்லுநர்களால் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படுவதால் விற்பனைக்குப் பிந்திய தரமான, நம்பிக்கையான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் என்றும் முன்னணியிலுள்ள ஒரே நிறுவனம். கவர்ச்சிகரமான வர்ண விளம்பரப் பலகை (Light Board) இலவசம்.

தொடர்புகளுக்கு: 021 222 4040
0777 585909
077 6623824

Brown & Co. Ltd.
கட்டிடம்
89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(70463)


## 6ஆம் மாத நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
14★08★1981

முருகனின் பாதத்தில்
31★08★2007



திதி: திருதியை

**அமரர் நடராசலிங்கம் சேமளன் (மயூரன்)**
(புடைவைக்கடை உரிமையாளர், சாவகச்சேரி)

நீர் எம்மை விட்டு விலகிய நேரங்கள் நாள்களாகி நாள்கள் மாதங்களாகி ஆறு மாதங்கள் கழிந்து விட்டன. உமது வாழ்ந்த நாளில் சிந்துஷன், மதுஷன் இருவரும் அப்பாவைக் காணாது வாடுகின்றனர் பூத்தமலராக இருக்க முடியாது வாடிய மலராகி விட்டனர். உங்கள் மனைவியோ உம்மைப் பிரிந்து வாழாது வாழ்கின்றார். அப்பா, அம்மா சகோதரர், சகோதரி, மருமக்கள், பெறாமக்கள் படும் வேதனையை எம் சொல்ல முடியாது. மாமன் மாமியர் துயர் சொல்ல முடியாது நீர்சென்ற தூரம் என்ன? எப்போ இனிக் காண்போம்?

தாய், தந்தை, சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள், மாமன், மாமி, மைத்துனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிருதங்கக் கலைஞர்களுக்கு இலகுவில் மனக்கட்டுப்பாடு வரும் அத்துடன் அவர்களின் நுண்ணறிவையும் அது பெருக்குகிறது

## பலருக்குக் கற்பித்து 27 மாணவருக்கு அரங்கேற்றம் கண்ட மிருதங்க வித்துவான் சு.ப.சின்னராசா சொல்கிறார்

**தமது மிருதங்கக் கலையைக் கற்பிக்கும் பணி மூலம் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கியதுடன் 27 மாணவர்கள் அரங்கேற்றம் காணவும் முன்னின்று உழைத்தவர் மிருதங்க வித்துவான் கலாபூஷணம் சு.ப.சின்ன ராசா அவர்கள். தமது 72ஆவது வயதிலும் மிருதங்கக் கலையை தளராது மாண வர்களுக்குக் கற்பித்து வருகிறார். அவரது அனுபவத்தை அறிவதற்காக உடுவில் இல்லத்தில் சந்தித்தோம்.**

*கேள்வி:* உங்களுக்கு மிருதங்கம் வாசிப்பதில் எவ்வாறு ஆர்வம் எற்பட்டது?

*பதில்:* எனது தந்தையார் சிறந்த இசை நாடகப் பிரியர். அதனால் சிறு வயதிலிருந்தே என்னை இந்தத்துறையில் ஈடுபடுத்தினார். நான் பாடசாலையில் கற்கின்ற காலத்திலேயே மிருதங்கம் வாசிக்கத் தொடங்கி விட்டேன்.

*கே:* நீங்கள் யாரிடம் மிருதங்கம் பயின்றீர்கள்?

*ப:* ஆரம்பத்தில் வட்டுக் கோட்டை தம்பிராசாவிடம் 2 வருடங்கள் கற்றேன். பின்னர் உலகப்புகழ் பெற்ற சங்கீத வித்துவானாகிய சிதம்பரம் ஏ.எஸ்.இராமநாதன் அவர்களிடம் 8 வருடங்கள் பயின்றேன். 1964 ஆம் ஆண்டு பிரபல சங்கீத வித்துவான் ஐயாக் கண்ணுத் தேசிகரின் தலைமையில் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் எனது அரங்கேற்றம் இடம்பெற்றது.

*கே:* இதுவரை எத்தனை சங்கீதக் கச் சேரிகளில் மிருதங்கம் வாசித்திருப்பீர்கள்?

*ப:* எத்தனை என்று எண்ணிக்கை நினைவில் இல்லாவிட்டாலும் பெருமளவு கச்சேரிகளில் வாசித்திருக்கின்றேன். ஒரு காலத்தில் எனது குருநாதர் ஏ.எஸ். இராமநாதனும் நானும்தான் ஈழத்தின் பெரும்பாலான கச்சேரிகளில் வாசித்திருக்கின்றோம். கீதாஞ்சலி வி.கே.நல்லையா, சாந்தினி சிவனேசன் போன்ற நடன ஆசிரியர்களின் நடன நிகழ்ச்சிகள் பலவற்றுக்கும்கூட வாசித்திருக்கின்றேன்.

*கே:* உங்களது கற்பித்தற் பணி பற்றிக் கூறுங்களேன்?

*ப:* கோப்பாய் ஆசிரிய கலாசாலை, இராமநாதன் நுண்கலைப்பீடம் என்பவற்றில் பகுதிநேர விரிவுரையாளராக இருந்துள்ளேன். மேலும் தெல்லிப்பழை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், இணுவில், மாவிட்டபுரம் முதலிய இடங்களிலுள்ள மன்றங்களிலும் மிருதங்கம் கற்பித்திருக்கின்றேன். எனது முதல் மாணவன் இணுவிலைச் சேர்ந்த அமரர் சங்கரசிவம். எனது 27 மாணவர்களை இதுவரை அரங்கேற்றம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனது மாணவர்கள் யாழ்ப்பாணத்திலே மட்டுமன்றி அமெரிக்கா, ஜேர்மன், பிரான்ஸ், கனடா முதலிய பல நாடுகளிலும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

*கே:* உங்களுடைய முன்னேற்றங்களுக்குக் காரணமாக அமைந்தவை எவை?

*ப:* எனது குருபக்தியும் விடாமுயற்சியுமே காரணங்களாக அமைந்தன என்றே கூறலாம்.

*கே:* உங்களது வாழ்க்கையில் நடைபெற்ற மறக்க முடியாத சம்பவம் என்று எதனைக் கூறுவீர்கள்?

*ப:* 1970ஆம் ஆண்டளவில் ஐயாக் கண்ணு தேசிகரின் மாணவரது கச்சேரிக்கு மிருதங்கம் வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த நிகழ்ச்சியின் ஒலிப்பதிவு நாடாவைத் தேசிகரின் வீட்டில் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த எனது குரு ஏ.எஸ். இராமநாதன் ''கை ரொம்ப சுத்தம்'' பையன் யாரு'' என்று தேசிகர் விசாரித்ததையும் எல்லாம் உங்கள் சீடன் சின்னராசாதான்'' என்று தேசிகர் கூறியதையும் மறக்க முடியாது.

*கே:* நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி....?

*ப:* வடஇலங்கை சங்கீத சபை எனக்கு 'மிருதங்கக் கலாவித்தகர்' என்னும் பட்டம் தந்துகௌரவித்தது. மருதனார்மடம் இராமநாதன் அக்கடமியில் பயின்று மிருதங்க சங்கீதரத்தினம் என்னும் பட்டத்தைப் பெற்றேன். 1998இல் எனக்குக் கலாபூஷணம் விருது கிடைத்தது.

*கே:* மிருதங்கம் வாசிக்கும் கலையைக் கற்பதால் ஏற்படும் நன்மைகள் எவை?

*ப:* மிருதங்கம் 'லயவாத்தியம்' என்றும் சொல்லப்படும். இங்கு மனதை ஓரிடத்தில் லயப்படுத்தி வாசிப்பதால் கற்பவர்களுக்கு மனக்கட்டுப்பாடு ஏற்படும். சிறந்த வித்துவான்களுக்கு வாசிக்கும் போது அவர்களது கற்பனைகளுக்கேற்ப மாற்றங்களை விளங்கிக்கொண்டு வாசிப்பதால் நுண்ணறிவு அதிகரிக்கும். உளவியல் அறிவும் ஏற்படும்.

கே.விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவாக 'எலக்ரோனிக் றம்', 'ஒக்ரபோட்' போன்ற இசைக்கருவிகளில் மிருதங்கத்தை வாசிக்கக்கூடிய நிலை தோன்றியுள்ளது. எதிர்காலத்தில் மிருதங்கத்தின் முக்கியத்துவம் எவ்வாறு இருக்குமென நினைக்கிறீர்கள்

*ப:* மிருதங்கம் வாசிப்பது புனிதமானதும் தனித் தன்மையானதுமாகும் சிவனின் நர்த்தனத்துக்கு நந்திபகவான் மிருதங்கம் வாசித்தபோது இந்தக் கலை தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது இன்றுவரை புனிதக் கலையாகவே பேணப் பட்டும் வந்துள்ளது எனவே இதற்கு நிகராக இன்னொன்றைச் சொல்ல முடியாது.

**ஒலிப்பேழைகளாக மூன்று இசைப்பாடல்கள்**

*கே.* நீங்கள் இயற்றிய இசைப் பாடல்கள் பற் றிக் கூறுங்கள்.



*ப:* விநாயகர் மேல் பல இசைப் பாடல்களை இயற்றி அவற்றை விநாயக மகத்துவம் என்ற நூலாக உரையுடன் வெளியிட்டுள்ளேன் இப்பாடல்களுக்கு இசை யமைத்துப் பக்திச்சுவை நிறைந்த ஒலிப் பேழையாகவும் உருவாக் கியுள்ளேன் நான் இயற்றிய அம்மன் பற்றிய பாடல்களில் ''அருள்மாரி பொழிகின்ற கருமாரி அம்மா'' என்பது புகழ் பெற்ற பாடாலாகும் அது தவிர 55 பல்லவிகள் அடங்கிய பல்லவி அமுதம் என்ற நூலையும் வெளியிட்டுள்ளேன். இந்நூல் இந்தியாவிலும் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

*கே:* இன்றைய இளைய தலைமுறையினருக்கு நீங்கள் கூறவிரும்பும் செய்தி என்ன?

ப: இளைஞர்களிடம் கலைஆர்வம் கலாசார பண்பாட்டுப் பேணுகை என்பன குறைவடைந்து செல்கின்றன. ஏதாவது ஒரு கலையைக் கற்பதன் மூலம் தமது மனதைப்பக்குவப்படுத்தி நல்ல முன்னேற்றத்தைக் காணமுடியும் என்பதே நான் சொல்லக்கூடிய செய்தியாகும். *

*செவ்வி கண்டவர்:-*
**ம.பா.மகாலிங்கசிவம்**

# 'சிங்களத்து மருத்துவிச்சி' சிறுகதைக்கு ஒரு விமர்சனம்

'நந்தி' என்ற புனை பெயரில் அமரர் டாக்டர் சிவஞானசுந்தரம் எழுதிய 'சிங்களத்து மருத்து விச்சி' என்ற சிறுகதை 17-12-2008 அன்று 'உதயனில்' வெளி வந்திருந்தது. இக்கதை 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ் இலக்கியம் தரம்-10, 11 பாடப் புத்தகத் திலும் இடம் பெற்றுள்ளமையால் அது பற்றிய விமர்சனம் ஒன்றை கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியுள்ளார். இது இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயனளிப்பதாய் இருக்கும் என்பதால் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

'சிங்களத்து மருத்துவிச்சி' என்ற சிறு கதையை எழுதியவர் 'நந்தி' என்று அழைக்கப்படும் டாக்டர் சிவஞானசுந்தரம். இன்று அமரராகி விட்ட நந்தி பலவகைப்பட்ட இலக்கியங்களையும் படைத்தவர்.

சிறுகதை எழுதுவதில் பல உத்திகள் உண்டு. 'நான்' என்று துவங்கி தன்மையில் நின்றும் கதை சொல்லலாம். எல்லாம் தெரிந்த நிலையில் நின்று, படர்க்கையில் இருந்தும் கதை சொல்லலாம். இந்தக் கதையை ஆசிரியர் 'நான்' என்று துவங்கி தன்மையில் நின்றே சொல்கிறார். ஒரு டாக்டரின் கண்ணோட்டத்தில் கதை எழுதப்பட்டுள்ளது. அவரே ஒரு டாக்டர் ஆனதினால் சொந்த அனுபவம் போலவே கதையைச் சொல்கிறார்.

கதை இதுதான்: ஹரப்திட்டியா என்ற கிராமப்புற ஆஸ்பத்திரியில், இருபது வயது இளம் பெண்ணான பொடிமெனிக்கா, முதல் பிரசவத்திற்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறாள். அவளுக்கு பிரசவ வேதனை தொடங்கி இரண்டு நாள்களாகியும் இன்னும் பிள்ளை பிறக்கவில்லை. பொடிமெனிக்கா பிரசவ வேதனையில் துடிக்கிறாள். இளம் டாக்டருக்கு அது முதலாவது 'கேஸ்'. எனவே அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 45 வயதுடைய அலிஸ்நோனா என்ற சிங்கள மருத்துவிச்சியும் அந்த அறையில் நிற்கின்றாள். டாக்டர் பதற்றத்தில் ''குழந்தையைக் கொன்று விட்டாய் போலிருக்கிறதே!'' என்று அலிஸ்நோனாவை ஏசுகிறார்.

''இல்லை மஹத்மயா, சற்று முன்னம் தான் கேட்டேன்; சிசுவின் இருதய ஒலி ஒழுங்காக இருக்கிறது'' என்றாள் அலிஸ்நோனா.

''நீ நேரத்துடனேயே என்னை அழைக்காதது பெரிய குற்றம்'' என்றார் டாக்டர்.

அலிஸ் மௌனமாக இருந்தாள். அவள் கண்கள் குளமென நிரம்பியிருந்தன.

டாக்டர் பொடிமெனிக்காவைப் பரிசோதித்து விட்டு, தூக்கமருந்து ஒன்றை ஊசி மூலம் அவளுக்கு ஏற்றினார். அவள் சிறிது நேரம் அமைதியாகப் படுத்திருக்கிறாள். ஆனால் அந்த அமைதி டாக்டரது மனநிலையை அதிகமாகக் கலக்கியது.

''பயம் வேண்டாம். குழந்தை பிறக்கும்'' என்று அலிஸ்நோனா பொடிமெனிக்காவிற்கும் டாக்டருக்கும் தைரியமூட்டினாள்.

தேவையான ஆயுதங்களை எடுத்து அலிஸ்நோனாவிடம் கொடுத்து, அவற்றை நீரில் நன்கு கொதிக்க வைத்துவிட்டுத் தன்னை அழைக்கும்படி கூறிவிட்டு, பக்கத்தில் இருந்த தன் பங்களாவிற்குப் போய், அலிஸ் நோனாவைக் கண்டித்து கடிதம் எழுதத் துவங்குகிறார் டாக்டர். அப்பொழுது அலிஸ் வந்து, ''குழந்தை பிறந்துவிட்டது'' என்று சொல்கிறாள். கதை முடிந்து விடுகிறது. ஒரு கிராமப்புற ஆஸ்பத்திரியில், ஒரு சில நிமிடங்களில் நடந்து முடியும் கதை!

'பொடிமெனிக்காவிற்குச் சுகப்பிரவசம் ஆகுமா' என்பதுதான் இக்கதை எழுப்புகிற கேள்வி. அந்த ஒரு பிரச்சினையைச் சுற்றியே கதை பின்னப்பட்டுள்ளது. கூடவே பிள்ளை உயிருடன் பிறக்குமா? பொடிமெனிக்கா உயிர் தப்பிப் பிழைப்பாளா? என்ற கேள்விகளும் எழுகின்றன. பொடிமெனிக்கா, டாக்டர், அலிஸ்நோனா ஆகிய மூவருக்கும் பயம், பதற்றம். அத்துடன் பொடிமெனிக்கா விற்கு வேதனையும் கூட. அந்தக் கதாபாத்திரங்களுக்கு மட்டுமா பயமும் பதற்றமும்? அந்த இழுப்பு விசை வாசகர்களாகிய எங்க ளுக்கும் வந்து விடுகிறது. பாத்திரங்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை எங்களுக்கும் ஏற்படுத்தி விடுகிறார் கதாசிரியர்! இது எழுத்தாளனது திறமைகளில் ஒன்று. நாங்களும் அப்பாத்திரங்களுடன் ஒன்றி நின்று போராடுகிறோம். இதைத்தான் சொல்வது ஒன்றிப்பு என்று. இந்தப் பாத்திர- வாசகர் ஒன்றிப்பு சிறுகதையை விட, நாடகத்தில்தான் மிகமிக அவசியம். அதில் பாத்திரங்களை மேடையிலும், வானொலியிலும், தொலைக்காட்சித் திரையிலும் நேரடியாகச் சந்திக்கிறோம் அல்லவா? இந்த ஒன்றிப்பு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நாடகத்தை நன்றாக இரசிப்போம். நவீன இலக்கியங்களில்தான் இந்த ஒன்றிப்பு சாத்தியப்படும். தங்களைப் போன்ற பாத்திரங்கள் மீதே வாசகர்கள் அனுதாபப்படுவர்.

இளம் டாக்டர் முதல் நியமனம். முதல் பிரவசமே சிக்கலாகி விடுகிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை. பதட்டத்தில் மருத்துவிச்சியை ஏசி விடுகிறார். அவள் கண்கலங்கி நிற்கின்றாள். டாக்டர் ஏசியதால் மட்டுமல்ல. பொடி மெனிக்காவின் பிரசவ வேதனையைப் பார்த்தும்தான். அவள் வந்து ''பிள்ளை பிறந்து விட்டது'' என்று சொன்ன பொழுது ''கடவுள் என்னைக் காப்பாற்றி விட்டார்'' என்று சொல்லி நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார் டாக்டர். ஆனால் அலிஸ் நோனா அதற்கு முன்பே ''பயப்பிட வேண்டாம். பிள்ளை பிறக்கும்'' என்று சொன்னவள், பொடி மெனிக்காவுக்கும் டாக்டருக்கும். அவளுக்குப் பதற்றம் குறைவு என்பது தெரிகிறது. அனுபவம்தான் காரணம். டாக்டரது மருத்துவப்படிப்பு அறிவை, அவளது அனுபவ அறிவு வென்று விடுகிறது.

### குணப்பண்புகள்

கதையில் பொடிமெனிக்கா, அலிஸ்நோனா, டாக்டர் என்ற மூன்ற பாத்திரங்களே வருகின்றன. டாக்டரும் அலிஸ்நோனாவும் மட்டுமே பேசுகிறார்கள். பொடி மெனிக்காவின் வேதனை அவர்களையும் விட உரத்துப்பேசுறது. அவளைச் சுற்றித்தானே கதை பின்னப்பட்டுள்ளது. இந்த மூன்றும் நம்பகத் தன்மை உள்ள பாத்திரங்களே. மூவரது குணப் பண்புகளும் நன்கு வெளிப்படுகின்றன. நம்பமுடியாத சம்பவங்கள் என்று எதுவும் இல்லை!

டாக்டர் பக்கத்தில் உள்ள தனது பங்களாவுக்குப் போய், அலிஸ்நோனாவிற்கு எதிராகக் கடிதம் எழுதத் தொடங்கியதுதான் சற்று உதைக்கிறது! கண்டனக்கடிதம் எழுதும் நேரமா அது? இயல்பாக இல்லை.

டாக்டர் அலிஸ்நோனாவை ஏசுவதும் அப்படித்தான். அந்த நேரத்தில் ஒரு டாக்டர் மருத்துவிச்சியைத் திட்டிக் கொண்டு நிற்கலாமா? அவளது ஒத்துழைப்பையும் பெற்று பிள்ளையைச் சுகமாகப் பிறப்பிக்க அல்லவா பார்க்க வேண்டும்? இளம் டாக்டர், பதட்டத்தில் அப்படிச் செய்துவிட்டார் என்று சமாதானம் சொல்வது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை.

அலிஸ் வந்து ''குழந்தை பிறந்துவிட்டது'' என்ற செய்தியைச் சொன்னதும் ''கடவுள் என்னைக் காப்பாற்றிவிட்டார்!'' என்று சொல்லி டாக்டரும் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார். வாசகர்களாகிய நாங்களும் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறோம். அத்தோடு கதை முடிந்துவிடுகிறது.

ஆசிரியர் வேண்டுமென்றே கதையை நீட்டுகிறார். அலிஸ் அனுபவ சாலியாக இருக்கலாம். ஆனால் நான் டாக்டர். ஆறாயிரம் கேசுகளுக்குப் பிறகும் அவள் மருத்து விச்சிதான். இந்தக் கவனக் குறைவுக்காக அவளைத் தண்டிக்கத்தான் வேண்டும் என்று, குற்றப்பத்திரிகை எழுதுகிறார். அவள் அனுபவசாலி. தனது வேலையைத் திறம்படச் செய்து வருகிறாள் என்று தெரிந் திருந்தும் தண்டிக்கத் தீர்மானிக்கிறார். இது அந்த டாக்டரின் ஆணவத்தையே காட்டு கிறது. இது ஒன்றும் அசாதாரணமான நிகழ்ச் சியோ, தீர்மானமோ இல்லைத் தான். ஆனால் இந்தச் செய்கை டாக்டரின் மதிப்பைக் குறைத்து விடுகிறது. கதையில் இன்னும் கொஞ்சம் விறு விறுப்பைக் கூட்டுவதற்காக ஆசிரியர் இந்தக் கடிதம் எழுதும் சம்பவத்தையும் சேர்த்திருக் கிறார் போலும்.

அலிஸ் தனது தகப்பனாரிடம் தான் பிரசவம் பார்க்கும் நுட்பங்களைக் கற்றுக் கொண்டாள் என்பதையும் அவள்தான் தன்னைப் பிறப்பித்தவள் என்பதையும் அறிந்த பொழுதுதான் டாக்டர் அவளை மன்னிக்கிறார். அலிஸ் அப்படியல்லாதவளாக இருந்தாலோ, அல்லது அது வேறு ஒரு மருத்துவிச்சியாக இருந்தாலோ, டாக்டர் அவளை மன்னிச் சிருக்க மாட்டாரோ?

இந்தக் கதையில் ஆசிரியர் கூறும் செய்தி என்ன? ஒர டாக்டரை விட ஒரு மருத்துவிச்சி அனுபவசாலியாக இருக்கலாம். திறமைசாலியாகவும் இருக்கலாம். நாங்கள், முக்கியமாக டாக்டர்கள் எதற்கும் பதற்றப்படக் கூடாது. எப்பொழுதும் நிதானமாக அமைதியாக இருக்க வேண்டும். அவசர முடிவுகளுக்கு வரக்கூடாது. எவரையும் அவசரப்பட்டுத் தண்டிக்கக் கூடாது. ஒவ்வொருவரிடத் திலும் ஒவ்வொரு திறமை இருக்கலாம். அவற்றை ஆராய்ந்தறிந்து மதிப்பளிக்க வேண்டும். இவைதான் இந்தக் கதையில் இருந்து நாம் பெறக்கூடிய பாடங்கள்!



கதையும் அழகாகவே எழுதப்பட்டுள்ளது. சிறுகதையின் அமைப்பைக் கொண்ட, விறு விறுப்பாக எழுதப் பட்ட, ஒரு நல்ல சிறுகதை!

*கலாபூசணம் அராலியூர்*
**ந.சுந்தரம்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை
## அதிபர் திரு.கந்தையா மயில்வாகனம் அவர்களின்
## (B.A, Dip in Edu., SLTS - I, SLPS - II)
# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும் 24.02.2008

### உன்னத சேவை புரிந்த அதிபர்

தென் மட்டுவில் பதியில் சிறந்து விளங்கும் பாடசாலையில் யா/மட்டு வில் தெற்கு பாடசாலையும் ஒன்றாகும். இப்பாடசாலையில் 1999ஆம் ஆண் டிலிருந்து 2008வரை மாணவரின் கல்வி வளர்ச்சிக்காகவும் பாடசாலை பௌதீக வளங் களைப் பெருக்குவதிலும் ஆர்வமுடன் செயற்பட்டவராவர். இவர் தனது ஓய் வுக் காலத்தில் தமது குடும்பத்தவருடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தித்து ஆசி கூறிவாழ்த்துகிறேன்.

- பிரம்ம ஸ்ரீ.ஐ.ஞானசர்மா

### ஆசிச்செய்தி

கந்தையா மயில்வாகனம் அவர்களின் மணிவிழா மலரில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை மகிழ்ச்சி அடைகின்றது. அதிபர் அவர்கள் 32 ஆண்டுகள் கல்விப் பணியில் தன்னை முழுமையாக அர்ப் பணித்தவர். கடைசி எட்டரை ஆண்டுகள் இப்பாடசாலையின் அதிபராக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக அதிக அக்கறையுடன் செயற்பட்ட ஒரு வரா வார். சிறந்த ஆசிரியருக்குரிய பண்புகளும் சமூகத்துடன் தொடர் புடைய சமூக சேவையாளருமாவார். ஓய்வு பெறும் அதிபர் ஓய்வுக் காலத்தில் இறைவனின் அருளால் அவரது குடும்பமும் நிறைவுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**வண.பொ.யோ.சூரியகுமார்,**
அமெரிக்கன் இலங்கைத் திருச்சபை, நுணாவில்.

### நலமுடன் வாழ இறையாசி வேண்டுகின்றேன்

கந்தையா மயில்வாகனம் அவர்கள் சிறந்ததொரு கல்விச் சேவையாளன். 1976 இல் தன்னை கல்வி உலகத்தில் இணைத்துக் கொண்ட சிறந்த ஆசிரிய ராகவும் பகுதித் தலைவராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி 24.02.2008 அன்று அகவை அறுபதை நிறைவு செய்து ஓய்வு பெற்றுச் செல்கிறார். இவ் வேளை யில் அதிபர் அவர்கள் தமிழ் மாணவர்களுக்காக விட்டுச் சென்ற கல்விச் சேவை யின் உயர்வை எண்ணி மனதில் புளகாங்கிதம் அடைவதோடு எமது கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பணிக்கு அவர் நல்கிய ஒத்துழைப்பை நினைத்து மனம் நிறைந்து நிற்கின்றேன். இனிமையான பேச்சும் நிறை குணமும் கொண்டு மாணவர்களின் உள்ளங்களில் மட்டுமன்றி எம் எல்லோரது மனங்களி லும் கூட வாழ்த்துக்குரியவராக இருந்தவர் இவராவார். ஓய்வுக் காலத்தில் சகல நலமும் பெற்று வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

''வாழ்க நலமுடன்''

திருமதி அ.வேதநாயகம்,
கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயம்.

### கடமையைச் சரிவரச் செய்பவர்

மணிவிழாக் காணும் நண்பர் மயில்வாகனத்தின் வைரவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிபராகவும் ஆசிரியராகவும் கடமையாற்றி 24.02.2008 இன்று ஓய்வு பெறும் க.மயில்வாகனம் எனது நீண்டகால நண்பர். நாவற்குழி ம.வித்தியால யத்தில் என்னுடன் கடமையாற்றியவர். தனது கடமையைச் சரியாகச் செய்ய வேண் டும் என்ற மனப்பாங்கு கொண்டவர். மற்றவருக்கு உதவுவதில் முன்னிற் பவர். அவரது சேவைக்காலத்தில் மட்டுவில் தெற்கு அமெரிக்கமிசன் தமிழ்க்கல வன் பாடசாலை நல்ல பௌதீக வளங்களைப் பெற்றுள்ளது. அது அவரது விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றியென்றே கூற வேண்டும். ஓய்வுபெறும் இவர் ஓய்வுகாலத்தில் தனது கல்விப் பணியைத் தொடரவும் தனது குடும்பத் தாருடன் எல்லா நலத்துடன் வாழவும் இறைவன் துணை நிற்க வேண்டு வதுடன் மணிவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

நா.சத்தியநாதன்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்), தென்மராட்சி.



| | |
|---|---|
| முழுப்பெயர் | : கந்தையா மயில்வாகனம் |
| பிறப்பு | : 1948.02.24 சாவகச்சேரி |
| ஆரம்பக் கல்வி | : யா/ஸ்ரீ கணேச வித்தியாசாலை, சாவகச்சேரி, |
| இடை நிலைக் கல்வி | : யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.,சாவகச்சேரி. |
| உயர்தரக்கல்வி | : யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.,சாவகச்சேரி. |
| உயர் கல்வி | : 1.பேராதனைப் பல்கலைக்கழகம் |
| | 2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| கல்வித் தகைமை | : கலைப்பட்டதாரி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா |

**சேவைக்கால விவரம்**

| | |
|---|---|
| ஆசிரியர் : | நு/புனித சவேரியார் கல்லூரி, நுவரேலியா 15.07.1976-31.08.1984 |
| | யா/நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி. 01.09.1984-28.02.1993 |
| | யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. 01.03.1993-21.04.1998 |
| பகுதித் தலைவர்: | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் கைதடி. 1986 - 1988 |
| பிரதி அதிபர்: | யா/நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி. 01.07.1988 - 01.05.1992 |
| அதிபர்: | யா/நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி. 01.05.1992 - 01.02.1993 |
| | யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி., கைதடி. 22.04.1998 - 30.04.1999 |
| | யா/மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, சாவகச்சேரி 01.05.1999 - 23.02.2008 |

### வாழ்த்துச் செய்தி

இன்று 24.02.2008 அன்று மணிவிழாக் காணும் க.மயில்வாகம் அவர் களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 15.07.1996 இல் இருந்து ஆசிரியராகக் கடமையாற்றி 20.04.1998 முதல் கடமை புரியும் அதிபராக யா/கைதடி முத்துக் குமாரசாமி மகா வித்தியாலயத்தில் கடமையேற்றார். பின்பு 01.05.1999 முதல் இன்றுவரை யா/ மட்டுவில் தெற்கு அ.மி. த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

இவர் தனது சேவைக் காலத்தில் நேரந்தவறாமை, கடமை,கண்ணியம், கட்டுப்பாடு, அர்ப்பணிப்புடன் பிரதிபலன் எதிர்பாராது கல்விச் சமூகத்திக்கு ஆற்றிய சேவை என்றும் மறக்கமுடியாது.அவர் தனது ஓய்வுக்காலத்தில் எல்லா வளமும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

கு.பிரேமகாந்தன்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர், (நிர்வாகம்), தென்மராட்சி.

### சிறந்த வழிகாட்டி, நிர்வாகி

அகவை அறுபதைக் கொண்டாடும் எனதருமை நண்பர் திருவாளர் கந் தையா மயில்வாகனத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உளம் மகிழ்கின்றேன். இந்த வேளையில் மயில்வாகனத்துடன் பழகிய நாள்களை மீட்டுப் பார்க்கின்றேன்.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வழி காட்டுவது கல்வி. அத்தகைய கல்வியை நல்லமுறையில் கற்று அதனூடாகப் பெற்ற அறிவை மாணவப் பரம் பரைக்குக் கடத்திய ஒரு சிறந்த ஆசான். தனது சேவையின் திறத்தை மேலும் மெருகூட்டும் வகையில் அவரது அதிபர் பணி அமைந்தது. தான் சார்ந்த கல் லூரியின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் அர்ப்பண சேவையாற்றியுள்ளார். தனது பணியில் இறுதிவரை தமது ஊர் பாடசாலையான யா/மட்டுவில் தெற்கு அ.மி. த.க பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சியிலும் மாணவர் வளர்ச்சியிலும் அக்கறையுடன் செயற்பட்டு வந்துள்ளார்.

க.மயில்வாகனம் அவர்கள் ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்குபவ ராகச் சிறந்த வழிகாட்டியாக அவர்கள் மனதில் இடம்பிடித்த ஒருவர் சிறந்த நிர்வாகி. மனித நேயமுடைய ஒரு பண்பாளர். தமது மாணவர், நண்பர், அய லவர் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர். இத்தகைய குணாம்சங்கள் கொண்ட எனது சகபாடியும் நண்பருமான மயில்வாகனத்தின் மணிவிழா நிகழ்வு சிறப்புற நடக்கவும் அவரது வாழ்வு வளமுடன் அமையவும் எனது வாழ்த் துக்களைத் தெரிவித்து கொள்கின்றேன்.

J.முத்துக்குமாரசாமி,
அதிபர், C/Hindu College, Colombo.

### பாடசாலையை நேசித்த பண்பான அதிபர்

யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். எட்டரை ஆண்டு காலம் இவரது உன்னதபணி ஒருவராலும் மறக்க முடியாத ஒன்றாகும். 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வின்போது பாட சாலை ஆவணங்களைப் பேணிப் பாதுகாத்து வந்தமை, தென்மராட்சிப் பிரதே சத்தில் முதன்முதலாக மீளவும் பாடசாலை ஆரம்பிப்பதற்கு அரும்பாடுபட்டமை, பாடசாலை புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு முன்னின்று உழைத்து பாட சாலைக்கென்று விளையாட்டு மைதானம் பெற்றமை, கல்வி வளர்ச்சிக்கு பாடு பட்டமை எம்மால் மறக்க முடியாத ஒன்றாகும். அவரது ஓய்வுக்காலத்தில் நீண்ட ஆயுள், குறைவற்ற செல்வம் நிறைந்த மகிழ்ச்சியுடன், குடும்பத்தாரு டன் இனிது வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்குழாம்,
மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.


## முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி

திறந்த பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் பயிற்சிகள் வழங்கப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

காலம்: 6 மாதம்
இடம்: Holy Cross Pre- School
102A, Main St., Jaffna.
ஆரம்பம்: 08.03.2008 காலை 8.30 மணி

எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் O/L சித்தி பெற்ற வர்கள் உங்கள் விண்ணப்பப்படிவத்தையும், கைநூலையும் ரூபா 200/= செலுத்திமேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

நிர்வாகிகள்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தது 1kg 590/=

தொடர்பு: சிவகுமார் பாம்,
கல்வியங்காட்டுச் சந்தி.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள் தின மும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில பெற் றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
(71370) 19, முருகேசர் லேன், நல்லூர்.

## MATHAN ELECTRONICS

- சகலவிதமான TVகளும் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.
- Sony TV கள் 21" KV 2183, KV 2184, KV 2185, G 21 போன்றன விற்பனைக்கு உண்டு (ஒரு வருட உத்தரவாதம் வழங்கப்படும்)

மதன் எலக்ரோனிக்ஸ், சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.
தொ.பே. 0776699623, 0776571156.

## இந்தியாவில் பிரிந்தாவன் கல்லூரியில் படியுங்கள்

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

உயர் தரம் A/L 2 சித்திகளுடன்

பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன

SMS 011 - 4520270 Name & Address for details
Contact: 0777 317043
Company Secretarial Services (Pvt) Ltd.

## IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 28.02.2008
பிரிவு II : 01.03.2008 } பகல் 10.00 மணி

பிரத்தியேக Online வகுப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

Head Office: # 209, மானிப்பாய் வீதி,
T.P 021 222 8060
Branches: • ஞ.ம.ம.வி வீதி, நெல்லியடி,
• சங்கத்தானை, சாவகச்சேரி.

## STUDY IN UK — WALK IN INTERVIEW for Newcastle College
(No 1 Government College)
on 27th at Queens Hotel (Kandy)
28th & 29th in Colombo



Interview by: Mr. Philip Savery
(International Oparation Manager)

**MBA with One Year Work Permit** June 2008

The University of Wales International MBA is a highly valued Masters Degree qualification. It is internationally recognized and respected and suitable for business practitioners who wish to build upon and develop relevant management, organizational knowledge and skills.

**"Diploma in international Hospitality Management"** April 2008

The course has been designed specifically for international students who are aged 18+ and have ambition to work at managerial level in a catering operation e.g. Hotel, bar conference and banqueting centre or restaurant .

**Now A/L in 12 months**

Join Newcastle College's unique 12 month A Level programme this June 2008 and you will benefit from:

A variety of courses: Maths/ Physics/ Chemistry/ Biology/ Economics/ Business Studies/ Accounting...

For further information contact: "We are the main official agent"

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS
COLOMBO BUSINESS COLLEGE
379-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06
Tel: 0114-518580, 011-2362052 FAX:0114-519130
Mobile: 071-4550055(K.IBRAHIM)
(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)

## STUDY IN UK — WALK IN INTERVIEW
Newcastle College
(No 1 Government College)
on 27th at Queens Hotel (Kandy)
28th & 29th in Colombo

Interview by: Mr. Philip Savery
(International Oparation Manager)



April/June 2008 Intake

Basic Qualification G.C.E.(O/L)

- Study in No. 01 Government College in UK
- Limited students for select the interview. (Please immediately Reserve your Admission)
- Immediate Admission for selected students.
- Part time jobs
- Easy payment accommodation.
- Loan Facilities can be arrange with one week
- Air Ticket 15% Discounts

We are pioneer key agent for the Newcastle College.

Best Performing College in the UK

Approved by Foreign Colleges & Universities

COURSES AVAILABLE IN ANY FIELD
- Aerospace Engineering
- Air Port & Air line Management
- Art & Design
- Business Management
- Beauty Therapy
- BBA - MBA
- Bsc Degree Bio Technology
- Cabin Crew
- Call Center Management
- Culinary Arts
- Computer System Engineering
- Computing & Multimedia
- Electrical / Electronic Engineering
- Hospitality Management
- Information Technology
- Mechanical Engineering
- Management & IT
- Network & Security Technology
- Nursing & Teaching Diploma
- Pre Masters / MBA
- Travel & Tourism Management
- Quality Management

Many more courses available

Higher Education in Cricket Coaching at Durham Cricket Academy
Higher Education in Football Coaching

For further information contact:
PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS
COLOMBO BUSINESS COLLEGE
379-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06
Tel: 0114-518580, 011-2362052 FAX:0114-519130
Mobile: 071-4550055(K.IBRAHIM)
(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் கூட்டணி அரசுக்கு முயற்சி; நிலைமையைக் குழப்பும் முஷராப்பின் மிரட்டல்!

## பிரதமராகும் வாய்ப்பு பாஹிமுக்கே அதிகம்

பாகிஸ்தானில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற தேர்தலில் இரு பிரதான கட்சிகள் பெரும் வெற்றி பெற்றுள்ளன. தேர்தலின் அடுத்த நிலை யான யார் ஆட்சி அமைப்பர் என்பது குறித்து பாகிஸ்தானியர் மட்டுமல்லாது உலக மக்கள் அனைவருமே பெரும் ஆர்வத்துடன் எதிர்த்துக் கொண்டிருக்கின்றனர். பாரிய வன்முறைகள், தேர்தல் மோசடிகள் மத்தியில் தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

அதிக இடங்களில் வெற்றி பெற்ற பாகிஸ் தான் மக்கள் கட்சியும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்)கட்சியும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைப்பது குறித்து பேச்சு நடத்தி வருகின்றன. பாகிஸ்தான் மக்கள் கட்சி இணைத் தலைவர் அஸிப் அலி ஜர்தாரியும் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப்பும் கடந்த வியாழக் கிழமை இரவு இது குறித்து சந்தித்துப் பேசினர்.

நவாஸ் ஷெரிப்புடன் கூட்டுச் சேரக்கூடாது என்று ஜர்தாரிக்கு அதிபர் முஷாரப் தரப்பில் இருந்து மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் கூட்டணி ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்பட் டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் அஸிப் அலி ஜர்தாரி மீது 10 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட ஊழல் வழக்குகளை மீண்டும் நடத்துவோம் என்று அதிபர் முஷாரப் தரப்பில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

நவாஸ் ஷெரிப்புடன் கூட்டணி வேண்டாம். தனது ஆதரவு பெற்ற பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (க்யூ) கட்சி மற்றும் பிற கட்சிகளை இணைத்து ஆட்சி அமைக்க வேண்டும். அரசாங்கத்தை நடத்துவதில் தன்னுடன் இணக்கமாகச் செயல்பட வேண்டும் என்று ஜர்தாரிக்கு முஷாரப் நிபந்தனை விதித்துள்ளார்.

இதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஜர்தாரி மற்றும் படுகொலை செய்யப்பட்ட அவரது மனைவி பெனாசீர் மீதான சுவிஸ் வங்கி ஊழல் வழக்குக்கு மீண்டும் உயிர் கொடுக்கப்படும் என்று முஷாரப் தரப்பில் இருந்து மிரட்டப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெனாசீரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 87 இடங்களில் வெற்றி பெற்று முதலிடத்தில் உள்ளது. அதையடுத்து முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லீம் லீக் (என்) 66 இடங்களில் வென்று இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்த இரு கட்சிகளும் இணைந்து கூட்டணி



முஷாரப் | ஜர்தாரி | நவாஸ் ஷெரிப்

அமைப்பது குறித்து நடத்திய சந்திப்பில் பதவி நீக்கம் செய்யப்பட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகளை மீண்டும் பணி நியமனம் செய்வது, முஷாரப்புக்கு எதிராக கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து பதவி நீக்கம் செய்வது ஆகிய இரு பிரச்சினை களும் முக்கிய இடத்தைப் பிடித்தன.

இந்த இரு பிரச்சினைகளிலும் இரு தலைவர் களும் வெவ்வேறான கருத்துக்களைக் கொண் டுள்ளனர். நீதித்துறை சுகந்திரமாகச் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஜர்தாரி பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பணி நியமனம் செய்யும் விடயத்தில் பிடி கொடுக் காமல் பேசி வருகிறார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை பணியில் சேர்ப்பது குறித்து நாடாளுமன்றம் தான் முடிவு செய்யவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

ஆனால் இந்த இரு விடயங்களிலும் நேர் மாறான கருத்துக்களைக் கொண்டுள்ளார் நவாஸ் ஷரீப். பதவி நீக்கம் செய்யப்பட்ட உச்ச நீதிமன்ற நீதி பதிகளை மீண்டும் பணியில் நியமிக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக உள்ளார். அது போல் முஷாரப்புக்கு எதிராகக் கணடனத் தீர்மானம் கொண்டு வந்து பதவியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வருகிறார்.

இந்த இரு விடயங்களிலும் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும் நவாஸ் ஷரீப் கட்சிக்கும் இடையே உடன்பாடு ஏற்படவேண்டும். அப் போது தான் கூட்டணி ஆட்சி அமைப்பதில் முன்னேற்றம் காணமுடியும்.

முஷாரப் தரப்பில் இருந்து விடப்படும் மிரட்டலுக்கு ஜர்தாரி என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்பது கேள்விக்குறியாகியுள் ளது.

நவாஸ் ஷெரீப்புடன் கூட்டணி கூடாது என்று முஷாரப் வலியுறுத்தி வருகிறார். எனவே கூட்டணி ஆட்சி அமைப்பதில் சிக் கல் நீடிக்கிறது.

பெனாசீரின் பிரதமர் பதவி யாருக்கு? பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவர் மக்தூம் அமீன் பாஹிம் பிரதமராவதற்கு அதிக வாய்ப்பு உருவாகியுள்ளது.

புதிய அரசு அமைக்க முடிவு செய்துள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சி, நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) மற்றும் அவாமி தேசிய கட்சி ஆகிய கூட்டணிக் கட்சிகளிடையே பாஹிமுக்கு அதிக ஆதரவு காணப்படுகிறது.

இவர் தற்போது பாகிஸ்தான் மக்கள் கட்சி யின் துணைத் தலைவராக இருந்து வருகிறார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களின் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது. அப்போது பிரதமர் பதவிக்கு பாஹிம் பெயரை அவர்கள் ஒரு மனதாகப் பரிந்துரை செய்தனர்.

சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஷெரீப்புடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்க முடிவு செய்யப்பட்டது குறித்து விவாதிக்கப் பட்டது. எனினும் இக்கூட்டத்தில் பிரதமர் வேட்பாளர் குறித்து இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

### சந்திரனில் பெனாசிரின் முகம் தெரிவதாக...

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் பஞ்சாப் மாகா ணத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஷா மெஹ்மூத் குரேஷி, மூத்த தலைவர் யூசுப் ரேஸா கிலானி மற்றும் வழக்கறிஞர் அய்தாஸ் ஆசன் ஆகியோரின் பெயர்களும் பிரதமர் பதவிக்கு கூட் டத்தில் பரிசீலிக்கப்பட்டன.

சந்திரனில் பெனாசிரின் முகம் என்ற வதந்தி யால் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு வாக்குகள் குவிந்தன.

பாகிஸ்தானில் பொதுத் தேர்தலுக்கான வாக் களிப்புக்கள் ஆரம்பமாவதற்கு முதல் தினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை மறைந்த முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் முகம் சந்திரனில் தெரிவதாக சிந்து மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் வதந்தியொன்று பரவியுள்ளது.

இது வேண்டுமென்றே உருவாக்கப் பட்ட வதந்தியா அல்லது மக்களின் மனப்பிரமையா என்பது இதுவரை தெளிவாகாத போதும் ஆயிரக் கணக்கான மக்கள் சந்திரனைக் கண்ணிமைக் காமல் பார்ப்பதற்கு இச்செய்தி வழி வகுத்துள்ளது.

பெனாசிரின் முகம் சந்திரனில் தெரிவதை தாங்கள் கண்டதாக அதிகளவானோர் தெரிவித்தி ருக்கும் அதேவேளை இவர்கள் அனைவரினதும் வாக்குகள் பாகிஸ்தான் மக்கள் கட்சியையே சென்றடைந்திருக்கும் என்பதும் நிச்சயமென தெரிவிக்கப்படுகிறது.

மத நம்பிக்கைகள் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு நாட்டில் இது போன்ற அற்புத நிகழ்ச்சிகள் பற்றிக் கூறப்படுவது அதிர்ச்சிகரமானதொன் றல்ல எனவும் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

பெனாசிரின் முகத்தை சந்திரனில் பார்த்த தாகத் தெரிவிக்கும் ஒருவர் தனது உணர்ச்சி களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பிபி (இம்மாகாண மக்கள் பெனாசிரை அழைக்கும் பெயர்) சாகவில்லை. அவர் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார் எனத் தெரிவித்துள் ளார்.

பெனாசிர் படுகொலை செய்யப்பட்ட துயரமான சம்பவத்திலிருந்து பாகிஸ்தான் மக்கள் இன்னும் மீளவில்லை என்பதை தெளிவாக வெளிப்படுத்துவதாக தெரிவித்துள்ள இளைஞ ரொருவர் நவாஸ் ஷெரீப் போன்ற சில தலை வர்களுக்கு மக்கள் மதிப்பளித்தாலும் பெனாசிர் தனது அன்பான சுபாவம் மூலம் மக்களுடன் மிகவும் நெருங்கியிருந்ததாகக் கூறினார். *

# முறிந்துபோன அரசியல் ஒப்பந்தங்களும் திசை கெட்டுத் தடுமாறிய சிங்கள அரசுகளும்

இந்நாட்டின் அரசியல் வாதிகள் மத்தியில் அரசியல் ரீதியிலான ஒப்பந்தங்கள் காலத் துக்கு காலம் மேற்கொள்ளப்பட்டமை வரலாற்றுப் பதிவ களாகும். அந்தவகையில் சுதந்திர இலங் கையின் வரலாற்றில் முதல் முதலில் மேற்கொள் ளப்பட்ட அரசியல் ஒப்பந்தமாக காலஞ் சென்ற பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயகா வுக்கும் காலஞ்சென்ற தமிழ் அரசியல் தலை வர் செல்வநாயக்கத்துக்கும் இடையே மேற் கொள்ளப் பட்ட ஒப்பந்தத்தை குறிப்பிட முடியும். அதே போன்று, 1965 ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சி அரசில் பிரதமராக பதவிவகித்த டட்லி சேனநாயகா வுக்கும் சமஷ்டிக் கட்சியின் தலைவரான செல்வ நாயகத்துக்கு மிடையே இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக ஒப்பந்த மொன்று மேற்கொள்ளப் பட்டமையும் இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத் துவம் பெற்றதொரு சம்பவமாகும்.

1965ஆம் ஆண்டில் தேசிய அரசில் பிரதமர் பதவி வகித்த டட்லி சேனாநாயக்காவுக்கும், சமஷ்டிக் கட்சித் தலைவர் செல்வ நாயகத்துக்குமிடையே மொழிப் பிரச்சனை தொடர்பாக இணக்கட்டுப் பாட்டு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அந்தவேளையில் சமஷ் டிக்கட்சியும் அரசில் இணைந்து செயற்பட்டு வந்தது.

சமஷ்டிக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத் திய திருச்செல்வம் தேசிய அரசில் உள்ளூராட்சி நிர்வாக மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் பதவி வகித்து வந்தார். அந்த காலகட்டத்திலேயே டட்லி- செல்வா ஒப்பந்தம் என அடையாளப்படுத் தப்பட்ட அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தத்துக்கும் கூட பண்டாரநா யக்கா- செல்வநாயகம் ஒப்பந்தத்துக்கு ஏற்பட்ட தலைவிதியே ஏற்பட்டது. அந்த டட்லி- செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதை யடுத்து வழக்கம் போன்றே அந்த ஒப்பந்தத் துக்கு எதிராக எதிரணி அரசியற் கட்சிகள் எதிர்ப்பு நடவடிக்கை களை முன்னெடுத்தன அத்தகைய எதிர்ப்பு நடவடிக் கைகளில் பௌத்த பிக்குமார் தரப்பினரும் ஒன்றி

**சிங்களத்தில்:**
**பிரிய அத்தநாயகா**

ணைந்து செயற்பட்டனர். அத்தகைய தரப்பு களால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட் டங்களில், ஆர்ப்பாட்டகாரர் களை கலைப்பதற் காகபொலிஸார்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள நேர்ந்தது. அந்தத் துப்பாக்கிப்பிரயோகச் சம்பவத் தில் சிக்கி துரதிருஷ்டவசமாக தம்பாராவே ரத்ன சாரதேரோ என்ற பௌத்தபிக்கு உயிரிழக்க நேர்ந்தது. அந்த பௌத்தபிக்குவின் மரணம் அந்த வேளையில் முழு நாட்டிலுமே பரபரப்பானதொரு நிலையை உருவாக்க காரணமாக அமைந்தது. அதற்கு முன்னர் சிங்கள மொழி தொடர்பாகவும் பௌத்தமதம் தொடர் பாகவும் கடும் கோட்பாட்டு ரீதியில் செயற்பட்ட மக்கள் ஐக்கிய முன்னணி யின் தலைவர் பிலிப் குணவர்த்தனா தேசிய அர சில் அமைச்சர் பதவி ஒன்றினை வகித்து வந் தார். குறிப்பிட்ட டட்லி-செல்வா ஒப்பந்தம் குறித்து பிலிப் குணவர்த்தனா மௌனம் சாதித்து வந்ததன் காரணமாக அவர் அந்த வேளையில் எதிரணித் தரப்பினரின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக நேர்ந்தது.

டட்லி-செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக அந்த வேளை தீவிரமான வகையில் எதிர்ப்பு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வந்த தன் காரணமாக அந்த ஒப்பந்தம் செயலுருப் பெறாது, வெறும் கடதாசி ஆவண மொன்றாக மட்டுமே அமையும் நிலைக்குஉட்பட நேர்ந்தது. 1970ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பிலிப்குண்வர்த் தனா, தோல்விய டைய நேர்ந்த மைக்கும் அந்த டட்லி-செல்வா ஒப்பந்தத்தின் கார ணமான அழுத்தமேகாரணமாயிருந்திருக்கக் கூடும்.

1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்த லின் மூலம் அரசமைத்த சிறிமாவோவின் தலைமையிலான கூட்டுமுன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலும் கூட இந்திய அரசுடன் இலங்கை அரசு ஒப்பந்த மொன்றினை உருவாக்கிக் கொண்டது. அந்த ஒப்பந்தத்தில் 1974ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இலங்கைப் பிரதமர் சிறிமா வோவும் அந்தவேளைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியும் கையெழுத் திட்டனர். பாக்குநீரிணைச் சந்தி தொடர்பான எல்லை நிர்ணயத்தை உறுதிப்படுத்திச் சட்டபூர்வ மான ஆவணமாக்கிக் கொள்வதே அந்த ஒப் பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கான முக்கிய காரணமாக அமைந்தது. அந்த ஒப்பந்தம் கச்சதீவை இலங்கைக்குச் சொந் தமானதொன்றாகப் பிரக டனப் படுத்துவதாக அமைந்தது. இந்தியப் பிரதமர் இந்திராகாந்திக்கும், இலங்கைப் பிரதமர் சிறி மாவோ அம்மையாருக்குமிடையே கச்சதீவின் உரிமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகளின் முடிவில் கச்சதீவு இலங்கைக்கே சொந்தமான நிலப் பிரதேசமென இந்தியப் பிரத மர் இந்திராகாந்தியினால் ஒப்புக் கொள்ளப்பட் டது. அந்தக் கச்சதீவின் உரிமை தொடர் பான ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதியன்று உத்தியோக பூர்வமாகப் பகிரங்கப் படுத்தப்பட்டது. 280ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட கச்சதீவின் உரிமையை இலங்கைக்கு விட்டுக் கொடுத்தமை தொடர்பாக இந்திய அரசுக்கு எதிராக தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் அந்த வேளையில் தீவிரமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன. ஆயினும் அத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகள் யாவும் காலப்போக் கில் செயலிழந்து போய்விட்டன.

அதற்குப் பின்னர் இலங்கை அரசியல் வரலாற் றில் மிக முக்கிய அத்தியாயம் எனக் குறிப்பிடத் தக்க ஒப்பந்தமாக அமைந்தது இந்திய இலங்கை ஒப்பந்தமே ஆகும். அந்த இந்திய இலங்கை ஒப் பந்தம் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெய வர்த்தனாவுக்குமிடை யில் கொழும்பில் வைத்துக் கைச்சாத்தாகியது.

அந்தக்காலகட்டத்தில் நாட்டின் வடக்கு மற் றும் கிழக்குப் பகுதிகளின் நிர்வாகத்தை தமது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு, முழு இலங்கை யிலுமே தீவிரவாதச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த விடுதலைப்புலிகள் அமைப்பை ஒழித்து விடும் நோக்கில் இலங்கை அரச படைகள் ராணுவ நட வடிக்கையொன்றை முன்னெடுத்தன. வடம ராட்சி ராணுவ நடவடிக்கை என அடையாளப் படுத்தப்பட்ட அந்த நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் உட்பட பெருந்தொகையான பொதுமக்களும் இலங்கை அரசபடைகளால் படுகொலையுற நேர்ந்தது. அந்தவேளையில் வடபகுதியில் பொதுமக்கள் இலங்கை அரசபடைகளால் படுகொலை செய் யப்படுவதாகவும், அவலங்களுக்கு உள்ளாவ தாகவும் எழுந்த குற்றச்சாட்டுக்களையடுத்து, அவலப்படும் தமிழ்ப்பொதுமக்களுக்கு உதவுவதா கக் கூறி இந்திய அரசு, இலங்கை அரசின் அனு மதியின்றியே வலோற்காரமாக வடபகுதித் தமிழ் மக்களுக்கு ஆகாயமார்க்கமாக உலர் உணவுப் பொருட்களை விநியோகித்தது. இந்தியஅரசின் அத்தகைய வலோற்காரத் தலையீடு காரணமாக இலங்கை அரசு இந்திய அரசுடன் இணக்கப் பாட்டு ஒப்பந்தமொன்றினை மேற்கொள்ள வேண் டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அவ்விதம் இந் திய அரசுடன் இலங்கை அரசு ஒப்பந்தமொன் றினை மேற்கொண்டமைக்கு எதிர்ப்பை வெளிப் படுத்தும் முகமாக அந்த வேளையில் இந்நாட்டின் எதிர்க்கட்சித் தரப்பினர் பெரிய அளவில் ஆர்ப் பாட்டப் பேரணிகளை ஒழுங்கு செய்து இலங்கை அரசின் அத்தகைய செயற்பாட் டுக்கு எதிராகத் தமது ஆட்சேபனையை வெளிப்படுத்தினர். அவ் விதம்அந்த வேளைய முக்கிய எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சி கொழும்பு கோட்டை அரச மரச் சந்திக்கு அருகில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி யொன்றைக் கலைக்க கண்ணீர்ப்புகைப் பிரயோக மும் மேற்கொள்ள நேர்ந்தது. குறிப்பிட்ட அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடக் கொழும்புக்கு வந் திருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தமது நாட் டுக்குத் திரும்பிச் செல்லும் தருணத்தில் தமக்கு இலங்கை அரசால் வழங்கப்பட்ட மரியாதை அணிவகுப்பை ஏற்றுக்கொண்ட வேளை யில் எதிர்பாராத விதமாக அணிவகுப்பில் கலந்து கொண்டிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவரது தாக்குதல் முயற்சியிலிருந்து அதிஷ்டவசமாகத் தப்பித்துக் கொண்டார். குறிப்பிட்ட அந்த ஒப்பந் தம் நடைமுறைப்படுத்தப்படும் விதமாக, ஒப்பந் தம் கைச்சாத்தாகி ஒருசில நாட்கள் கடந்து இந் திய அமைதி காக்கும் படையினர் இந்நாட் டில் வந்திறங்கி நாட்டின் வடக்கு கிழக்குப் பிரதேசங் களில் நிலை கொண்டனர். இதன் தொடர்ச்சி யாக பல சம்பவங்கள் இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் தொடர்ந்து நடந்து முடிந்த போதி லும், அச்சம்பவங்களின் எதிரொலி யாக சில ஆண்டுகளின் பின்னர், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, தமிழ்நாட்டில் வைத்து விடுதலைப்புலிகள் அமைப்பின் தற்கொலைக் குண்டுதாரியொரு வரால் குரூரமான விதத்தில் படு கொலை செய் யப்பட நேர்ந்தது.

2002அம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்த லில் ஐ.தே.கட்சி அரசமைத்தது. அதனை யடுத்து போர்நிறுத்த ஒப்பந்தமொன்றை அந்த வேளையில் ஐ.தே.கட்சி அரசுக்குத் தலைமை தாங்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப்புலிகள் அமைப் பின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொண் டார். விடுதலைப் புலிகள் அமைப் பின் தலைவர் பிரபாகரன், இந்நாட்டில் அரச தலைவரொருவ ருடன் ஒப்பந்த மொன்றினை மேற்கொண்ட முதலாவது சந்தர்ப்பமும் அது வாகவே இருக்கக் கூடும். அந்தவகையில் 2002 ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி யன்று, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் வன்னியில் குறிப் பிட்டதொரு இடத்தில் வைத்தும், இலங்கை அர சின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் வைத் தும் அந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். குறிப்பிட்ட அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கு இடையீட்டாளராக மத்தியஸ்தம் வகித்தவர்கள் நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளேயாவார். குறிப்பிட்ட அந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து ஐ.தே.கட்சி அன்று முதல் இன்றுவரை நல்லெண்ணக் கருத்துக் களையே வெளிப்படுத்தி வருகின்றது. ஆனால் சுதந்திரக் கட்சி உட்பட ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற ஐ.தே.கட்சியின் கொள்கை நிலைப்பாட்டுக்கு எதிரான கட்சிகள் குறிப்பிட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் கிட்டிவிடவில்லை எனவும், அதனால் நாட்டுக்குப் பெரும் பாதிப்பே ஏற்பட்டுள்ளது எனவும் கருத்து வெளியிட்டு வந்துள்ளன. அதேவேளை விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களும் தமது வன்முறை நடவடிக்கைகளை முற்ற முழுதா கக் கைவிட்டுவிடாது, குறிப்பிட்ட போர் நிறுத்த உடன்பாட்டு விதிகளை மீறும் வகையில் செயற் படுவதாகவும் அரச தரப்பால் குற் றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. அந்தவகையில் அரச படைகளின் உயரதிகாரிகள், மற்றும் அமைச்சர் கள் படுகொலைச் சம் பவங்கள் தொடர்பாகவும் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் பல தரப்பினர் களால் முன்வைக்கப்பட்டு வந்தன. அமைச்சர்களான லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் தி.மு.தஸநாயக உட்பட அரசஉயர்மட்டத்தலைவர்களது படுகொலை கள் தொடர்பாகவும், விடுதலைப்புலிகள் அமைப் பின் மீதே குற்றம் சுமத்தப்பட்டது. இவையாவும் போர்நிறுத்த உடன்பாடு கடைப் பிடிக்கப்பட்டு வந்த வேளையிலே இடம்பெற்ற சம்பவங்களே யாகும். ஆதலால் எதுவித அர்த்தமுமற்ற இந்தப் போர்நிறுத்த உடன் பாட்டைத் தொடர்ந்து பேணி வருவதினின்றும் ஒருதலைப் பட்சமாக அரச விலகிக் கொள்ள வேண்டியுள்ளதெனத் தெரிவித்து, கடந்த ஜனவரி 16ஆம் திகதியிலிருந்து அரசு அப்போர் நிறுத்த உடன்படிக்கை யினின்றும் விலகிக் கொள்ள

**தமிழில்: ராஜா**

விருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர் மானித்து அதனைச் செயற்படுத்தினார்.

கடந்த 2007ஆம் ஆண்டில் மற்றுமொரு அரசியல் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று அரசுக் கும், முக்கிய எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சிக்கு மிடையே மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய புரிந்தணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதை யடுத்து, இந்நாட்டின் பொதுமக்களில் பெரும்பாலா னோர், சிறிதளவாவது ஆறு தலளிக்கும் ஒரு யுகம் ஆரம்பமாகி யுள்ளதாகக் கருதி மகிழ்ச்சி யடைந்ததென்னமோ உண்மைதான். அந்த வகை யில் எப்போதுமே மற்றைய தரப்பினரை நோக்கி விரல் நீட்டிக் குற்றம் சாட்டி விமர்சிப்பதன் மூலம் தாம் மாசு மறுவற்றவர்கள் எனக் காட்டிக் கொள் ளும் வழக்கம், இவ்விரு முக்கிய அரசியல் கட்சி களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் வாதி கள் மத்தியில் அற்றுப் போய்விடும் என்ற எதிர் பார்ப்பு நாட்டின் பொதுமக்கள் மத்தியில் தலை தூக்கியிருந்தது. (13ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புத்தகச் சாலை



## அக்ஷரானந்தம்

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பவளவிழா ஆண்டைக் கௌரவிக்கும் வெளியீடாக இந்நூல்வெளிவந்துள்ளது.

கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் அமரர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மாவும் கல்லூரியின் பழையமாணவர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மாவும் எழுதிய மொழி சார் கட்டுரைகள் இந்நூலில்இடம் பெற்றுள்ளன. கல்லூரியின் தமிழ்ச் சங்கம் இந்நூலை வெளியிட்டுள்ளது.



## கட்டிளம் பருவம்

கட்டிளம் பருவத்தினர் மத்தியில் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பாகவும், அவர்களுடன் தொடர்புடைய சமூக விடயங்கள் தொடர்பாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கல்விசார் நூலாக இது வெளிவந்துள்ளது.

சேவாலங்கா நிறுவனத்தினர் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.



## வேலணைப் பெரியார் க.பொ. இரத்தினம்

வேலணைப் பிரதேசத்தின் வளர்ச்சியில் பெரும்பணியாற்றிய தமிழ்அறிஞர் பண்டிதர் க.பொ.இரத்தினம் குறித்து கவிதை நயமாகவும் கட்டுரை யாகவும் இந்நூல் வந்துள்ளது.

கவிஞர் தில்லைச் சிவன் இந்நூலை எழுதியுள்ளார். தாய்நாடு பதிப்பகத்தினர் இந் நூலை வெளியிட்டுள்ளனர்.



## இலக்கியப் பார்வை

தமிழ் இலக்கியம் தொடர்பான பல்வேறு கட்டுரைகளை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது.

ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளரும் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளருமான முல்லைமணி வே. சுப்பிரமணியம் இந்நூலைத் தொகுத்துள்ளார்.

முல்லை இலக்கிய வட்டம் இந்நூலை வெளியிட்டுள்ளது.



## ராஷ்டிரபதி பவன்

மும்பாயில் இருந்து வெளிவந்த பிரபல்யமான 'Link' (மாதம் இரு முறை) .இதழில் வெளிவந்து, மூத்த பத்திரிகையாளரும் சுதந்திரன் முன்னாள் ஆசிரியருமான இ.சங்கரினால் மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகள் 1969ஆம் ஆண்டில் 'இளம் பிறை' சஞ்சிகையில் பிரசுரமாகின. அவற்றின் தொகுப்பே ராஷ்டிரபதி பவன் நூலாகும். ராஷ்டிரபதி பவனைப் பற்றியும் அங்கு தங்கி சிறப்புறச் சேவையாற்றிய ஜனாதிபதிகள், ஜனாதிபதித் தேர்தல்கள் தொடர்பாகவும் இந்நூல் விவரிக்கின்றது.

## இந்துப் பண்பாட்டியல்



பேராசான் இலக்கிய கலாநிதி க. சிவராமலிங்கம் பிள்ளையின் சிந்தனைத் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலை ப.இராஜேஸ்வரன், ப.கணேசலிங்கம் ஆகியோர் தொகுத்து வழங்க யாழ். கல்வியியல் வெளியீட்டு நிலையம் வெளியிட்டுள்ளது.

## இருக்கிறம்



தமிழக சனரஞ்சக சஞ்சிகைகளுக்கு நிகராக இலகு வாசிப்புக்கேற்றபல்சுவை விடயங்களையும் தாங்கி 'இருக்கிறம்' என்ற பெயரில் இருவார இதழ் வெளிவருகின்றது. கல்வி, விளையாட்டு, சினிமா, இலக்கியம், நகைச்சுவை என எல்லா விடயங்களையும் தாங்கி சிறப்பான வடிவமைப்பில் வண்ண இதழாக இது வெளிவந்துள்ளது. ஆனந்த விகடன், குமுதம் என்ற தமிழக சஞ்சிகைகளைப் பார்த்த சுவைஞர்களுக்கு நமது நாட்டுச் சேதிகளை நறுக்காக, சுவையாக 'இருக்கிறம்' தருகின்றது எனலாம். இச் சஞ்சிகை ஈழத்து இலகு வாசிப் புக்குப் பலமும் வளமும் சேர்க்கும் என்பது ஒவ்வொரு இதழிலும் வெளிப்படுகின்றது.

## அருள் நிதி



சமயத்தின் பால் மக்களை ஈர்த்து பற்றை ஏற்படுத்தும் நோக்கில் பன்னிரண்டு திருமுறைகளையும் தொகுத்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மாவிட்டபும் விசுவர் சிதம்பரி சின்னத்தம்பி நினைவாக கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை இந்நூலை தொகுத்து வழங்கியுள்ளார்.

# மக்கள் மகிமை



நோபல் பரிசுபெற்ற ஒன்பது அறிஞர் களிடம் உயர் கல்வி பெற்ற பேராசிரியர் க.மயில்வாகனம் அவர்களிடம் பாடம் கேட்ட பெருமைக்கு உரியவர் முப்பத்து இரண்டு வருடகால கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெறும் நாகராசா உலக நாதன் அவர்கள்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கணிதப் பாடத்தில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற அறிவியல் பட்டதாரி இவர். கணித ஆசிரியராக 1976ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். முதல் நியமனம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் மூன்று ஆண்டுகால சேவையின் பின் இவர் யாழ்.இந்துக் கல்லூ ரிக்கு இடமாற்றம் பெற்றார்.

இந்துக்கல்லூரியில் உயர்வகுப்பு ஆசி ரியராகப் பணியாற்றுங் காலை வகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் மேல திக நியமனம் பெற்றார். நிரந்தர அதிபர் இன்றி யாழ்.இந்துக் கல்லூரி இருந்த காலத்தில் பதில் அதிபராகவும் பணியாற் றினார்.

கல்லூரி ஆசிரியப் பணிக்கு மேலாக தொலைக்கல்வி நிறுவனத்தில் ஆசிரிய மாணவர்களுக்கு போதனாசிரியராகவும் சிரேஷ்ட போதனாசிரியராகவும் சேவை யாற்றியுள்ளார்.

இவர் கல்வி கற்ற யாழ்.இந்துக் கல்லூரி யில் இருபது ஆண்டுகள் சேவை யாற்றிய நிலையில் கணிதப் பாடத்திற்கான உத விக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார்.

முப்பத்து இரண்டு ஆண்டு கால கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறும் காலம்வரை யாழ்.கல்வி வலயத்தில் பணி யாற்றினார்.

அறிவியல் கல்வியுடன் தொடர்புடைய கல்வி அதிகாரிகள் கவனத்தை ஈர்ந்த ஒருவர் இவர்.

T.அற்புதநாதன், பேராசிரியர் ஓ.சின்னத் தம்பி, க.பொன்னம்பலம் போன்றோர் வளம்படுத்தி வந்த, வருகின்ற தொண் டைமானாறு வெளிக்கள நிலையத்தின் நீண்டநாள் பரீட்சை இணைப்பாளராக இருந்து நா.உலகநாதன் ஆற்றி வரும் பணி மாணவ உலகத்திற்கு மிகப் பயன் தந்தது அவர் யாழ்.கல்வித் திணைக்களக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அவர்களுடைய அனுசரணையோடும், ஏனைய திணைக்களத்து அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஆற்றிய சேவை அளப்பரியது.

சமகாலத்தில் OBA (JHC), SDS (JHC), Teachers Guild, NPTABF என்பவற்றின் தனாதிகாரியாக நா.உலகநாதன் அவர்கள் செயற்பட்டு நற்பெயர் பெற்றவர்.

சைவபரிபாலனசபை அச்சக கௌரவ முகாமையாளராகவும் கூட அவர் முகாமை செய்தவர். யாழ்.இந்துக்கல்லூரியின் ஞான வைரவர் ஆலயக் கட்டுமானத்திலும் புதிய விடுதிக் கட்டடத் தொகுதிக் கட்டுமானத் திலும் உதவித் தனாதிகாரியாகச் செயற் பட்டவர்.

பொதுப்பணத்திலும் சிக்கனம் காட்டுபவராக அவர் நோக்கப்பட்டிருக்கின்றார்.

விளையாட்டு மைதானத்திலே நல்ல நேரக்காப்பாளர். யாழ்.பல்கலைக்கழக Faculty Board அங்கத்தவர்களில் ஒருவர். 09 வருட உதவிக் கல்விப் பணிப்பாளராக உயரிய சேவையயைத் தந்தவர்.

சிக்கனம், நாணயம், யதார்த்தம், நேர்மை, நம்பகம், தகுதி, கற்றோனுக்குரிய முகச் செல்லுமதி, தோழமை, கலகலப்பு என் பவை ஒருங்கே கூடி வந்த ஒரு மரியாதைக்குரிய நண்பனாக எமது ஆசிரியர் குழாமில் இடம் பெற்றிருந்த நா.உலகநாதன், எல்லோராலுமே விரும்பப்பட்டவர். எல்லோராலுமே வேண்டப்பட்டவர்.

உளவியல், 'தனியாள் வேறுபாடு' என்ற சொல்லோடுதான் தொடங்குகின்றது. இவர் தனியாள் வேறுபாடுகளில் வேறுபட்ட கெட்டித்தனங்களுக்குரிய தீனிபோட்டுப் பொது நலனைப் பிரசிக்க வைக்கும் கர்மயோகியாக இயங்கியிருந் தவர். கெட்டிக்காரன். இது எனது கணிப்பு.

தீ.ரவிந்திரநாதன் (ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி)

## கலாநிதி பட்டம் பெற்றார்



யாழ்.பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறை விரிவுரையாளர் வண.ஜெபரத்தினம் ஜெபமோகன் கலாநிதிப் பட்டத் திற்கான ஆய்வுரையை யாழ்.பல்கலைக் கழகத்திற்கு சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். நேற்று நடைபெற்ற செனட் சபைக்கூட்டம் இதற்கு சம்பிரதாய பூர்வமாக அங்கீகாரம் வழங்கியது. இலங்கையிலே அருட்பணிக்கு இஸ்லாம் மதத்தின் இறையியலினதும் மெய்யியலினதும் பொருத்தப்பாடு என்னும் பொருளில் இளைப்பாறிய பேராயர் கலாநிதி எஸ்.ஜெப நேசனின் மேற்பார்வையில் தமது ஆய்வினை இவர் மேற்கொண்டமை குறிப் பிடத்தக்கதாகும்.

# உங்கள் படைப்புகளை ஆவணப்படுத்தக் காத்திருக்கிறது நூல் தேட்டம்...

ஈழத்துத் தமிழ் நூல்களின் இருப்பினைப் பதிவுசெய்து வைக்கும் பாரிய பணியினை மேற்கொள்ளும் நோக்குடன் நூல் தேட்டம் தொடங்கப்பட்டது. லண்டனில் தற்போது புலம்பெயர்ந்து வாழும் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களினால் 2000ஆம் ஆண்டில் இத்தொகுப்பு முயற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்று ஈழத்துத்தமிழ் நூல்களின் இருப்பினை ஆவணப் படுத்தி வைக்கும் ஒரேயொரு பதிவேடாக நூல்தேட்டம் விளங்குவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நூல்தேட்டம் தொகுப்பின் பிரதிகள் பிரித்தானிய நூலகம் உள்ளிட்ட உலகநாடுகளின் தமிழியல்துறைச் சேகரிப்புகளும், ஆய்வுத்துறைகளும் உள்ள பல்வேறு நூலகங்களில் உசாத்துணை ஆவணமாகவும் பேணப்படுகின்றன.

இதுவரை நான்கு தொகுதிகள் முறையே 2002, 2004, 2005, 2006 ஆகிய ஆண்டுகளில் ஒவ்வொரு தொகுதியிலும் 1000 நூல்கள் என்ற அடிப்படையில் 4000 நூல்களை குறிப்புரையுடன் கூடியதாக நூல் தேட்டம் பதிவுசெய்துள்ளது. ஐந்தாவது தொகுதி 2008 ஏப்ரல் மாதத்தில் மேலும் 1000 நூல்களின் பதிவுகளுடன் வெளிவரவுள்ளது.

ஈழத்துப் படைப்பாளிகளின் படைப்புகளை நூல்தேட்டத்தின் வாயிலாகப் பதிவு செய்து உலகளாவிய ரீதியில் ஈழத் தவரின் நூல்வளத்தின் தேட்டத்தை வெளிப்படுத்த இதனால் முடிந்துள்ளது. இது எவ் வித வர்த்தக நோக்கமுமற்ற தனிமனித முயற்சியாகும். இத்தொகுப்பினைத் தடையின்றித் தொடர்வதற்குப் படைப்பாளிகள், வெளியீட்டாளர்கள், பதிப்பகங்கள் தமது வெளியீடுகளில் ஒவ்வொரு பிரதியை தொகுப்பாசிரியரின் கொழும்பு முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ சேர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. முகவரி: N.Selva -rajah, c/1/6 veluvelu -vanarama flats, Hampden Lane, Wella -wathe, Colombo-06. இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் நூல் கள் மாதாந்த அடிப்படையில் லண்டனுக்குப் பதிவிற்காக அனுப்பிவைக்கப்படும். இந்நூல்கள் அனைத்தும் பதிவாக்கப்பட்ட பின்னர் லண்டனில் உள்ள எமது ஈழத்துத் தமிழ் நூல் காப்பகத்தில் ஆய்வுத் தேவைகளுக்காக பேணிப் பாதுகாக்கப்படும். ஒரு படைப்பாளி நேரடியாக அனுப்பிவைக்கும் நூல் ஒருவருட காலத்துக்குள் பிரசுரமானதொன்றாக இருந்தால் அந்நூல் பற்றிய அறிமுகத்தினையும் ஐரோப்பிய ஊடகங்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான வேண்டுகோளை படைப்பாளிகள் கடித மூலம் நேரடியாக விடுப்பது விரும்பத்தக்கது. (நேரடித் தொடர்பு முகவரி : N.Selvarajah, 48 Hallwicks Road, Luton, LU2 9BH, United Kingdom)

# கண்ணாடிக் கண்




நான்கு மணிநேரம் கைதியை சித்திரவதை செய்ததின் பின்னர் ஒருவாளி தண் ணீரை அவன் மீது கொட்டி மயக்கம் தெளிவித்தனர் காவலாளிகள். பின்னர் அவனிடம் கூறினார்கள் -

தளபதி ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார் உனக்கு எங்கள் மூவரில் எவரது கண் ஒன்று கண்ணாடியால் ஆனது என்னதைச் சரியாகச் சொல் வாயானால் உயிர் தப்பலாம் என்று.

அவர்கள் மூவரையும் அவன் மிகக் கவனமாகக் கூர்ந்து பார்த்தான். பின்னர் ஒருவனைச்சுட்டிக்காட்டி அவரது வலது கண் கண்ணாடி என்றான் காவலர்களுக்கு ஆச்சரியம்.

உயிர் தப்பிவிட்டாய், எவ்வாறு இத்தனை அச்சொட்டாகச் கண் டுபிடித்தாய்? உன் சகக் கைதி கள் எவராலும் முடியாமல் போய் விட்டதே. ஏனென்றால் அது அமெரிக்கக் கண், அது மட்டும் நிச்சயம்

"மிக சுலபம்" அவன் கூறினான் மீண்டும் மயக்கம் வரப்போவதை உணர்ந்தபடி அந்த ஒரு கண் தான் என்னை வெறுப் பில்லாமல் நோக்கியது என்று.


சித்திரவதை தொடர்ந்தது.

*(சல்வடோர் கவிஞர் றோக்கு டால் டோன் எழுதிய ஒரு கவிதையின் தமிழ்க் கருத்து)*

# அமைதிக்காக உழைப்போம்

இன்றைய உலகில் மனிதர்கள் தேடி அலைவது செல்வம், புகழ், இன்பம் என வெளிப்படையாகத் தோன்றினாலும் உள்ளார்ந்த மனிதனின் ஏக்கமும் தேடுதலும் தெய்வீக அமைதியைத்தான். அதற்காகவே தினமும் ஏங்குகிறான். அனைத்து வசதிகள் இருந்தும் நிரந்தர அமைதி இல்லையென்றால் அவற்றால் ஒரு பலனும் இல்லை. இருந்தென்ன? இறந்தென்ன? என்று நினைத்து இறைவன் தந்த ஒப்பற்ற உயிரையே துச்சமாக நினைத்து விடுகிறான். அந்த வேளையிலேயே அமைதியின் தேவை உணரப்படுகின்றது.

அரிய பெரிய சாதனைகளைச் செய்த பெண்மணி ஹெலன் கெல்லரிடம் ஒரு தடவை கேட்கப்பட்ட கேள்வி. " உங்கள் விருப்பங்களின் ஒன்றைப் பூர்த்தி செய்ய ஒரேஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டால் என்ன கேட்பீர்கள்" என்பதாகும். அதற்கு அவர் கூறிய பதில் "அனைத்துலக அமைதி" என்பதாகும். தனிமனிதன் அமைதியில் வாழ்ந்தால்தான் உலக அமைதி சாத்தியமாகும்.




அமைதி தூய ஆவியின் கனியாகும். (கலா.5:22) ஆன்மீகத்தின் சாராம்சம் அமைதி. அமைதியை வெளியில் எங்கும் தேடிக்கண்டுபிடிக்க முடியாது. அன்பின் பூரணத்துவத்தில் பிறப்பதுதான் அமைதி. இறைவனைச் சார்ந்து வாழும் வாழ்க்கையில்தான் அமைதி மலரும். இறைவனோடும் பிறரோடும் ஒப்புரவு கொள்ளும் போதுதான் ஒருவன் தன் வாழ்வில் அமைதியைச் சுவைக்க முடியும்.

அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களதே. (மத்.5:9)

இன்று நாம் அமைதி மலருமா? நிம்மதியான வாழ்வு தோன்றுமா? என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த அமைதியைப் பிறர் எமக்கு தர முடியாது. நாம் தான் உருவாக்க வேண்டும்.

எந்த சூழ்நிலையில் வாழ்ந்தாலும் அமைதியின் கருவியாக வேண்டுமெனில் நம்மை வெறுப்பவர்களிடையே அன்பையும் மனவருத்தம் ஏற்பட்டால் மன்னிப்பையும் நம்பிக்கையற்றவரிடையே நம்பிக்கையும் விதைக்க வேண்டும்.

ஆறுதலைத் தேடி அமைவதைவிட ஆறுதல் அளிப்பதிலும் அன்புக்காக ஏங்குவதைவிட பிறரை அன்பு செய்வதிலும் எம்மைப் புரியாதவரையும் புரிந்த கொண்டு ஒத்துப்போவதிலும் நிறைவு காண்பவர்தான் அமைதியின் கருவியாக வாழ முடியும்.

நம்முடைய முயற்சிகள் பலன் தராமல் போகலாம். அமைதியின் விதையை பக்குவமாக விதைக்கக்கூட தெரியாமல் இருக்கலாம். ஆனாலும் அமைதியின் கருவிகளாக வாழவேண்டும் என்ற தணியாத தாகம் இருக்கவேண்டும்.

நமது அமைதியின்மைக்கு மற்றவர்கள் காரணமல்ல. இதை நாம் உணர்ந்து ஏற்றுக்கொண்டால் அமைதி நம்மோடு கூட எப்போதும் வாசம் செய்யும். எமது நாட்டிற்கு அமைதியை உருவாக்க அனைவரும் உழைப்போம். இந்தத் தவக்காலம் அமைதிக்கான காலமாக அமையட்டும்.

- எஸ்.யேசுதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் மிக மூத்த எழுத்தாளர்களில் அகஸ்தியரும் ஒருவர். ஐம்பதுகளின் ஆரம்பத்திலேயே அவர் எழுதத் தொடங்கியவர். சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல் கள் குட்டிக்கதைகள், வானொலி நாடகங்கள், உரைச்சித்திரங்கள் என்று மிகப்பல துறைகளிலும் முத்திரை பதித்தவர். தமது சொந்தப் பெயரில் மட்டுமன்றி சுமார் பத்துப் புனை பெயர்களில் புகுந்திருந்தும் ஈழத்து இலக்கியத் துறைக்குப் பெரும் பணியாற்றியவர். "உணர்வூற்றுருவச் சித்திரம்" என்னும் தொடரினூடாக பரிசோதனை இலக்கியமும் செய்தவர்.

சுமார் 400 சிறுகதைகள், பத்து நாவல்கள் மற்றும் பல குறுநாவல்களையும் எழுதிச் சாதனை படைத்தவர். அவரின் இரண்டு நாவல்கள் சாகித்தியப் பரிசு பெற்றவை.

எழுத்தாளன் என்பவன், வாழ்வை மானசீகமாக உருவகப்படுத்தும் அஞ்ஞானி போலன்றி வாழ்க்கையை விமர்சித்து உண்மையைத் தேடும் விஞ்ஞானியாக விளங்க வேண்டும். அப்போது தான் அவன் உருவாக்கும் இலக்கியங்களும் அவற்றின் பாற்பட்ட சிருஷ்டிகளும் புடமிடப்படும் என்ற கருத்தியலில் நின்று இலக்கியம் படைத்தவர் அவர்.

துன்ப துயரப்படுகின்ற மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களையும் அவ்வாறு போராடுவோரை எதிர்நோக்கும் இடர்கள்ளயும் இன்னல்களையும் அவற்றுக்கான மாற்றுவழிகளையும் இலக்கியங்களாக்கிய மூத்த முற்போக்கு எழுத்தாளர் அகஸ்தியர்.

உதயனின் வார இதழான சஞ்சீவியில்; 1986ஆம் ஆண்டில் "ஒரு குப்பிவிளக்கு எரிகிறது" என்ற இரு மாதக் குறுநாவலை (03.05.86 தொடக்கம்) அவர் எழுதியிருந்தார்.

எண்பதுகளில் புலம் பெயர்ந்த ஈழத்தின் மூத்த தமிழ் எழுத்தாளர் அகஸ்தியர் அமரராகிவிட்டார்.

# தவிப்பு

"விடியுமுதல் வெளியே போன துரையப்பன், மதியமாகும்போது கழுத்தை தொங்கப் போட்டுக்கொண்டு வந்து திண்ணையில் சரிந்தான்.

'இண்டைக்கும் அடுப்பிலை உலை ஏறாதுபோல கிடக்கே'

உள்ளம் வெதும்ப, சின்னத்தங்கம் அவனைப் பார்த்தாள்.

அவன் இவளையும், இவள் அவனையும் பார்த்துக்கொண்டிருக்க, குழந்தைகள் 'வழக்கம் போலவே' ஒப்பாரிவைக்கத் தொடங்கிவிட்டன:

"ஆச்சி பசிக்குதணை. சோறுதாணை"

சின்னத்தங்கம் அடுக்களைக்குள் சென்று உறியிலிருந்த பழஞ்சோற்றை இறக்கி வைத்து விட்டு, அடுக்குப் பெட்டிக்குள் வைத்த பனாட்டுத் தட்டைத் தடவ ஆரம்பித்தாள்.

'சீமாட்டி' சின்னத்தங்கம் 'குபேரன்' துரையப்பனைக் கைப்பிடித்து மூன்று ஆண்டுகள். ஒரு நாள்கூட நல்ல சோறுகறி வாயில் வைத்தறியாத ஒரு ஜீவன் அவள். மிஞ்சிப்போனால் நெத்தலிக் கருவாட்டுக் கறியும், அமெரிக்கன் மாப்புட்டும், பனாட்டுத்துண்டுகளும்தான் அவள் கண்ட சொகுசு.

இந்தக் 'குபேர வாழ்க்கை' போதாதென்று மூன்று ஆண்டுகளுக்குள்ளே இரண்டு 'குழந்தைச் செல்வங்'கள்.

கேட்கவேண்டுமா?

யாழும் குழலும் தோற்றுவிடுமளவுக்கு, 'இன்னிசை'யை ரசித்துக்கொண்டிருந்தது துரையப்பன் குடும்பம்.

இதோ இந்த நாலாவது வருஷம்...

கஞ்சியும் கூழுமாய்க் காலம் கடத்திவந்த துரையப்பன் குடும்பம் இடைப்பட்ட காலங்களில் உப்புக்கஞ்சியோடு படுத்த இரவுகளே அதிகம். அடுப்பே புகையாத நாள்களும் உண்டு.

துரையப்பன் முகத்தில் கண்ணீர்த் துளிகள் 'பொடுக்'கிட்டு விழுந்தன. அன்றும் அவன் வேலைக்குப் போகவில்லை.

வேலையே கிடையாத அந்தப் பயங்கர உலகத்தை நினைத்தபோது அவன் நெஞ்சு ஆக்ரோஷித்தது.

அப்படியே அயர்ந்துவிட்டான்.

நள்ளிரவு.

கண்களை அகலத் திறந்து விழித்துப் பார்த்தான். அரிக்கன் லாம்பு மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது.

மெதுவாகத் தணித்தான்.

விளக்கின் ஒளி லேசாக மங்கியது. அவனுக்கு ஒருவித 'மயக்கம்.'

உலகம் பிரளயம் எடுத்து இரைந்துகொள்வதாக அவனுக்கு ஓர் உணர்வு.

அவன் சடலம் எரிந்தது. இரத்த நாளங்கள் குமுறி, முறுகித் துடித்தன. 'கிண்' என்று அனற்காற்று தேகம் முழுதும் படர்வது போன்ற ஒருவித வீறுணர்வு. உடம்பு துன்னியது.

"தங்கம்..."

வறட்டிய தொண்டை கரகரக்க மெதுவாக அவளை அழைத்தான்.

நெஞ்சில் இடியேறு விழுகிறதாக ஒரு பிரமை.

'நானும் ஒரு மனுஷனா? ஒரு கவளம் சோற்றுக்கு வழியைக் காணன். அதுக்குள்ளே 'இது' என்ன சவத்துக்கு?'

இருந்தும் கெந்தக மேனியை அவன் மனசால் அடக்க முடியவில்லை.

போராட்டம் சினைப்பெடுக்கிறது.

சில விநாடிகள் கழிந்தன......

மீண்டும் உடல் கெந்தகித்து எழுந்தது.

'சீ, நான் ஒரு நாய்ப் பிறவி. இல்லை, 'ஆட்டுக்கிடாய்' போலக் காமம் பிடித்தவன்'

அவனின் மனக் குரங்கு கோணிக் குமைந்தது.

பக்கத்தே மூன்று வருஷங்களுக்குள் கிடைத்த 'செல்வங்கள்' கந்தைத் துணிகளால் போர்த்தப்பட்டதாக முடப்பட்டுக் கிடந்து உறங்கிக்கொண்டிருந்தன.

என்றாலும், அவற்றையெல்லாம் அடித்து மீறி எகிறிய உணர்ச்சிகள் மேனியிற் சில்லிட்டன.

'ஐயோ, எனக்கு இந்த எண்ணம் வர வேண்டாம். தங்கம் விரும்பினாலும்... நான்... ம்கூம்... அதுவும் பாவம், வருத்தக்காறி, இந்தச் சண்டாள உறவு இனி வேண்டாம்'

தனக்குள் கறுவிக்கொண்டான்.

அவன் கண்கள் கிறங்கின. உடல் தீய்ந்தது.

கண்கள் அவளை உணர்வூறி வெறித்துப் பார்த்தன. க்ஷணத்தில் வெறித்த அந்தக் கண்கள், மயக்கமுற்றுப் பூஞ்சணமடித்துப்போய்விட்டன.

அப்பால் அவனுக்குக் கண்கள் தெரியவில்லை; காதுகளும் கேட்கவில்லை.

ஆறு மாதங்களை எப்படியோ இப்படி இறுகப்பிடித்துத் தனது மனசால் இந்தச் சடலத்தைக் கட்டி வைத்தவன் அவன்.

மின்மினி விளக்கொளியில் தங்கச் சரடு போல் தங்கம் அப்போது பிரகாசித்தாள்.

கண்களை விழித்துப் பார்த்தான்.

அவள் நிமிர்ந்து மல்லாக்காய்க் கிடந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

கரங்கள், கால்கள், சர்வாங்கம்... எல்லாமே வெறிகொண்டு துடித்தன.

'தலைக்கு மேல் வந்த வெள்ளம் சாண் ஏறினால் என்ன, முழம் ஏறினால் என்ன? இரண்டும் ஒன்றுதான்'

ஒரு 'திடீர்ஞானம்' அவனுக்கு உதித்தது.

"தங்கம்..எய்..."

அவளின் காதோடு வாயை வைத்து மெல்ல அரட்டினான். அந்த ஆளரவம் கேட்டு இந்த அழகொளி வீசும் பொற்சிலை திரும்பியது.

"ஏய், தங்கம்"

"ம்..."

"த்சொ... ஏய், தங்கம்"

உணர்ச்சிப் பிளம்பான அனற்கொதிப்பு அகோரித்துப் பற்றியது.

அடுத்த கணம் கடலில் விழுந்தாயிற்று.

அற நனைந்தவனுக்குக் கூதல் என்ன, கொடுகடி என்ன? நனைந்தவன் நனைந்தவன்தான்.

விடிந்தது.

ஆனால், துரையப்பனுக்கு அந்த விடிவே நெஞ்சில் இடி விழுந்தது போலாயிற்று.

ஒரே ஏக்கம்.

அந்தத் தவிப்பை, அவளுக்குவரும் 'அந்தநாளை' எதிர்பார்த்து மனதிற் குமைந்து கொண்டிருந்தான்.

அவளுக்கு அந்த 'வழக்கமான நாள்' கூட வந்து விட்டது.

ஆனால், அவன் எதிர்பார்த்தது வரவில்லை.

'தங்கம்"

ஈனக் கண்களால் துரையப்பன் அவளை அழைத்தான்.

அவன் முகத்தில் திணறடித்த தவிப்பும், நெஞ்சில் விவரிக்கமுடியாத சுமையும் கூடின.

"இப்ப எதுக்கு இந்தச் சோகம்? நீங்கள் சரியான அவசரம் பிடிச்ச மனிசனப்பா"

"அது சரி தங்கம், 'அது' என்னமாதிரி இருக்கு?"

"மாதிரி என்ன, இந்தமுறை தப்பாமல் சனிக்கும்"

'ஆ?'

அவன் விழிகள் பேந்தப் பேந்த முழிசின. அவளுக்கென்ன, அவனல்லவா உழைத்து மாரடிக்க வேணும். அவளுக்கு, 'பெறுவது' தானே வேலை.

"என்ன தங்கம், நீ உப்பிடிச் சிரிக்கிறாய். வாய் துறந்து சொல்லு.. இப்ப என்ன மாதிரிக் கிடக்கு? ஏதாவது மாற்றம் கீற்றம் இருக்கா?"

"என்னத்தைச் சொல்றதாக்கும். இனிமேல் கிட்டாதெண்ட நினைப்பில அவசரப்பட்டு நடந்திட்டு, இப்ப ஏன் உப்பிடி அங்கலாய்ப்பான்? இதோட முண்டாகிவிட்டால்...?"

"என்ன தங்கம் நீ விளையாடுகிறாய். உண்மையைச் சொல்லு. தேகம் இப்ப எப்படி இருக்கு?"

அவனின் பதைபதைப்பைக் கண்டு அவள் அழுதே விட்டாள்.

"எல்லாம் நாலு அஞ்சு நாளில் தெரிஞ்சிடும். அதுவரை மனத்தை அலட்டிக்கொள்ளாமல் இருங்கோ. 'கடவுள் தருவதை' நாங்கள் என்ன செய்ய முடியும்?"

"ஒரு குவளைக் கஞ்சி குடிக்கவே நாய் படாப்பாடு. இந்தக் கஸ்டத்தைப் போக்காத இந்தக் கடவுள் இதை மாத்திரம் அள்ளிக் கொட்ட வந்திட்டாராம். உலகத்துப் பெண்களுக்கெல்லாம் அவர்தான் பிள்ளைகளைக் கொடுத்தாரா?"

சீறிச்சினந்துகொண்டே துரையப்பன் வெளியே கிளம்பினான்.

"வரேக்க பிஞ்சுப் பப்பாளிக்காய் கிடைச்சால் கொண்டு வாங்கோ. அதையாவது திண்டு பாப்பம்"

அவள் கேட்ட பப்பாளிக் காய்களோடு அவன் செக்கல் நேரம் வந்து சேர்ந்தான்.

விடிந்துகொண்டு வந்தது.

ஆனால், அவனுக்கு விடிவதாய் இல்லை. மனசு குமைந்து கறுவியது. பிரமை பிடித்தவன் போல் எழுந்த அவன் நெஞ்சில் ஒரே இடியேக்கம்.

'வருகிற நாள்' போய், நான்காம் நாளும் வந்து விட்டது.

உணர்ச்சிப் பிரவாகத்தை அடக்கிப் பொறுத்துப் பார்த்திருந்த விடிவுநாள் அது. விடிவையும் இரவையும் நிர்ணயிக்கும் சோதனை நாள்.

"தங்கம்"

அவள் கவலை தோய்ந்தபடியே முகத்தைக் கோணிக் கொண்டு அவனைப் பரிதவித்துப் பார்த்தாள்.

"என்ன தங்கம், சரிப்பட்டு வந்துதா?"

"ஒண்டையும் யோசிக்காமல் கண்கடை தெரியாமல் நடந்திட்டு இப்ப விழிபிதுங்க முழித்தால்...?"

"நீ சொல்றது சரிதான் தங்கம். ஆனால்..."

"ஆனால் என்ன...?"

"நான் சொன்னதை மட்டும் நீ கேட்டு நடந்திருந்தால் இப்படியெல்லாம் நாங்கள் தவிப்பானேன்?"

இரண்டு வருஷங்களுக்கு முன் அவன் அவளிடம் 'கர்ப்பப்பையை ஒப்பரேஷன் செய்ய வேண்டும்' என்று 'ஆலோசனை' கூறினான். அவளோ தன்னை ஒரு சோஷலிஸ நாட்டுப் பெண்ணென நினைத்து, 'பிள்ளைப் பாக்கியம் வேணும்' என்று ஆசைப்பட்டு அந்த ஆலோசனையை நிராகரித்துவிட்டாள்.

இப்போது இந்தப் 'பெரும் பாக்கியம்' கிடைத்திருக்கிறது.

அந்தி பிந்தி இருட்டியது.

அரிக்கன் லாம்பை அவள் கொழுத்தினாள். அவன் மனசிலோ ஒளிஇல்லை.

தன்பாட்டில் திண்ணையில் படுத்துக் கொண்டு பீடித்துண்டைப் பற்றவைத்த வண்ணம் "ஈன ஜென்மம் எடுத்தேன் என் ஐயனே" என்ற சுடலை ஞானப் பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவன் நெஞ்சு குமுறிக் கலங்கி உருகிக் கண்ணீராய் வழிந்தது.

தங்கம் பதறி, விம்மி, ஊளைக்குரல் எடுத்து அழுதாள். தாய் அழ, குழந்தைகளும் கரைந்து அழத்தொடங்கின.

"நீ அழாதை தங்கம். நான் படுபாவி... ஒரு குடும்பத்தை உழைச்சுக் காப்பாத்த வலுவில்லாதவன்... நீ அழாதை..."

"உதென்ன பேச்சு. ஆகவும் சின்னக் குழந்தை போலப் பேசவேண்டாம். உழைப்பு ஒண்டு இல்லையே தவிர இந்தக் குடிசை வாழ்க்கையில் எங்களுக்கு என்ன குறைஞ்சுபோச்சு?"

"அதுக்கில்லை. நாங்கள் ஏழைகளாய்த் தான் சீவிக்கிறம். ஆனால், உணர்ச்சி செத்தவர்களாகவும் ஆசையை அறுத்தவர்களாகவும் சீவிக்க முடியாது. தங்கம் நாங்கள் செத்த பிணங்களை விடக் கேவலமாக..."

அவன் தொண்டை கரகரத்தது.

தங்கம் கேட்டாள்:

"இன்றைய மேடுபள்ள வாழ்வில் ஏழைகள் வாழ்க்கையின் எதிரிகளுடன் மாத்திரமல்ல, தங்கள் உடல்களில் தோன்றுகிற இயற்கை உணர்ச்சிகளுடனும் போராடவேண்டியிருக்கிறது. அதுவும் ஏழையின் தலையில் ஒரு தியாக வேள்வியாகிவிட்டது' என்று கூறிய நீங்களே இப்பிடி மனம் தளர்ந்து கலங்கினால், நான் தாங்குவேனா?"

"ஓம் தங்கம், அதுசரிதான். ஆனால்?"

"என்ன சரிதான். எங்க சிரியுங்கோ பார்ப்பம்"

அவள் சிரிப்பித்தாள்.

"இங்கே பாருங்கோ"

"என்ன தங்கம்"

"இதோ விடிவு"

"அப்படியா சங்கதி, எங்கே?"

"சும்மா கிடவுங்கோ. நீங்கள் எதிலும் பச்சைப் பிள்ளைமாதிரி"

நாணத்தால் சிவந்துபோன அவள் முகத்தில் ஒரு விடுதலை ஒளியை அவன் கண்டான். அந்த ஒளிக்குள்ளே அவன் தவிப்புள்ளம் புகுந்து விடிவு கண்டது.

அவள் புடவையை அவன் பார்த்தபோது...

அதிலே செங்குருதி வடு...

"அப்பாடா!"

அவன் மனம் இன்ப சாகரத்தில் சஞ்சரிக்கலாயிற்று.

அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

"அம்மாடி, ஒரு கண்டம் தவறிவிட்டது... இனி, கவனம்"

சுட்டி விரலால் செல்லமாக அவனை உறுக்கினாள் தங்கம். ★

(1954 - தாமரை)

# நிலம் குழிந்த இடங்களில் எல்லாம் குளங்களை வெட்டி நீர்வளம் பெருக்கி மக்கள் மதிப்பைப் பேணிய மன்னன்

மதுரையில் இருந்து அரசாண்ட தமிழ் அரசர்களுள் நெடுஞ்செழியன் என்பவன் ஒருவன். அவன் புலவர்களை ஆதரித்துத் தமிழை வளர்த்துவந்தான். வீரத்திலும் சிறந்து விளங்கினான். தலையாலங்கானம் என்ற இடத்தில் சேர அரசனோடு செய்த போரில் வெற்றிபெற்றான். அதனால் இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனவும் பெயர் வழங்கப்பட்டான். பின் போர்செய்து வெற்றிபெறுவதொன்றையே பொருட்படுத்தி அவ்விடயத்தில் காலத்தை மிகுதியாகக் கழிப்பானாயினான். குடிகளின் நன்மைக்காகத் தான் உழைக்க வேண்டுமே என்பதை மறந்தான் நாடு வளம்பெற்றுக் குடிகள் செல்வம் பெறுவதற்கு அரசனாகிய தானே காரணம் என்பதை எண்ணினானில்லை. அதனாற் குடிகள் வறுமையுற்று வாடினர். அதையறிந்த குடபுலவியனார் என்னும் சிறந்த தமிழ்ப் புலவர் அரசனைக் காணச்சென்றார்; சென்று மன்னனைக் கண்டு அவன் கடமையின்னதென அவனுக்குப் பின்வருமாறு எடுத்துக் கூறினார்:

"உலகம் அனைத்தையும் தம் முயற்சியால் உரிமை ஆக்கிக்கொண்ட பேரரசர் மரபில் வந்தோய், வளம்பொருந்திய மூதூரை உடையவனே, நீ மறுமை இன்பத்தை விரும்பினும், பகைவரை வென்று உன் ஒரு குடைக்கீழ் ஆழ விரும்பினும், புகழை விரும்பினும் அவ் விருப்பத்துக்குத்தக்க செய்கையைக் கேட்பாயாக: உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது நீர். உணவால் உண்டாகி வளரும் உடலுக்கு உணவு முதல்காரணமாதலால், உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவர். பெறத்தக்க பொருளாக அவ்வுணவு கிட்டுவது விளை நிலத்துக்கு நீர் கிடைத்தால் அல்லவா? விளை நிலத்துக்கு நீர் எப்பொழுதும் கிடைக்கச் செய்பவர், யாவர்க்கும் உணவைக் கிடைக்கச் செய்தவராவர். இனிப் பருவத்தே விதைவிதைத்து விட்டு, நீருக்கு

## இலக்கியப் பொழில்

மழையை எதிர்பார்க்கும் நாடு பெருதாயிருப்பினும், பஞ்சத்தால் வருந்தி அரசனது செங்கோலாட்சிக்கும் வெற்றிக்கும் பயன் படாது. ஆதலால் விளை நிலத்துக்கு நீர் எப்பொழுதும் கிடைக்கத்தக்கதாகச் செய்தலை நீ மேற்கொள்ளவேண்டும். அதற்கு, நிலம் குழிந்து பள்ளமாயிருக்கும் இடங்களிலெல்லாம் பெரிய குளங்களை உண்டாக்கி அவற்றின்கண் நீரைத் தேக்கி வைப்பாயாக: அங்ஙனம் செய்யின், நீ நாட்டின் பொருள் வருவாயைக் கூட்டி மக்கள் வறுமையை அகற்றினவனாவாய். இத்தகைய உனது முயற்சியால் உன் நாட்டு மக்களும் செல்வத்தோடு அறிவு பெற்று, அப்பொருளைத் தக்கவழியிற் செலவிட்டு, அறநெறி வழுவாது இன்புறுவர். குடியுயரக் கோனாகிய நீயும் உயர்குவாய்: அதனால், இம்மையில் வெற்றியும் செல்வமும், இன்பமும், ஈகையும் புகழும் உனக்குக் கைகூடும் என்பதை அறிவாயாக. அவ்வழியில் உள்ளஞ் செல்லப் பெறுவாயாக" என்றார்.

இது கேட்ட அரசன் தன் மானங்காத்தல் காரணமாகப் பகைவெல்லுதலிற் சென்ற விருப்பினால் நாட்டின் ஆக்க வேலையில் தான் சோர்வுற்றமைக்கு வருந்தினான். தனக்குப் புத்தி கூறித் தெருட்டிய புலவரை வியந்து போற்றினான். தன் தலைமையிலிருந்த நாட்டின் நீர்வளம் பெருக்கி அதனாற் செல்வம் ஓங்கச் செய்து, குடிகளின் அன்பும் ஆசியும் பெற்று வாழ்ந்தான். குடிகளும் இன்பம்பெருகிக் காலம் கழித்தனர்.

இவ்வாறே ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் தலைமையாக இருந்து கடமையாற்றி வரும் ஒவ்வொருவரும் தத்தங் கடமையை உணரவேண்டும். அறவழியறிந்து முறைதவறாது கடமையாற்ற வேண்டும். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பதற்கு, இயைய தாம் எப்படி ஒழுகுகிறார்களோ, அவ்வாறே தம் கீழ் வேலை செய்பவரும் ஒழுகுவர் என்பதை உணர்ந்து நடப்பாராயின், நாட்டில் சமாதானம் நிலவி யாவரும் இன்பமடைவர் என்பது நிச்சயம்.

எவ்வித ஸ்தாபனங்களிலும் தலைமை வகிப்போருக்கு அமைய வேண்டிய இன்றியமையாத குணங்கள், எதிர்ப்பார் யாருக்கும் அஞ்சாமையும், ஈகையும், அறிவுடைமையும், ஊக்கமுமாம்: விரைந்து வினை செய்யும் வன்மையும் அதற்கேற்ற கல்வியும் ஆண்மை (நிர்வாக சக்தி)யுமாகிய இவையும் வேண்டுவன. அறநெறி நேர்மைகளில் தவறாதவராய், வீரம் குன்றாது பழி பாவங்களுக்கு அஞ்சி, பொருளாதார வாயில்களைப் பெருக்கி பொருளைத் தக்க வழியில் ஈட்டிக் காத்து, நல்வழியிற் செலவழிப்பதற்குரிய ஆற்றல் படைத்தவராதலும் வேண்டப்படும் குணமே. இன்னும், இவ்வாறு நாட்டில் முதலிடம் வகிப்போர் மக்களால் போற்றப்பட வேண்டுமாயின், யாரும் எக்காலத்திலும் சென்று தத்தம் குறைகளை நேரில் தெரிவித்துக் கொள்ளுமாறு எளிதிற் காணுதற்கு உரிய வசதியளித்தல் வேண்டும்.

கடும்சொற் கூறுதலின்றி, இன்சொல்லுடையவனாய், நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்து காக்கவல்ல தலைவனது கட்டளைக்கு அமைந்து வாழ்வார் மக்கள். நீதியும் நேர்மையும் உடையவனாய் ஒழுகுபவனே மக்கள் போற்றற்குரிய தலைவனாவன்.

*'இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த வகுத்தலும் வல்லதரசு'* (குறள்:385)

பொருள் வரும் வழிகளை உண்டாக்கி வைத்தலும் பொருள்களை சேர்த்தலும் சேர்த்தவற்றைப் பாதுகாத்தலும், காத்தவற்றை நல்ல வழிகளிற் பகுத்துச் செலவிடுதலுஞ் செய்ய வல்லவன் தக்க அரசனாவன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J.M.J

# எமது நன்றிகள்



## மணமக்கள்

## ஜெறோம் குணறாஜ் – ஜெனிபா

ஆகியோரின் திருமண வைபவத்திலும் 19.01.2008 சனிக்கிழமை வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்தில் நிறைவேற்றப்பட்ட திருமணத் திருப்பலியிலும் தொடர்ந்து ''கில் றியென்சி'' வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்திலும் 09.02.2008 சனிக்கிழமை (பருத்தித்துறை) தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் இடம்பெற்ற திருமண நன்றித் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது ''சென்மேரி இல்லம்'' தும்பளையில் நடைபெற்ற விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு வாழ்த்துக்களை, அன்பளிப்புகளை வழங்கி மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பித்த அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், பெரியவர்கள்ஆகியோருக்கும் விசேடமாக தும்பளை மரியன்னை ஆலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்த மணற்காட்டுப் பங்குத் தந்தை அருட்திரு.நிருபன் அடிகளாருக்கும் வாழ்த்துப் பத்திரம் வாசித்து வழங்கிய தெல்லிப்பழை ''இந்து இளைஞர் சங்கம்'' - சுன்னாகம், ''குணம் கிறீம் ஹவுஸ்'' ஊழியர்களுக்கும் எமது உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் திருமண வைபவத்தில் கலந்துகொள்ள முடியாதபோதும் வீட்டிற்கு வருகை தந்தும் தொலைபேசியிலும் மற்றும் வேறு வகையிலும் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் வழங்கி சிறப்பித்த உள்ளூர், வெளியூர், உடன்பிறப்புக்கள், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் ஆகிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

மணமக்கள்: ஜெறோம் குணராஜ் - ஜெனிபா

திரு.திருமதி.பே.தேவதிரவியம்
உரிமையாளர்: குணம் கிறீம் ஹவுஸ்
(மயிலிட்டி),
ஆசீர்வாதம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

திரு.திருமதி இ.இராஜநேலம்
ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்
சுங்க இலாக வீதி,
பலப்பிட்டிய,
காலி.

(71354)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி கலாநிதி சுந்தரேசன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கந்தையா இரத்தினம்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(71391)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### விலைமனுக் கோரல்

### புத்தகம் கட்டல்/சீர்திருத்தல்

யாழ்.பல்கலைக்கழக நூலகத்திலுள்ள ஒரு தொகைப் புத்தகங்களைக் கட்டுவதற்கும் சீர்திருத்தம் செய்வதற்கும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களையும் விலைமனு விண்ணப்பப் படிவங்களையும் பல்கலைக்கழக சிறாப்பர் அலுவலகத்தில் ரூபா 500/= செலுத்தி மாசி மாதம் 27, 28, 29ஆம் திகதிகளில் உதவிப்பதிவாளர்/நூலக சேவைகள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட அரக்கிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் *பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்* என்ற முகவரிக்கு 14.03.2008ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது மூலையில் ''புத்தகம் கட்டல்/சீர்திருத்தலுக்கான விலைமனு'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்குப் பரிசீலிக்கப்படும்போது மனுதாரர்கள் பிரசன்னம் தரலாம். பல்கலைக்கழக கொள்வனவு சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.
23.02.2008

(சி/551565)

## தவறிவிட்டது

கந்தையா ஜெகதீஸ்வரன் ஆகிய எனது தே.அ.அட்டை (651441684V) 16.02.2008 அன்று யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

*மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி.*
T.P.: 077 9352423 (71397)

## தவறிவிட்டது

சிறுவிளான், இளவாலை என்னும் முகவரியைச் சேர்ந்த நந்தினி சோதிநாதன் என்பவரது தேசிய அ.அட்டை (818293429V) 21.02.2008 அன்று அம்பனைச் சந்திக்கும் இளவாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவும்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**பொன்னம்பலம் நல்லதம்பி**

எமது பாடசாலையின் சக ஆசிரியர் திரு.ந.குமரசிறி அவர்களின் அன்புத் தந்தை இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் திடீர் மறைவினால் மீளாத் துயரில் இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
யா/ஊரெழு கணேச வித்தி.

(71384)

## ETA சவூதி அரேபியா

### வெளிநாட்டு முகவர்களுடன் மார்ச் முதல்வாரம் நேர்காணல்

| தொழில் வகைகள் |
|---|
| Secretary – MS Office |
| Management Accountant (M.Com) |
| Diploma Engineer (Mechanical) |
| Diploma Engineer(Elec/Electronic) |
| Diploma Engineer (Civil) |
| CAD Operator |
| Generator Technician |
| Boiler, Steam Piping Technician (OIL FIRED, ELEC. TYPE) |
| Medical Gas Technician |
| Kitchen & Laundry Equip. Tech. |
| Chiller&Split AC Compressor Tech |
| Electrician (MV&LV SWITCHGEAR, TRANSFORMERS,MCCS) |
| Electrician (MICROPROCESSOR BOARDS, PIC UNITS) |
| Electrician - MOTORS |
| Mason-மேசன்(கொத்தர்) |
| Carpenter-கார்பெண்டர்(தச்சர்) |
| Plumber–பிளம்பர்(குழாய் வேலையாள்) |

**SLBFE நிர்ணயித்த தொகைக்கு குறையாமல், முன்அனுபவத்திற்கு தகுந்த சம்பளம் பேசி முடிவுசெய்து கொள்ளலாம்**

புதுப்பிக்கத்தக்க 2ஆண்டுகள் ஒப்பந்தம்; வேலை: நாளொன்றிற்கு 8மணிநேரம்; கிழமைக்கு 6நாட்கள்; மேலதிகப்பணிக்கு1.5விகிதம்–உணவு பகிர்வுமுறையில். இருப்பிடம், போக்குவரத்து, வைத்தியவசதி, ஒப்பந்த இறுதியில் நாடு திரும்ப விமானச்சீட்டு என்பன இலவசம்; ஆண்டுக்கு30நாட்கள் விடுமுறை.

## Freyssinet

### சவூதி அரேபியாவில் முன்னணி ஒப்பந்தக்காரர்கள்

வெளிநாட்டு முகவர்களுடன் மார்ச் 2-ம் வாரம் நேர்காணல்

| வெற்றிடம் | [illegible] | உணவு | [illegible] |
|---|---|---|---|
| கம்பி கட்டுநர் STEEL FIXER | 800 | 150 | 30 |
| பெட்டி தச்சர் S.CARPENTER | 800 | 150 | 29 |
| பொது வேலையாள் GENERAL LABORER | 650 | 150 | 29 |

**இலங்கையில் பயிற்சியும் பரீட்சையும், இலவச நாட்டுவிடுதியுடன் ஏற்பாடு செய்து தரலாம்.**

சம்பளம் சவூதி றியாலில்; ஒப்பந்தம்2ஆண்டுகள், பரீட்சார்த்திகம்3மாதங்கள்,வேலை:நாளொன்றிற்கு 8மணிநேரம்;கிழமைக்கு6நாட்கள்;மேலதிகப்பணி 2-6மணிநேரம்;இருப்பிடம்,போக்குவரத்து,வைத்திய வசதி,ஒப்பந்த இறுதியில் நாடு திரும்ப விமானச் சீட்டு என்பன இலவசம்.

*தயவுசெய்து சம்பந்தப்பட்ட எல்லாச் சான்றிதழ்கள்,பாஸ்போர்ட் கொப்பிகள், முழு விபரக்கொத்து என்பன 2செட்கள், மேலும் 6புகைப்படங்களுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும்*

தொலைபேசி 011-4200135/ 077-3058849/ 077-5460969

## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொதிகள் (Parcel) கொழும்பு - யாழ். - கொழும்பு தினசரி விமானமூலமாக உடனடியாக ஏற்றி இறக்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D பெற்று உத்தரவாதத்துடன் ஏற்றி இறக்கப்படும். உங்களுக்குத் தேவையான சகல விமானப் பொருள்கள் கொழும்பிலும் யாழிலும் இருந்து கொள்வனவு செய்து தரப்படும். பூதவுடல்களும் விமானமூலமாக எடுத்துச் செல்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். அவசர தேவைகளுக்காகத் தனிவிமானம்/ஹெலிக்ஹொப்டர் சேவைகள் ஒழுங்குசெய்து தரப்படும்.

### EURO FLIGHT AND CARGO (PVT) LTD

NO.35, STATION ROAD, MOUNTLAVINIA,
TEL.: 011 4542190, 077 3846998 FAX: 011 4542360

NO.11, VIHARA LANE, COLOMBO - 06
TEL.: 0114969116

NO.22, WYMAN ROAD, NALLUR, JAFFNA.
TP/FAX: 021 222 3974, 011 498327

(சி/551529)

## யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

### பதவி வெற்றிடம்

பதவி: **இலிகிதர்/வரவேற்பாளர்**

கல்வித்தகைமை: ஆகக்குறைந்தது க.பொ.த. (சா/த)இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தமிழ், ஆங்கிலம், கணிதம் உட்பட 03 பாடங்களில் விஷேட சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி)

மேலதிக தகைமை: கணனி அறிவு பெற்றிருத்தல் (கணனியை இலகுவில் கையாளக் கூடியவராகவும் தட்டச்சு அனுபவம் உள்ளவராகவும் இருத்தல்வேண்டும்).

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயகையெழுத்தில் அமைந்த விண்ணப்பத்துடன் கல்வித்தகைமைகள், மேலதிக தகைமைகளையும் குறிப்பிட்டு எதிர்வரும் 07.03.2008 வெள்ளிக்கிழமைக்கு முன் எமக்கு கிடைக்குமாறு சாதாரண தபாலில் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: *சான்றிதழ்களையோ பிரதிகளையோ அனுப்புவதைத் தவிர்க்கவும். சிறந்த தகுதியுடையோர் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.*

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
**நிர்வாகச் செயலாளர்,**
யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.
*இல.05, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.*

(71351)

## கண்ணீர் அஞ்சலி

*எமது சங்கத்தின் முன்னாள் நடமாடும் மருத்துவ சேவை வைத்தியர்*

**டாக்டர் பொன்னம்பலம் நல்லதம்பி**



*அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரமடைந்ததுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள், தொண்டர்கள்,
*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை.*

(சி/551563)

## நீங்காத நினைவலைகள் - முதலாம் ஆண்டு

உதிப்பு
25 ✶ 11 ✶ 1944



உதிர்வு
08 ✶ 03 ✶ 2007

### அமரர் சண்முகம் கார்த்திகேசு இலங்காபதி

*(பிரபல வர்த்தகர் - மல்லாகம்)*

அன்பொடு எமையெல்லாம் அரவணைத்தீர்
ஆளாக்கி உயரவைத்து மகிழ்வடைந்தீர்
இன்பமது நிலைக்க முன்பு ஏன் மறைந்தீர்
என் செய்வோம் ஏத்துகின்றோம் அஞ்சலித்தோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

(71364)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிரிக்கெட்டை ஆக்கிரமிக்கும் இந்தியன் பிறிமியர் லீக்கின் பணபலம்!

கிரிக்கெட் ஏலத்தில் இந்தியப் பிறிமியர் லீக் அணிகள் கடுமையாக போட்டியிட்ட தால், நட்சத்திர வீரர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அதிகபட்சமாக இந்திய அணித்தலைவர் டோனியை, சென்னை அணி, 16 கோடி ரூபாவுக்கு வாங்கியுள்ளது. ஆவுஸ்திரேலியாவின் சைமண்ட்ஸ், இலங்கையின் ஜெயசூர்யா ஆகியோரும் நல்ல விலைக்கு ஏலம் போடப்பட்டு, கோடிகளை அள்ளி யது கிரிக்கெட் சபை. இத்தொட




ரில் சச்சின், கங்குலி, டோனி, டிராவிட், பொண்டிங், சைமண்ட்ஸ், மெக்ராத் உள்ளிட்ட பிரபலங்கள் கலந்துகொள்கின்றனர். சச்சின் (மும்பை), கங்குலி (கொல்கத்தா), டிராவிட் (பெங்களூர்) மற்றும் யுவராஜ்சிங் (சண்டிகர்), சேவக் (டில்லி) ஆகிய நட்சத்திர வீரர்களை ஏலத்தின் மூலம் தெரிவு செய்ய முடியாது. இவர்கள், தங்களது சொந்த நக ரைச் சேர்ந்த அணிக்காக மட்டுமே விளையாட முடியும். ஏலத்தில் இடம்பெறாத ஐந்து வீரர் களுக்கும், அவர்களது அணியில் அதிக பணம் கொடுத்து தெரிவு செய்யப்பட்ட வீரர் களைவிட 15 சதவீதம் அதிகமாக சம்பளம் கொடுக்கப்படும்.

ஏலத்தில், ஒவ்வொரு வீரருக்கும் ஏல நேரமாக 6 நிமிடங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஒரு வீரரின் பெயர் அறிவிக்கப்பட்டவுடன், அந்த வீரரை எந்த ஐ.பி.எல்., அணி அதிக விலை கேட்டதோ, அந்த அணியில் அந்த வீரர் தெரிவாகி இடம்பெற்றார். ஏலத்தில் இந்திய அணிக் தலைவர் டோனி அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டார். இவரைச் சென்னை அணி 16 கோடி ரூபாவுக்கு தட்டிச் சென்றது. சென்னை அணியில் ஆஸ்திரேலியாவின் மத்யூ ஹைடன், இந்தியாவின் சுரேஷ் ரெய்னா, நியூசிலாந்தின் பிளெமிங் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

நல்ல நிலையில் இருக்கும் அனுபவ வீரர் ஹைடனை (3 கோடி ரூபா) விட இளம் ரெய்னா (6 கோடி ரூபா) மற்றும் மோர்கல் (6 கோடி ரூபா), (6 கோடி ரூபா)அதிகம் பெற்றிருப்பது ருவெண்ரி - 20 இல் இளம் வீரர்களுக்கு அதிக வரவேற்பிருப்பதை உணர்த்துகிறது. சென்னை அணியில் இலங்கையின் முரளிதரன், ஜோகிந்தர் சர்மா, மோர்கல் போன்றவர்கள் பந்து வீச்சில் அசத்த காத்திருக்கின்றனர்.

இரண்டாவது இடத்தை ஆஸ்திரேலியாவின் சைமண்ட்ஸ் பிடித்துள்ளார். இவரை 13 கோடி ரூபா கொடுத்து ஐதராபாத் அணி தன் வசம் சேர்த்துக் கொண்டது. ஐதராபாத் அணியில் ருவெண்ரி - 20 தொடருக்கு ஏற்ற அதிரடி வீரர்கள் பலர் இருக்கின்றனர். ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட், தென்னாபிரிக்காவின் கிப்ஸ், பாகிஸ்தானின் அப்ரிடி, இந்தியாவின் ரோகித் சர்மா, நியூசிலாந்தின் ஸ்டைரிஸ், இலங்கையின் சாமரசில்வா எனத் துடுப்பாட்ட வரிசை மிரட்டுகிறது. இந்தியாவின் இளம் வீரர் ரோகித் (7 கோடி ரூபா)ஆவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்டை விட (6.8 கோடி ரூபா) 20 இலட்சம் ரூபா அதிக விலைக்கு போயுள்ளார்.

மும்பை அணியை வாங் கியுள்ள ரிலையன்ஸ் நிறு வனம் இலங்கை வீரர் ஜெயசூர்யாவை 13 கோடி ரூபாவுக்கும் ஹர்பஜனை 8.5 கோடி ரூபாவுக்கும் வாங்கியுள்ளது. ஒவ்வொரு அணியும் வீரர்களை 35.5 கோடி ரூபா முதல் 58 கோடி ரூபாவரை மட்டுமே வாங்க வேண்டும். ஆனால், மும்பை அணி ஜெயசூரியா மற்றும் ஹர்பஜன் இருவரையும் 19.5 கோடி ரூபாவுக்கு வாங்கியுள்ளது. இந்த அணியில் இடம் பெற்றிருக்கும் நட்சத்திர வீரர் சச்சினுக்கு



குறைந்தபட்சம் ஜெயசூர்யாவைவிட 15 சதவீதம் அதிகம் கொடுக்க வேண்டும். இதனால், மும்பை இம்மூன்று வீரர்களுக்கு மட்டும் 34 கோடி ரூபாவைச் செலவழித்து விட்டது. இதனால், மற்ற வீரர்களை இவர்கள் எட்டு கோடி ரூபாவுக்குள் தெரிவுசெய்ய வேணடிய சிக்கலான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஜெய்ப்பூர் அணியில் சுழல் மன்னனான ஆஸதரேலியாவின் ஷேன் வோர்ன், தென்னாபிரிக்க அணித தலைவர் ஸ்மித், பாகிஸ்தானின் யூனிஸ், அக் மல் மற்றும் இந்திய வீரர் கைப் இடம் பிடித்துள்ளனர். இந்த அணியில் இடம்பிடித் துள்ள அனைத்து வீரர்களும் குறைந்த பட்ச விலைககே வாங்கப்பட்டுள்ளனர். ஜாம்பவான் வோர்ன் (3 கோடி ரூபா) யூனிஸ் (1.5 கோடி ரூபா) ஏலத்தில் ஏமாற்றமடைந்துள்ளனர்.

டிராவிட் இடம்பிடித்துள்ள பெங்களூர் அணியில் இந்தியாவின் கும்ளே, சகிர், தென்னாபிரிக்காவின் கலிஸ், பவுச்சர் இடம்பிடித்துள்ளனர். மொகாலி அணியில் இந்தியாவின் யுவராஜ சிங், பதான், ஹீசாந்த், ஆஸ்திரேலியாவின் பிரட லீ, இலங்கை அணித் தலைவர் ஜெயவர்த்தன, சங்ககாராவும் இடம்பெற்றுள்ளனர்.

கொல்கொத்தா அணியில் கங்குலியும் ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங், மேற்கிந்தியாவின் கெய்ல், இந்தியாவின் அகார்கர் ஆகியோரும் உள்ளனர்.



அலன் போடர்: தெரிவிக்கையில்,

இந்திய கிரிக்கெட் சபை பண பலம் கவலையைத் தருகிறது. இதன் காரணமாக இந்திய கிரிக்கெட்சபை உலக கிரிக்கெட்டின் மீது ஆதிக்கம் செலுத்தும் அபாயம் இருக்கிறது. இந்தியன் பிரிமியர் லீக் போன்ற அமைப்பு முறை உலக கிரிக் கெட்டுக்கு ஆரோக்கியமானதல்ல. வீரகள் பணத்துக்காக விளையாடுவதைவிட நாடடுக்காக விளையாடுவதே சிறப்பானதாக இருக்கும்.

## கோடிக்கலைக்கீல் ஏலம் போன பிரபல கீரிக்கெட் தலைகள்!!

நட்சத்திர வீரர் சேவக் இருக்கும் டில்லி அணியில் நியூசிலாந்து அணித் தலைவர் வெட்டோரி, பாகிஸ்தான் அணித் தலைவர் சொய்ப் மலிக், முகமது ஆசிப், இந்தியாவின் தினேஷ் கார்த்திக், திவாரி, காம்பிர், இலங்கையின் மக்ரூப், டில்ஷான் ஆகியோர் இருக்கின்றனர்.

இன்னும் பல வீரர்கள் ஏலம் போகவுள்ளதால் கிரிக்கெட் சபை பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாவை அள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

**ஏலத்தில் எகிறிய தலைகளின் விலைகள்**

பிரபல 10 வீரர்கள் ஏலத்திற்குப் போன தொகை குறித்த விபரம் வருமாறு:-

டோனி(இந்தியா) - 16 கோடி ரூபா, சைமண்ட்ஸ்(ஆஸி) - 14 கோடி ரூபா, ஜெயசூர்யா (இலங்கை) - 11 கோடி ரூபா, இஷாந்த் (இந்தியா) -10 கோடி ரூபா, இர்பான் பதான் (இந்தியா) - 9 கோடி ரூபா, கலிஸ் (தெ.ஆ)- 8.8 கோடி ரூபா, பிரட்லீ (ஆஸி) -8.8 கோடி ரூபா, ஆர்.பி.சிங் (இந்தியா) -8.6 கோடி ரூபா, ஹர்பஜன் (இந்தியா) -8.5 கோடி ரூபா, உத்தப்பா (இந்தியா) -8.2 கோடி ரூபா.

**இந்திய கிரிக்கெட் சபையின் பணபலம்**

ஐ.பி.எல் ஏல முறை பல்வேறு விவாதங்களையும், சர்ச்சைகளையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் இதுபற்றி கிரிக்கெட் உலகைச் சேர்ந்த சிலர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஆஸ்திரேலிய அணித்தலைவர் முன்னாள் ஆஸ்திரேலிய வீரர் மார்க்வோ: தெரிவிக்கையில்.

இந்தப் போட்டி லீக்கால் கிரிக்கெட் விளையாட்டுக்கு எந்தப் பலனுமில்லை. இதனால், கிரிக்கெட்டின் தரம் தாழ்ந்து போகும் - என்றார்.

ஆஸ்திரேலிய வீரர் சைமண்ட்ஸ்: தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வீரர்களும் ஏன் இத்தனை விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கின்றனர் என்று புரியவில்லை. அணித்தலைவர் பொண்டிங்கை விட எனக்கு அதிக விலை கொடுக்கப்பட்டது ஏன் என்று தெரியவில்லை.


எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் தொகை அதிர்ச்சியை அளிக்கிறது. எப்படியும் அதனை நான் கேட்கவில்லை . அவர்களாக அளிக்க முன் வந்துள்ளனர். - என்றார்.

ஆஸ்திரேலிய வீரர் பிரட்லீ தெரிவிக்கையில்,

இந்தியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் உலகில் புதிய வரலாறு படைத்துள்ளது. பத்தாண்டுகளுக்குப் பின் இது கிரிக்கெட் உலகின் மைல் கல் என்று தெரியவரும். டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. இந்தக் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட மிகுந்த உற்சாகத்தோடு இருக்கிறேன். எனக்கு அளிக்கப்பட்ட தொகை ஆனந்தத்தைத் தருகிறது - என்றார்.

- டிலான்

## துப்பாக்கி வடிவில் முட்டைப் பொரியல்



ஹொங்கொங்கில் உள்ள நிறுவனம் ஒன்று துப்பாக்கி வடிவத்தில் முட்டை பொரிக்கும் வகையில் புதிய பாத்திரங்களை அறிமுகம் செய்துள்ளது.

உலகம் முழுவதும் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில், துப்பாக்கி வடிவிலான பொருள்களுக்குப் பொதுமக்களிடையே வரவேற்பு அதிகம் கிடைத்து வருவதால் இந்தப் பாத்திரத்தில் தயாரிக்கப் பட்டிருப்பதாக அந்த நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். ஒரேநேரத்தில் நான்கு முட்டை பொரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாத்திரம் உலகம் முழுவதும் நாற்பது நாடுகளில் இந்த ஆண்டு இறுதியில் விற்பனைக்கு வர இருக்கிறது.

## பருத்திவீரன் படத்திற்கு ஜேர்மனியில் விருது

ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச திரைப்படம் விழாவில் தமிழில் வெளிவந்த ''பருத்திவீரன்'' திரைப்படம்சிறந்த கவனத்திற்குரிய இந்தியப் படமாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.


இப்படத்தை இயக்கிய இயக்குநர் அமீருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. அனைத்துலக ரீதியில் 163 படங்கள் இங்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. திரைப்பட வரிசையில் ''பருத்தி வீரன்'' 21 ஆவது இடத்தில் தேர்தெடுக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி எழுத்துமொழியில் வடிவமைக்கப்பட்ட இப்படம் சிறந்த கவனத்திற்கு உரிய இந்தியப் படமாக தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டமை படைப்பாளிக்கு கிடைத்த வெற்றி என இயக்குநர் அமீர் தெரிவித்துள்ளார். உலகில் சிறந்த திரைப் படங்களுக்கு வழங்கப்படும் ''ஒஸ்கார்'' விருது போன்று ஜேர்மனியால் வழங்கப்படும் விருது ''தங்கக்கரடி'' என அழைக்கப்படுகின்றது.



## கல்லறையில் இடம்பிடிக்க அதிர்ஷ்டச் சீட்டு அறிமுகம்

மகிழ்ச்சியானவாழ்க்கை வாழ்வதற்கு அதிர்ஷ்டத்தை நம்பிப் பலரும் அதிஷ்டசீட்டை வாங்குவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இத்தாலியிலோ வித்தியாசமாக கல்லறையில் இடம்பிடிப்பதற்காக அதிஷ்ட சீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



மரானோ என்ற இடத்தில் உள்ள கல்லறையில் இனி உடல்களை புதைப்பதற்கு இடமில்லை என்பதால் புதிய கல்லறை உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கல்லறையில் உடல்களை அடக்கம் செய்வதற்கு வருபவர்களிடம் அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதைத் தடுக்கும் நோக்கத்துடன் அதிஷ்டசீட்டு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதிஷ்டச் சீட்டு விழுந்தவர்களுக்கு கல்லறையில் இடம் கிடைக்கும்.

## எல்லையில் திருமணம்




ஒரே நேரத்தில் பல ஜோடிகள் திருமணம் செய்து கொள்ளும்வரிசையில் மெக்சிகோ-அமெரிக்க எல்லையில் 600 ஜோடிக்ள் திருமணம் செய்து கொண்டிருக்கின்றனர்.

மெக்சிகோ நாட்டில்உள்ள பலர் வேலை வாய்ப்புக்காக அமெரிக்கா செல்கின்றனர். இவர்களில் பலர் சட்ட விரோதமாக அந்நாட்டுக்கு சென்று பணியாற்றி வருகின்றனர்.

இப்படி அமெரிக்காவுக்கு குடியேறியவர்களில் 600 ஜோடிகள் சமீபத்தில் காதலர் தினத்தின்போது மெக்சிகோ-அமெரிக்க எல்லையில் திருமணம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இந்த ஜோடிகள் அனைவருமே அமெரிக்காவுக்கு குடி பெயர்ந்த பிறகு காதல் வயப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருமணம் முடிந்ததும் இந்த ஜோடிகள் மீண்டும் அமெரிக்காவுக்கு சென்றுவிட்டனர்.

## நகப்பூச்சுக்குத் தடை



மலேசியாவில் நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த மாதம் நடைபெற உள்ள நிலையில் அங்குள்ள பெண்கள் நகப்பூச்சு பூசிக் கொள்ள அரசு தடை விதித்துள்ளது.

கள்ள வாக்குப் போடப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மலேசியத் தேர்தல் ஆணையத்தின் செயலர் முகம்மது நூர் கூறியுள்ளார்.

வாக்குப் பதிவு தினத்தன்று பெண்கள் விரல் நகங்களில் நகப்பூச்சுப் பூசி வந்தால் அவர்களது கைவிரல் துண்டிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கள்ள வாக்கைத் தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மலேசிய அரசு கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

## ஞானேஸ்வரி சிதம்பரநாதன்

தோற்றம் 18-11-1934 — மறைவு 25-01-2008

**திதிவெண்பா**

*சார்சர்வ சித்திலே தைபதினொன் றேவெள்ளி*
*சேர்நல் லபரம் சதுர்த்தி நாள் - ஓர் நல்ல*
*ஞானேஸ் வரிசிதம்பர நாதன் விநாயகன்தாள்*
*தானேத்திச் சென்றாள் தனி.*

கோயில் வீதி,
மஞ்சத்தடி, இணுவில்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி/551574)

## வலைபந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு,பெப்.24

வலி. தெற்கு (உடுவில்) பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் 12 கழகங்கள் கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (202-86)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978, மூல நட்சத்திரத்தில் பிறந்த, U.K. இல் பணிபுரியும் மணமகனிற்கு மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடனும் அண்மையில் எடுத்த இரு படங்களுடனும் உடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 3065,
பே/பா உதயன்.
(71405)

## படிவம்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிகாண் (Aptitude) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவர் உண்டு.

Bharathy Pathippakam,
130, K. K. S. Road, Jaffna.

## அறிவித்தல்

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா இம்முறை பங்குனி மாதம் 5ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் பிற்பகல் 4 மணிக்கு ஜெப வழிபாடும் திருப்பலியும் நடைபெற்று, 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணை ஆராதனை பவனியுடன் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்குத் திருப்பலிப் பூசையும் புனிதரின் பவனியும் பங்குத்தந்தை றெக்னோ அடிகளாரின் தலைமையில் நடைபெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

(71408) - நிர்வாகம்.

## உற்பத்தி முகாமையாளர் தேவை

**தகைமைகள்:** விவசாய/விலங்கு விஞ்ஞான சான்றிதழ் அல்லது அதற்கு இணையான/மேற்பட்ட தகைமைச் சான்றிதழுடன் பாலுற்பத்தித் துறையில் ஆகக் குறைந்தது ஒருவருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்/நீண்டகாலம் பால்பொருள் உற்பத்தியில் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**நியமனம்:** ஆரம்பத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு நியமனம் வழங்கப்படும்.

**சம்பளம்:** தகைமைக்கு ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பிணை:** நியமனத்தின்போது ரொக்கப் பிணை செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் தங்களது பூரண சுயவிவரத்துடன் தகைமைச் சான்றிதழ்கள் இணைக்கப்பட்டு 10.03.2008ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பிவைத்தல்வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
*யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),*
*திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.*
(சி/551571)

## கண்ணீர் அஞ்சலி



*எமது பாடசாலையின்*
*பிரதி அதிபர்*
**திருமதி மகேஸ்வரி மகேந்திரா**
*அவர்களது பாசமிகு கணவர்*
**சுப்பிரமணியம் மகேந்திரா**
(சட்டத்தரணி, லண்டன்)
*21.02.2008 அன்று லண்டனில் காலமான செய்தி கேட்டு பெருந்துயரடையும் நாம் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

**பணியாளர் பேரவை,**
*யா/நெல்லியடி ம.ம.வி., கரவெட்டி.*
(சி/551565)


எல்லோருக்குமாக
இருக்கிற உங்களுக்காக



# இருக்கிறம்

ஒரு பொல்லாப்புமில்லை

மாதம் இருமுறை வெளிவரும்

**பல்சுவை இதழ்**

வாசகர்களிடமிருந்து
தரமான
கதைகள், கட்டுரைகள், நகைச்சுவைத் துணுக்குகள், கவிதைகள்
வரவேற்கப்படுகின்றன.
விளம்பரங்களும் ஏற்கப்படும்.

தொடர்புகளுக்கு
ஆசிரியர், இருக்கிறம்

அன்பளிப்பு 3

செப்.15ம், ஒக்.1ம், நவம்.1ம்
பிரதிகளை வாங்கும் வாசகர்கள்
இலவச பிரதிகளாக முதல் மூன்று
(ஜூலை.15ம்,.28ம், ஆகஸ்ட்.15ம்)
பிரதிகளை
பெற்றுக்கொள்ளுங்கள்

யாழில் இருக்கிறம்
பூபாலசிங்கம் யாழ்ப்பாணம், **Book Lab** திருநெல்வேலி, கனகா திருநெல்வேலி, நாயகபாலன் மானிப்பாய், துர்க்கா சுன்னாகம் கனன் போட்டோ பருத்தித்துறை, மொடேண் நெல்லியடி, மணியம்ஸ் சாவகச்சேரி, வானம்பாடி சுழிபுரம்.

**Ego Publishing House (Ptv) Ltd, No.3, Torrington Avenue, Colombo-07.**
**Tel : 060 2150836,. Fax : 011 2585190,. E Mail: irukkiram@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஊடகப் போக்கிரித்தனம்

*''விமானத் தாக்குதலில் யாராவது கொல்லப்பட்டிருந்தால், அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான்.*

*''திட்டவட்டமாக விடுதலைப் புலிகளின் இலக்குகளைத்தான் தாக்குகிறோம். உறுதியான தகவல்களின் அடிப்படையில்தான் அவை மேற்கொள்ளப்படுகின்றன.*

*''எவ்வித ஆதாரமும் இல்லாமல் சில போலியான -மாற்றப்பட்ட-புகைப்படங்களை வெளியிட்டு விமானத் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று காட்ட முனைகிறது விடுதலைப் புலிகள் இயக்கம்.''*

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார இவ்வாறு கூறியிருக்கின்றார்.

பூநகரியில் மூன்று சிறுவர்கள் உட்பட எட்டு அப்பாவிப் பொதுமக்கள் இலங்கை விமானப் படையின் கண்மூடித்தனமான குண்டு வீச்சில் கொல்லப்பட்டமை தொடர்பாக லண்டனிலிருந்து சிங்கள பி.பி.ஸி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் பூநகரியில் விமானப் படை மேற்கொண்ட கொடூரத்தில் எட்டு அப்பாவிகள் பலியாகி பத்துப் பொதுமக்கள் காயமடைந்தமை பற்றிய தகவல்கள் கொழும்பிலிருந்து வெளியாகும் ஊடகங்களில் தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டுமே இடம்பெற்றிருந்தன.

'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனுக்கு விமானக் குண்டு வீச்சில் காலில் காயம்', 'பிரபாவின் நிலைமை மோசம்', 'பிரபாவின் மனைவி வன்னியிலிருந்து புறப்பட்டு தமிழ் நாட்டில் தஞ்சம்' என்றெல்லாம் தகவல்களை எடுத்து செய்தி வெளியிடும் கொழும்பு ஊடகங்களுக்கு -

'நோய் வாய்ப்பட்டு சாவின் விளிம்பில் பிரபாகரன்' என்று தொடங்கி, பிரபாவின் குருதி அழுத்த அளவு இது, குருதியில் வெல்லத்தின் வீதம் இவ்வளவு அவருக்கு இரத்தக் கொதிப்பு, கண்பார்வை மங்கல் என்பது உட்பட நெருங்க முடியாத பிரபாவின் மருத்துவ அறிக்கைகளை ஏதோ பக்கத்தில் தமது மருத்துவரை வைத்து, பரிசோதித்து அறிந்து கொண்ட மாதிரித் தகவல்களை வெளியிடும் கொழும்புப் பத்திரிகைகளுக்கு -

பிரபாகரனின் படுக்கை அறை எங்கிருக்கின்றது, மலசல கூடம், குளியல் அறை, சாப்பாட்டு அறை என்பன எங்கிருக்கின்றன என்பதுவரை சகலதையும் அத்துப்படியாக அறிந்தவை போல வரைபடங்களோடு பாதுகாப்பு இல்லத்தின் விவரங்களை அம்பலப்படுத்துகின்ற மோப்ப சக்தியுள்ள கொழும்பு இதழ்களுக்கு -

பூநகரிக் கொடூரம் தெரியவரவில்லை அல்லது அதனை உறுதிப்படுத்தி, தகவல் பெறமுடியவில்லை.

அப்பாவிகளுக்கு எதிரான இத்தகைய கொடூரங்கள் பற்றிய தகவல்கள் தன்னும் தென்னிலங்கை மக்களுக்கு சென்றடைவதைத் திட்டமிட்டே தடுக்கும் தமது நாசகாரப் பணி மூலம் தென்னிலங்கை அரசை மட்டுமல்ல, தென்னிலங்கை மக்களையே இனப்பாகுபாட்டுக் கொடூரத்துக்கு நெட்டித் தள்ளித் தூண்டுகின்றன கொழும்பு ஊடகங்கள்.

அரச கெடுபிடிகளுக்குப் பயந்து - அல்லது தென்னிலங்கை இனவாதத்தைத் தாமும் வரித்துக் கொண்ட காரணத்தால் - தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாதத்தை மூடி மறைத்து, ஒழிப்பதற்கு துணை போகும் பெரும் வரலாற்றுக் குற்றத்தைத் தென்னிலங்கை ஊடகங்கள் இழைத்து வருகின்றன.

ஆனால் அத்தகைய ஊடகங்களும் அவற்றை வழி நடத்துவோரும் நினைப்பது போல - அல்லது நம்புவது போல - மூடி மறைத்து சப்புக்கட்டுக் கட்டக்கூடிய விடயங்கள் அல்ல இவை.

இராணுவப் பேச்சாளர் வேண்டுமென்றால் அரசிடம் தாம் வாங்கும் சம்பளத்துக்காக முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மூடி மறைக்க முயலலாம். ஆனால் நவீன தொழில்நுட்ப வசதிகளும் நுணுக்கமான தொடர்பாடல் முறைமைகளும் விருத்தி அடைந்துள்ள இக்காலகட்டத்தில் இத்தகைய கொடூரங்களை வாய் ஜாலம் மூலமாகவோ, ஊடக மறைப்பு மூலமோ ஒளித்து விட முயல்வது சூரியனை சாக்குப் போட்டு மூடிமறைத்து ஒளித்துவிட எத்தனிப்பதற்கு ஒப்பானதாகும்.

தென்னிலங்கை ஊடகங்களின் இத்தகைய பக்கச் சார்புப் போக்கு மூலம் அரச பயங்கரவாதம் பற்றிய உண்மைகள் தென்னிலங்கை அப்பாவிச் சிங்களவர்களின் மனதை எட்டாமல் தடுக்கலாம்.

ஆனால், சர்வதேச மட்டத்தில் இத்தகைய விடயங்களைச் சிந்தித்துப் பார்த்து, மதிப்பிட்டு, முடிவுகளைத் தீர்மானிக்கும் தரப்புக்களை இத்தகவல்களும் உண்மைகளும் எட்டாமல் தடுத்து விடவே முடியாது.

எனவே, இவ்விடயங்களைஒட்டி தெற்கு மக்கள் ஏதோ ஓர் உலகில் - கற்பனை எண்ணத்தில் - சஞ்சரித்துக் கொண்டிருக்க உலகம் இவ்விடயம் குறித்துப் புரிந்து கொள்ளும் யதார்த்தமும், கள நிலைமைகளும் வேறாக இருக்கப் போகின்றன.

அதன் விளைவு தென்னிலங்கைக்குத்தான் இறுதியில் பாதகமாக அமையும்.

ஆகவே, விமானக் குண்டுவீச்சுக் கொடூரம் போன்ற மோசமான அரச பயங்கரவாதத்தை மூடி மறைக்கும் முயற்சி மூலம் முழு உலகுக்குமே காதில் பூச்சுற்றலாம் என்று தென்னிலங்கை ஊடகங்கள் கருதினாலும் கூட, உண்மையில் தமது தெற்கு மக்களைத் தவறாக வழி நடத்தி அவர்களின் காதில் பூச்சுற்றும் கைங்காரியத்தையே அவை மேற்கொள்கின்றன.

இத்தகைய அரச பயங்கரவாதச் செயல்களின் ஒட்டுமொத்த விளைவு, கொசோவோ பூகம்பம் போல வெடிக்கும் நிலையை ஒரு நாள் எட்டும்போதுதான், இந்த ஒளிப்பு - மறைப்புகளின் பெறுபேறையும் ஊடகப் போக்கிரித்தனத்தின் விளைவையும் தென்னிலங்கை புரிந்துகொள்ளும் நிலைமை ஏற்படும்.

ஆனால் அவ்வேளையில் தென்னிலங்கை தனது கடைசி பஸ்ஸையும் தவற விட்டுவிட்டு விழி பிதுங்கி நிற்கும். அதுதான் நடக்கப் போகின்றது.

# பூநகரியில் கொல்லப்பட்டவர்கள் புலிகளே பொதுமக்கள் என்பது பொய்யான பிரசாரம்

## இராணுவப் பேச்சாளர் பி.பி.ஸியில் தகவல்

கொழும்பு,பெப். 24

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான பூநகரி கிராஞ்சி மீது நேற்றுக்காலை விமானப்படை விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார பி.பி.ஸிக்குத் தெரிவித்திருக்கிறார்.

விமானக் குண்டுவீச்சில் 3 சிறுவர்கள் உட்பட எட்டுப் பொதுமக்கள் கொல்லப்பட்டும் பத்துப் பொதுமக்கள் காயம் அடைந்தும் உள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக பி.பி.ஸி. கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எப்போது எல்லாம் விமானப்படை, தாக்குதல்களை மேற்கொள்கின்றதோ அப்போது எல்லாம் விடுதலைப் புலிகள் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்ற பிரசாரத்தைத்தான் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுபோன்ற பலவற்றை நாம் பார்த்திருக்கிறோம். எந்தவித ஆதாரமும் இல்லாமல் அவர்கள் சில போலியான மாற்றப்பட்ட புகைப்படங்களைப் பிரசுரித்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று கூறியுள்ளார்கள்.

நாங்கள் எங்கே தாக்குதல்களை நடத்துகின்றோம் என்பது எங்களுக்குத் தெரியும். தரையில் இருந்து கிடைத்த உறுதியான தகவல்களின் அடிப்படையிலும் உளவு விமானத்தின் மூலம் பெறப்பட்ட தகவல் அடிப்படையிலும் மட்டும்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சரியான இலக்குகளைத் தாக்கி அழித்திருப்பதாகவும் விமானிகளும் தெரிவித்திருக்கின்றனர்.

விமானத் தாக்குதலில் யாராவது கொல்லப்பட்டிருந்தால் அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான்.

**கடற்புலிகளின் முகாமுக்கு அருகிலேயே தாக்குதல்**

வைத்தியர்களுக்கு கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளா அல்லது பொதுமக்களா என்று தெரியாது.

நாங்கள் புலிகளின் முகாமைத் தாக்கி அழித்திருக்கிறோம் என்பது எங்களுக்கு உறுதியாகத் தெரியும்.

விமானத்தாக்குதலில் கொல்லப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தால் அவர்கள் விடுதலைப் புலிகள்தான்.

நாங்கள் விமானிகளுக்குக் கொடுத்திருக்கும் பயிற்சி மற்றும் உபயோகப்படுத்தும் தொழில்நுட்பம் அத்தோடு எங்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கடற்புலிகளின் முகாம் அருகே தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தும் படகுகளை வைத்துள்ள தளத்திற்கே தாக்குதல் நடத்தினோம். இத்தளத்திற்கு அருகே புலிகள் பொதுமக்களை வர அனுமதிக்க மாட்டார்கள்.

பொய்ப்பிரசாரத்தின் மூலமாக சர்வதேசத்தின் அனுதாபத்தைப் பெற வேண்டும் என்பதற்காக இவ்வாறான கதைகளை அவர்கள் சொல்லிவருவதைப் பல ஆண்டுகளாக நாம் பார்த்து வருகிறோம்.

தாக்குதல் நடந்த பகுதிக்கு அந்தப் பகுதியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவைக் கூட்டிச் சென்று காட்டியிருக்கவேண்டும். ஏன் அவர்கள் காட்டவில்லை - என்றார்.

(சி)

## முறிந்துபோன அரசியல்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் துரதிருஷ்டவசமாக குறுகிய கால இடைவெளிக்குள் பொது மக்களது அத்தகைய நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள் யாவும் சிதறிச் சின்னாபின்னமாகும் விதத்தில் அரசியல் காய்நகர்த்தல்கள் இடம்பெற நேர்ந்தன. குறிப்பிட்ட அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடப்பட்ட கையொப்பத்தின் பேனாமை காய்வதற்கு முன்னரே-அத்தனை விரைவாக - திடீரென- அதிரடியாக ஐ.தே. கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் 17 பேரை ஐ.தே.கட் சியிலிருந்து வெளியேற வைத்து, அரச தரப்பில் இணையச் செய்வித் ததுடன் அவர்கள் சகலருக்கும் அரசில் அமைச்சர் பதவிகளையும் வழங்கி அரசு தனது அரசி யல் காய்நகர்த் தலைக் கச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டது.

அரசின் அத்தகைய செயற்பாடு காரணமாக நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளான சுதந்திரக் கட்சி மற்றும் ஐ.தே.கட்சி ஆகிய வற்றிற்கிடையே மேற்கொள்ளப்பட்ட அந்தப் பரபரப்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிவடைய நேர்ந்தமை குறித்து சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் வழக்கம் போல் ஒருவரை ஒருவர் குற்றம்சுமத்தி விமர்சிக்க ஆரம்பித்தமை, இலங்கை அரசியல் வரலாற்றில் இன்னமும் கூட அரசியல்வாதிகள் தமது வழமையான அரசியல் பாணியை கைவிடத் தயாராயில்லை என்பதை உணர்த்தி நிற்பதாகக் கருத முடிந்தது.

இத்தகைய விதத்தில் பதவியிலிருக்கும் அரசுக்கும் எதிரணியில் செயற்படும் அரசியல் கட்சிகளுக் குமிடையே குறிப்பிட்ட சில அடிப்படைகளில் உடன்படிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட சம்பவங்கள் இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் நிறையவே இடம் பெற்றதுண்டு. அந்தவகையில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களாக அரசுக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையிலான ஒப்பந்தம் மற்றும் அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான ஒப்பந்தம் என்பனவற்றைக் குறிப்பிட இயலும். அது மட்டுமன்றி ஐ.தே.கட்சிக்கும், சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவுக்குமிடையே மிக அண்மையில் மேற்கொள் ளப்பட்ட ஒப்பந்தத்தில் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் சார்பில் மங்கள சமரவீரவும் கைச்சாத் திட்டமையும் இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டியுள்ளது. *

## நாளை

மாசி - 13 திங்கட்கிழமை
25.02.2008

**திதி : சதுர்த்தி**
பி.ப. 12.21 வரை

**நட்சத்திரம் : சித்திரை**
பி.இ. 1.19 வரை

**சுபநேரம் :** 12.29 - 1.59

இராகுகாலம் : 07.59 - 09.29

# மின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால் ஊடகத்துறை பாதிப்பை எதிர்கொள்ளும்

## எச்சரிக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு,பெப். 24

மின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால் ஊடகங்களின் செலவும் பல மடங்கு அதிகரிக்கும். அத்தோடு ஊடக சுதந்திரத்தை அடக்கி ஒடுக்கும் ஒரு மோசமான நாடாக இலங்கை மாறியுள்ளது என்பதும் நிரூபணமாகும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் ஊடக சுதந்திரம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கே ஊடக சுதந்திரம் ஒடுக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச நாடுகள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன.

'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் வெளிவரும் இக்பால் அத்தாஸின் கட்டுரையை மொழிபெயர்த்து 'லங்காதீப' சிங்கள வாரஇதழில் பிரசுரித்தால் சீருடை அணிந்தவர்கள் அதைப் பிரசுரிக்க விடாமல் தடுக்கின்றனர்.

இவ்வாறு பலதரப்பட்ட தடைகள் ஊடக சுதந்திரத்திற்கு விதிக்கப்படுகின்றன. இவற்றை சர்வதேச நாடுகள் நன்கு உணர்ந்துள்ளன.

அது தவிர, மின் கட்டணத்தை அதிகரிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இதன்மூலம் ஊடகங்களின் செலவு பல மடங்கு அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. - என்றார் (சி)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.24

சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட ஆளுநர் ஆலோசனைக் குழுவின் 2ஆவது கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். பழம் வீதியில் நடைபெறவுள்ளது. (202)

# முத்துக்குளிப்பு இலங்கையில் அற்றுப் போய் விட்டதா?

**ஐரோப்பியர் காலத்தில் பெரும் வருமானத்தை ஈட்டித்தந்த கடற்றொழில்**

1796ஆம் ஆண்டு பெப்ரவரி 26ஆம் திகதி முத்துக்குளித்தல் மூலம் பிரித்தானிய அரசுக்கு 60 ஆயிரம் பவுண் வருமானம் கிடைத்தது.

மிக நீண்ட காலமாக, ஐரோப்பியர் வருகைக்கு முன்னரும் ஐரோப்பியர் காலத்திலும் மன்னாரில் முத்துக்குளிக்கும் தொழில் வெகு சிறப்பாக நடைபெற்று வந்தது. ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் மாந்தை துறைமுகத்திலிருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

இலங்கையை ஆட்சி செய்த போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலானோர் தமது ஆட்சிக் காலத்தில் முத்துக் குளித்தல் மூலம் பெருந்தொகைப் பணத்தை வருவாயாகப் பெற்றனர். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தவர்களும் மன்னாருக்குச் சென்று முத்துக் குளிக்கும் தொழிலில் ஈடுபட்டனர்.

கடலையே கண்ணால் கண்டிராத இளைய தலைமுறையினரே யாழ்ப்பாணத்தில் அதிகம் வாழ்கிறபடியால் முத்தைப் பற்றி விவரிப்பது அவசியம். கடற்கரையில் சிப்பி காணப்படும். இந்தச் சிப்பியிலிருந்தே சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

இந்தச் சிப்பிகள் யாவும் விரிந்த நிலையிலேயே காணப்படும். மூடிய நிலையில் (இரு சிற்பிகள் இணைந்து) காணப்படும் சிப்பிக்குள் சில சமயங்களில் முத்து காணப்படும். நானும் கூட சிறு வயதில் மூடிய நிலையில் காணப்பட்ட சிற்பிகளை ஆர்வத்துடன் எடுத்து கல்லால் குற்றி உடைத்து ஏமாந்திருக்கிறேன். 1796ஆம் ஆண்டு பெப்ரவரி 26ஆம் திகதி பிரிட்டிஷ் அரசுக்கு முதல் தடவையாக முத்துக் குளித்தல் மூலம் 60 ஆயிரம் பவுண் வருமானம் கிடைத்தது. அப்போதைய இலங்கை நாணயப்படி ஆறு லட்சம் ரூபா. அப்போது ஒரு பவுணிண் பெறுமதி (தங்கப்பவுணினதும்) பத்து ரூபா தான்.

ஐரோப்பியரின் வருகைக்கு முன்னரும் ஐரோப்பியரின் காலத்திலும் மிகவும் சிறந்து விளங்கிய முத்துக்குளிக்கும் தொழில் இலங்கை சுதந்திரமடைந்த பின் கைவிடப் பட்டமைக்கான காரணம் தெரியவில்லை. முத்து விளைச்சல் குறைந்து விட்டதா அல்லது அற்றுப்போய்விட்டதா? அல்லது வேறேதேதும் காரணமா?

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகா மீதான தாக்குதல் முயற்சி: தீர்ப்பு மார்ச் 4ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்.24

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இலக்குவைத்து கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்துமத குருவான வேலாயுதம் வரதராஜன் ரகுபதி சர்மா மீதான தீர்ப்பு, கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

சந்தேக நபரான ரகுபதி சர்மா, குண்டுத் தாக்குதல் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் குருகேக்கு வழங்கிய வாக்குமூலம் சுயாதீனமாகப் பெறப்பட்டதா என்பது தொடர்பான தீர்ப்பே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேல் நீதிமன்ற நீதிபதி வராவெவ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கின் மீதான விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அரசுத்தரப்பினரும், எதிராளிகளின் சட்டத்தரணியும் எழுத்மு மூலமான சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

அதன்பின்னர் அந்த வழக்கின் 3ஆம் எதிராளியான ரகுபதி சர்மா மீதான தீர்ப்பு வழங்கப்படவிருந்தது. அப்போது மேல் நீதிமன்ற நீதிபதி வராவெவ தீர்ப்பை வழங்கத் தான் தயாராக இல்லை என்று தெரிவித்தார். இதனால் இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 4ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

(அ-2)

## குண்டு வெடிப்புச் சம்பவம்: சந்தேகத்தில் சிலர் கைது!

கொழும்பு,பெப்.24

கல்கிசை குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிலரை கல்கிசை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கல்கிசை பொலிஸ் இன்ஸ்பெக்டர் மகேஷ் பெரேரா தெரிவித்தார்.

அதி சக்தி வாய்ந்த வெடிமருந்துகளை பயன்படுத்தி இந்தக் குண்டு வெடிக்கச் செய்திருக்கலாம் என்றும் -

குண்டு வெடிப்பு தொடர்பான அரச பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைத்தவுடன் வெடிக்க வைக்கப்பட்ட குண்டு தொடர்பான தகவல்களை கண்டறிய முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1)

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் பிரச்சினை குறித்து அமெரிக்கத் தூதுவர் மேலும் கூறியவையாவது-

இலங்கையில் இரண்டு தசாப்த காலமாகத் தொடர்ந்து வரும் வன்முறைகளுக்கு முடிவு கட்டி அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதில் இந்தியாவுக்கு முக்கிய பங்குண்டு.

அந்த வகையில் இங்கு அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்காக அமெரிக்கா மிக நெருக்கமாக சேர்ந்து உழைக்க உள்ளது.

"இந்தியா பல வழிகளில் இந்நாட்டுப் பிரச்சினைக்கான தீர்வில் தீர்மானமான பங்கை வகித்துள்ளது. அது நன்மை பயக் கும், அனுகூலமான பெரும் பங்களிப்பு என நான் கருதுகிறேன்.

"அவர்கள் எத்தகைய வழியில் பங்களித்தாலும் அது ஆக்கபூர்வமானதாகவே இருக்கும் என்பதே எனது நோக்காகும். இது விடயத்தில் நாங்கள் இந்திய நண்பர்களுடன் மிக நெருக்கமாகச் சேர்ந்து பணி யாற்றுவோம்" என்றார்.

இந்தியாவுக்கு இலங்கையில் நீண்ட வரலாறு உண்டு. அதிகாரப் பகிர்வுக்கான 13ஆவது அரசமைப்புச் சட்டத்திருத் தத்தைக் கொண்டு வந்த சூத்திரதாரிகள் அவர்களே.

இப்போது அந்தத் திருத்தம் பற்றிய மேலும் சில விடயங்கள் குறித்துப் பேசப்பட்டு வருகிறது. - என்றார் அமெரிக்கத் தூதர்.

இலங்கைக்கு ஐ.நா.அமைதிப்படைகளை கொண்டு வருவதாகப் பேச்சடிபடு வது குறித்துக் கேகப்பட்டதற்கு -

இங்கே அமைதியைக் காப்பதற்கு அது இன்னும் உருவாகவில்லையே அது மிகவும் தொலைவில் எய்தப்பட முடியாத ஒரு விடயமாகும்.

இன்றைய நிலையில் எந்தவகையான ஐ.நா. படையேனும் தருவிப்பது சம்பந்தமாக இலங்கை அரசுக்கு அக்கறை இருப்பதாக நான் இதுவரை கேள்விப்பட வில்லை.

அதற்கு மாறாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இங்கு தமது பணியகம் ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை அரசு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது - என்று கூறினார் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக். (அ)

## கல்கிசையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் அலறி அடித்துக்கொண்டு பஸ்ஸிலிருந்து இறங்கி ஓடினர். பயணிகள் இறங்கிய கையோடு பஸ்ஸை சில மீற்றர் தூரம் சாரதி முன்நகர்த்தியுள்ளார். அப்போது பஸ்ஸுக்குள் பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது.

குண்டுவெடிப்பில் பஸ் முற்றாகச் சேதமடைந்தது. சாரதி உட்பட 18 பேர் காயமடைந்தனர். அவர்களில் 18 மாத குழந்தையொன்றும் சிறு காயங்களுக்கு உள்ளானது.

சிறு காயங்களுக்குள்ளானோர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர். நெஞ்சுப்பகுதியில் காயமடைந்த ஒருவர் மட்டும் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலி களே நடத்தினர் என்று அரசும் படைத் தரப்புகளும் குற்றம்சாட்டியுள்ளன. தாக்கு தல் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கென இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

மக்கள் விழிப்போடு இருந்து செயற்பட்டதால் பாரிய உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டிருக்கிறது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

## மணலாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள புலிகளின் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக் கப்பட்டது.

மணலாறுத் தாக்குதல் குறித்து இச் செய்தி எழுதப்படும் வரை விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து தகவல் எதுவும் வெளியாகவில்லை. (அ-2)

## ராஜகிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்ஸில் இருந்தவர்கள் அநாதரவாகக் காணப்பட்ட பொதியால் கிலி கொண்டு இறங்கி ஓடியதால் பதற்றம் ஏற்பட்டது.

குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து பொதியில் சோதனை செய்தனர்.

அந்தப் பொதியில் குண்டு எதுவும் இல்லை என்று அவர்கள் உறுதிசெய்ததை அடுத்து பதற்றம் தணிந்து பஸ் பயணத்தைத் தொடர்ந்தது (அ-1)

## பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய தேவை இருப்பினும் அவற்றில் ஒரு சில நிமிடங்களே கலந்துகொண்டு விட்டு விரைந்து திரும்பிவிடுகிறார்கள்.

இதனால் தனியாரின் நிகழ்வுகளில் மட்டுமன்றி உத்தியோகபூர்வ வைபவங்களில் கலந்துகொள்வதையும் அரசியல்வாதிகள் குறிப்பாக அரச சார்புடையோர் முற்றாகத் தவிர்த்துக் கொள்ளலாம் எனச் சொல்லப்படுகிறது. (அ-1)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையுமா என்பது குறித்து அரச அதிபரிடம் கேள்வி எழுப்பினார். நீதியும் நியாயமுமான தேர்தலை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபர் பதிலளித்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள், குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த விவரங்களையும் அவர் கேட்டறிந்தார்.

பின்னர் கரடியனாறில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களையும் இதுவரை மீளக் குடியமர்த்தப்படாத மக்களையும் சந்தித்து அவர்கள் நிலைமை குறித்து கலந்துரையாடினார்.

இன்று நண்பகல் வரை மட்டக்களப்பில் தங்கியிருக்கும் அவர், ஐ.நா. சார்பு அமைப்புகளின் அதிகாரிகளுடனும் பாதுகாப்பு அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளார். (அ-1)

## ஒட்டிசுட்டானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஒட்டிசுட்டான், மன்னாகண்டல் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை காலை ஸ்ரீலங்கா விமானப்படையின் விமானங்கள் இரண்டு தடவைகள் வந்து நான்கு குண்டுகளை வீசித் தாக்கியதாகவும் இதில் வீதியில் சென்று கொண்டிருந்த இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர் என்றும் வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் முத்தையன்கட்டு 2ஆம் கண்டம், இடதுகரை கனகரத்தின புரத்தை சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான அப்பாத்துரை தனபாலசிங்கம் (வயது 56 ), சுதந்திரபுரம், உடையார்கட்டைச் சேர்ந்த தெய்வேந்திரராசா கோடீஸ்வரன் ஆகியோரே காயமடைந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. (அ-2)


CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
25.02.08 (Mon)
Computerized Accounting
ICT (Grade 10 & 11)
Java Programing
Pascal Programing
Ms Office
Internet & E-Mail

உங்கள் திருமுருகன் கொம் நெற்றில்
சகல விதமான கணணி உதிரிபாகங்களும் குறைந்த விலைகளுடன்........

Flash
1 GB Kingston
2 GB Kingston
4 GB Kingston
1 GB adata
2 GB adata

RAM
256 DDR 1
512 DDR 1
256 DDR 2
512 DDR 2
1 GB DDR 2
256 GB SDR

Hard Disk
80 GB IDE
80 GB Sata
40 GB IDE
160 GB Sata
250 GB Sata

Intel pentium4 3.0Ghz/2m, Asus Motherboard, 512 DDR 2, 80GbHard Disk, Combo Drive, ATX Case with SMPS, 15" CRT Monitor, Keyboard & Optical Mouse.
Free
microlab 2.1 Woofer
2 GB Flash 1800/=
All Type Casing
All types of Computer Repairs
Power Tree UPS

Woofer
microlab 5.1
A4 TECH 5.1
Creative 2.1

VGA Card
Asus AGP 128MB,
GeforcePCI Exp 512MB
PC Express 256MB
AGP 64 MB & 128 MB

Printer
1020 hp Laser Jet
Hp DeskJet
Hp DeskJet - All in One
Epson LQ - 300+II

Warranty 1 & 3 Years With Service
திருமுருகன் கொம் நெற்
250 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல்சிலோன் மின்றிமிட்டர்ஸ் முன்பாக)


## மரண அறிவித்தல்

### செல்வி யோகாம்பிகை செல்லையாப்பிள்ளை

(ஆதினகர்த்தர் - பொலிகண்டி கந்தவன ஆலயம், இளைப்பாறிய சங்கீத ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யோகாம்பிகை செல்லையாப்பிள்ளை நேற்று (23.02.2008) சனிக்கிழமை கந்தனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திக்கம் செல்லையாப்பிள்ளை - இராசமுத்து தம்பதியரின் புத்திரியும் இ.நமசிவாயம் (தலைவர், திருக்கேதீஸ்வரர் ஆலயம்), காலஞ்சென்றவர்களான திருமதி நாகபூஷணி குமாரசாமி, செல்வி செல்லையாப்பிள்ளை பார்வதிஅம்மை(ராஜர்) மற்றும் திருமதி பொன்னம்மை பத்மநாதன்(தேவி - கனடா), காலஞ்சென்ற செ.யோகேந் திரன் மற்றும் திருமதி சிவயோகநாயகி இராமநாதன்(கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பத்மநாதன், கமலாம்பிகை மற்றும் இராமநாதன் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

நவிண்டில், கலாநிதி ச.பாலகுமார்,
கரவெட்டி. (A) சிவயோகநாயகி இராமநாதன் (சகோதரி)


கணனிகள் விற்பனைக்கு
Intel Pentium (Branded) 1.00 $GH_2$ (Tower Model) Samsung Digital Monitor, Ram 128, Hard Disk - 30 GB, V.G.A Card 32 MB, Sound Card, Speaker, Logitech Keyboard, Mouse & Network Card.
23,500/=
கணனி சம்பந்தமான அனைத்துப் பாவனைகளுக்கும் போதுமானது
ஒரு வருட உத்தரவாதம்
STR Computer System
No. 380, Navalar Road, Nallur, Jaffna, Tel:- 021-4590775

Laptop மூலமாக வீடுகளில்வந்து கற்பித்துக்கொடுக்கப்படும்.
Course Details
Dip.In Ms Office-1Month
Dip. In DTP - 1 Month
Certificate Courses
Word,Excel,Access P.point,PageMaker, Photoshop CS3, CorelDraw X3 Internet & E-mail
உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.
Tel:0779672038 (380,Navalar Road, Nallur, Jaffna.)

பரீட்சை வினாத்தாள்
(நாவலர் வெளியீடு)
தரம் 1 முதல் O/L வரை
(சகல பாடங்களும்)
முதலாம் தவணைக்கான வினாத்தாள்
குறிப்பு:- வினாத்தாள் தேவைப்படும் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் மட்டும் 29.02.2008 க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ் நகர்.

YOUR BEST
Mother Boards
Asus Intel 945GC-MX
Intel Original 945GCNL
Foxconn Intel 945GC
MSI Core 2 Duo
AsRock & Mipaq 478
PROCESSORS
Intel Celeron D 3.06
Intel Pentium 4 3.0/2m
Intel Dual Core 3.0/4m
Intel C2D 2.2Ghz/2m
Intel C2D Extr 2.6/4m
Memories
Flash Drives
Monitors CRT/LCD
Viewsonic, Samsung, Intex & LG 15 & 17"
UPS
Abilarix, PowerTree Intex 600VA,650VA, 1KVA & 1.5KVA
Casings LATX
Attractive Models
COMPUTER TABLES
MicroLab, Creative WOOFERS
IBM/HP Branded PC
Printers
Laser Jet
Dot Matrix
InkJet
Scanners
New Genuine Intel PC With New 17" Monitor& UPS Just Below 47500/-
Assembled Systems
Unipro
Intel P4 3.0/2m,
Intel 945 MB
512Mb DDR2
80Gb Sata HDD,
Combo
15" SS/VS Monitor
Keyboard
Mouse
Speaker
UPS
UniCore
Intel C2D 2.2/2m,
Intel 945 MB
1 Gb DDR2
160Gb Sata HDD,
DVD-RW
17" LCD Monitor
Keyboard
Mouse
Speaker
UPS
கணினி வாங்க முன் ஒரு நிமிடம்!! பின்பு கவலைப்பட தேவையில்லை
தரமான உதிரிகள்! குறைந்த விலை! நீடித்த ஆயுள்!
Contact US
UNIT
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org